# கப்பலோட்டிய தமிழன்

## வ. உ. சிதம்பரம் பிள்ளை வரலாறு

ம. பொ. சிவஞான கிராமணியார்

தமிழ்ப் பண்ணை
தியாகராயநகர்—சென்னை

இரண்டாம் பதிப்பு
18-11-46
வ. உ. சி. தினத்தில் வெளியிடப்பெற்றது.

—விலை—

**ரூ. 1-8-0**

598

கபீர் அச்சுக்கூடம்
திருவல்லிக்கேணி
தமிழ்ப் பண்ணை
MS. 384

# நாமக்கல் கவிஞரின் முன்னுரை

'கப்பலோட்டிய தமிழன்' என்று சொன்ன உடனேயே இப்போதுள்ள தமிழ்நாட்டு மக்களுள் பெரும்பாலோர்க்குக் காலஞ்சென்ற உயர்திரு வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களின் நினைவுதான் உதிக்கும்.

தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் தமிழர்களுடைய பழங்காலப் பெருமைகளைப்பற்றி சிந்தனை செய்யக்கூடிய வெகு சிலருக்கு, 'கப்பலோட்டிய தமிழன்' என்று சொல்லும்போது நெடுங்காலத்துக்கு முன்னால் தமிழ்நாட்டு மக்கள் கடலோடும் தொழிலில் கைதேர்ந்தவர்களாக இருந்ததும் அவர்கள் கப்பல் ஓட்டிக் கடல்கடந்து எகிப்து, கிரேக்க தேசம், ரோமாபுரி முதலான அன்னிய நாடுகளில் வாணிபம் செய்து ஆதிக்கம் அடைந்திருந்த சரித்திரச் சிறப்புக்களும் கனவுபோல் நினைவுக்கு வரும். பழங்காலத்தில் தமிழர்கள் கப்பலோட்டிக், கடல்கடந்து, அன்னிய நாடுகளிலிருந்து ஏராளமான செல்வத்தையும் கலையறிவையும் சேகரித்து வந்து தமிழர்களுடைய தனி நாகரிகத்தை வளர்த்திருக்கிறதைப்பற்றித் தனியே ஒரு புத்தகம் எழுதித் தருக்கும் அடையலாம். எனினும் இந்தக் 'கப்பலோட்டிய தமிழன்' கதை அந்தப் பழைய சரித்திரத்தைப் பற்றியதல்ல. ஆனாலும் இங்கே சொல்லப்படுகிற 'கப்பலோட்டிய தமிழ'னுக்கும், தம் முன்னோர்களாகிய பண்டைத் தமிழர்கள் கப்பலோட்டிச் செல்வத்தைப் பெருக்கிக் கலைகளை வளர்த்து நல்லரசு நடத்திய வல்லரசுகளாக வாழ்ந்தார்

கள் என்ற நினைவும், அவருடைய கப்பலோட்டும் முயற்சிகளின் மூலகாரணங்களில் ஒன்றாக இருந்தது என்பதை அவருக்குப் பல காரியங்களிலும் பக்கபலமாக உதவிவந்த காலஞ்சென்ற ஸ்ரீ சுப்ரமண்ய சிவா அவர்கள் என்னிடம் சொன்னது இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது.

சிதம்பரம் பிள்ளையவர்களை நினைக்கும்போதே லோகமான்ய பால கங்காதர திலகர்பிரான், அரவிந்தகோஷ், சுப்ரமண்ய சிவா, சுப்ரமண்ய பாரதி, வ. வெ. சுப்ரமண்ய ஐயர், விபின சந்திர பாலர், லஜபதிராய் முதலான பெரும் பெயர்கள் ஒருங்கே நம் மனதில் ஓடிவரும். இவர்கள் அனைவரும் அரசியல் அபிப்பிராயத்தில் ஒரே இனத்தைச் சேர்ந்து உழைத்தவர்கள். விபின சந்திரபாலர் பிற்காலத்தில் மிதவாதியாக இறந்ததையும் அரவிந்தர் அரசியலைத் துறந்ததையும் இங்கே கருத வேண்டியதில்லை. சிதம்பரம் பிள்ளையவர்களை எங்தெந்தக் காரணங்களுக்காக நாம் போற்றுகின்றோமோ அந்தக் காரணங்களிலெல்லாம் மேற்சொன்னவர்கள் எல்லோரும் ஒரே கொள்கையை மேற்கொண்டிருந்த ஒரு குடும்பம் என்று கூசாமற் சொல்லலாம்.

தமிழ்நாட்டில் தேசீய உணர்ச்சியை ஊட்டி வளர்த்த தந்தை ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை என்பதும்கூட அவருடைய புகழுக்குப் போதாது. பிள்ளையவர்களோடு நான் நெருங்கிப் பழகினவன் அல்லனென்றாலும் அவருடைய உணர்ச்சி உலகத்தில் நான் பலநாள் பழகினவன். காந்தியடிகள் காங்கிரஸ் காரியங்களை மேற்கொள்ளும் வரையிலும் நான் திலகரையே தெய்வம்போற் கொண்டாடினவன். வட நாட்டுக்குத் திலகர் என்றால் தென்னாட்டிற்குச் சிதம்பரம் பிள்ளைதான். 1907-ல் சூரத்தில் நடந்த காங்கிரஸில் அமிதவாதக் கட்சியென்று அப்போது சொல்லப்பட்ட திலகர் கட்சிக்கும் மிதவாதக் கட்சியென்று சொல்

லப்பட்ட பேத்தா—கோகலே கட்சிக்கும் சச்சரவு உண்டாகி, மிதவாதத் தலைவருள் ஒருவரான ஸ்ரீ ராஷ் பிகாரி கோஷ் அவர்களுடைய தலைமைப் பிரசங்கம் நிகழாமலேயே காங்கிரஸ் கூட்டம் குழப்பத்தில் கலைந்து போனதையும், அப்படிக் கலைந்துபோனது திலகர் கட்சிக்கு வெற்றி என்பதையும் அந்த வெற்றிக்குத் திலகருக்குத் துணையாக நின்றவர் நம் சிதம்பரனார் என்பதையும் கொண்டாடிக் கூத்தடித்த இளைஞர்களுள் நானும் ஒருவன். நெருங்கிப் பழக நேரவில்லையென்றாலும் நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் நன்றாக அறிந்து அனுபவித்துக்கொள்ளப் போதுமான சந்தர்ப்பங்கள் இரண்டுமுறை கிடைத்தன.

முதல்முதலில் அவரை நான் காணக் கிடைத்தது சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போன ரயில்வண்டிப் பிரயாணத்தில். காந்தியடிகளின் ஒத்துழையாமைத் தீர்மானத்தை ஆலோசிப்பதற்காக 1919-ல் கல்கத்தாவில் விசேஷ காங்கிரஸ் கூட்டப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் தான் சாத்விகத்தையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டு பள்ளிக்கூடங்களைப் பகிஷ்கரித்தல், பட்டம் பதவிகளைத் துறத்தல், நீதி மன்றங்களுக்குப் போவதை நீக்குதல், சட்டமறுப்பு நடத்துதல், முதலான பல முறைகளைப் படிப்படியாக நடத்துவது என்ற கொள்கையை காங்கிரஸ் மேற்கொண்டது. இந்தத் தீர்மானத்துக்கு வெகு பலமான எதிர்ப்புக்கள் திரண்டன. தீவிரவாதிகள் என்று சொல்லப்பட்ட எல்லோரும் இதற்கு விரோதம். அந்த எதிர்ப்புக்குக் காரணம் பட்டம் பதவிகளை விட்டுவிட வேண்டுமே என்பதோ, சட்டமறுப்புச் செய்து கஷ்டப்பட வேண்டுமே என்பதோ அல்ல. பின் என்னவென்றால் அரசியல் சதுரங்கச் சண்டையில் சத்தியத்தையும் அஹிம்சையையும் கட்டாயமாக்கக்

கூடாது என்பதே. அப்படிச் சத்தியத்தையும் சாத்விகத்தையும் கட்டாயப்படுத்தி மேற்கொள்ளச் செய்தால் நாட்டில் ஆண்மையும் தைரியமும் அருகிப் போய்விடும் என்றே தலைவர்கள் அப்போது நினைத்தார்கள். அன்றியும் போராட்டங்களில்—அது அரசியல் போராட்டமானாலும் சரி அல்லது அன்னியப் போராட்டமானாலும் சரி—'சாம, பேத, தான, தண்டம்' என்று சொல்லப்படுகிற நான்குவித உபாயங்களையும் சமயத்துக்கேற்றபடி உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமேயல்லாமல் வெறும் சத்தியம் சாந்தம் என்ற வைதிக மனப்பான்மை உதவாது என்பது எதிர்ப்பாளர்களுடைய வாதம். சாம, பேத, தான, தண்டம் என்ற சதுர்வித உபாயங்களைப்பற்றிக் கேட்டுக் கேட்டுச் சொல்லிச் சொல்லிப் பரம்பரையாகப் பழகிவிட்ட பலருக்கும் இந்த வாதம் மிகவும் சரியானதாகத் தோன்றினதால் அந்த எதிர்ப்பு மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. இந்த எதிர்ப்பின் பிரதான தலைவர்கள் திலகருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள். ஸ்ரீ திலகர் அப்போது இல்லை. அவர் இறந்து பல மாதங்களாகி விட்டன. திலகர் உயிருடன் இருந்தால் இந்தத் தீர்மானத்துக்கு இடம் கொடுக்கவே மாட்டார் என்பதே இவர்களுடைய நம்பிக்கை. இந்த எதிர்ப்பாளர்களுடைய முன்னணியில் நமது சிதம்பரம் பிள்ளையவர்கள் விளங்கினார். 'எங்கள் மன்னன் திலகர் உயிருடன் இருந்தால் இந்தப் பேடித்தனமான தீர்மானத்தைக் கொண்டுவர இந்தக் காந்தி துணிவாரா?' என்று சிதம்பரம் பிள்ளை கர்ஜித்தார்.

மதிக்கத்தகுந்த காங்கிரஸ் தலைவர்களுள் மிகப் பெரும் பகுதியினரும் இந்தத் தீர்மானத்தை எதிர்த்தார்கள் என்றாலும் தீர்மானம் நிச்சயமாக நிறைவேறிவிடும் என்று எதிர்ப்பாளர்கள் ஏங்கும்படியான நிலைமை இருந்

த்து. எப்படியென்றால் அப்போது நடந்துகொண்டிருந்த 'கிலாபத்' கிளர்ச்சிக்கு காந்தியடிகள் பரிபூரண ஆதரவு காட்டி இந்திய முஸ்லிம்களுடைய அளவுகடந்த அபிமானத்துக்குப் பாத்திரராகி விட்டபடியால் என்றுமில்லாத அளவில் ஏராளமான மகம்மதிய சகோதரர்கள் காங்கிரசில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து அந்த விசேஷ காங்கிரசுக்குப் பிரதிநிதிகளாக வந்தார்கள். இந்துக்களும் மகம்மதியர்களும் ஏகமனத்தாராக அந்தக் கல்கத்தா காங்கிரசில் கலந்திருந்த கண்கொள்ளாக் காட்சியைப் போல இன்னொருதரம் எங்கேயாவது பார்க்கமுடியுமா என்று என் மனம் பலதடவை பதைபதைப்பதுண்டு.

இந்தக் கல்கத்தா விசேஷ காங்கிரசுக்குச் சென்னையிலிருந்து ஏராளமான பிரதிநிதிகள் சென்றார்கள். அந்தக் காங்கிரஸ் கூடுவதற்குப் பல தினங்களுக்கு முன்னுலிருந்தே தினந்தினம் போகிற கல்கத்தா ரயில்வண்டிகளில் பார்வையாளர்களும் பிரதிநிதிகளும் பயணமானார்கள். அந்தச் சாதாரண வண்டிகளில் போனவர்கள் போக அந்தக் காங்கிரசுக்கென்றே இரண்டு தனி வண்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஒன்று. 'காங்கிரஸ் ஸ்பெஷல்', மற்றொன்று 'கிலாபத் ஸ்பெஷல்'. இந்த இரண்டிலும் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் வித்தியாசமில்லாமல் கலந்து சென்றார்கள். 'கிலாபத் ஸ்பெஷல்' வண்டியில் மகம்மதியர்களைக் காட்டிலும் ஹிந்துக்களே அதிகமாக இருந்தார்கள். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் ஏறத்தாழ எல்லோரும் அந்த வண்டியில் தான் இருந்தார்கள். தென்னாட்டுத் திலகரான சிதம்பரம் பிள்ளையவர்களும் அதிலேதான் வந்தார். நாமக்கல்லிலிருந்து ஸ்ரீ நாகராஜ ஐயங்காரும், ஜனுப் பீர்பாட்சா சாஹிபும் நானும் இன்னொருவரும் பிரதிநிதிகளாக நாமக்கல் கிலாபத் கமிட்டியின் ஆதரவில் அனுப்பப்

பட்டோம். நாங்களும் அந்த 'கிலாபத் ஸ்பெஷல்' வண்டியில்தான் பிரயாணம் செய்தோம்.

சென்னையிலிருந்து கல்கத்தா சேருகின்ற வரையில் ரயில் வண்டியிலும் கல்கத்தா சேர்ந்தபின் எங்களுடைய ஜாகையிலும் காங்கிரசில் காந்தியடிகளின் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்ட நிமிஷம் வரையிலும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்கள் ஓயாமல் அந்தத் தீர்மானத்துக்கு விரோதமாக வாக்களிக்க வேண்டுமென்று சென்னை மாகாணப் பிரதிநிதிகள் ஒவ்வொருவரையும் தனித்தனியே வேண்டிக் கொண்டார். ரயில் வண்டித் தொடரிலுள்ள ஒவ்வொரு வண்டியாக 'கம்பார்ட்மெண்ட் கம்பார்ட்மெண்டாக'ச் சென்று ஸ்ரீ பிள்ளையவர்கள் பிரசாரம் செய்தார். ரயில் வண்டிப் பிச்சைக்காரர்களைப்போல் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இறங்கி இறங்கி வெவ்வேறு வண்டிகளில் ஏறிக்கொள்வார். அந்த ரயிலில் பிரயாணம் செய்த பிரதிநிதிகள் ஹிந்து, மகம்மதிய, கிறிஸ்துவ 'எல்லோரும் ஓர் குலம்' 'எல்லோரும் ஓர் இனம்' 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற ஒரே உணர்ச்சியுடன் பிரயாணம் செய்ததால் சாப்பாட்டு நேரம், படுக்கை நேரம் என்று தங்களுடைய 'கம்பார்ட்மெண்ட்'டுக்குப் போகவேண்டுமென்ற அகத்தியம் இல்லாததால் அங்கங்கே உணவருந்தி அங்கங்கே தூங்கி, அங்கங்கே பேசிக்கொண்டே இந்தப் பிரசாரத்தைத் திருப்பித் திருப்பி இடைவிடாது ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை செய்துகொண்டே வந்தார்.

நானிருந்த வண்டிக்கு வந்தார். சிதம்பரம் பிள்ளை மிகவும் இனிமையான சல்லாபி. புதிதாக யாரைச் சந்தித்தாலும் அவர்களுடைய ஊர், பேர், தொழில், குடும்பநிலை முதலான க்ஷேமலாபங்களைப்பற்றிக் கொஞ்சமாவது பேசிவிட்டுத்தான் பிறகு வந்த காரியத்தை வாதிப்பார்.

வாதிப்பதில் மிக்க வல்லவர். பலமான எதிர்வாதம் ஏற்பட்டுக் கடுமையான பதங்களைப் பிரயோகித்து விட்டாலும் கோபங்கொள்ளாமல் முறை தவறிப் பேசாமல் நிதானமாக நியாயங்களை விளக்குவார். நாமக்கல் பிரதிநிதிகளாகிய எங்களுடன் பேசவந்தார். ஒரு நண்பர் எங்களை அவருக்கு அறிமுகம் செய்துவைத்தார். என்னைப் பற்றிச் சொல்லும்போது நான் கவிபாடத் தெரிந்தவன் என்றும் சொல்லப்பட்டது.

நான் திலகர் இறந்து போனதைப்பற்றிப் பாடியிருந்த இரங்கற் பாட்டுக்களின் அச்சடித்த பிரதிகள் எங்களுடன் இருந்தன. திலகரைப் பற்றிய புகழுரை என்றால் சிதம்பரனாருக்குத் தேவாமிர்தம் போன்றது என்பதை அறிந்த ஒரு நண்பர் 'நீங்கள் திலகரைப் பற்றிப் பாடிய சரம கவிகளின் பிரதி இருக்கிறதா?' என்று என்னைக் கேட்டார். நான் பதில் சொல்லி முடிவதற்குள் எங்களுடன் வந்திருந்த வரதராஜ முதலியார் என்ற நாமக்கல் அச்சுக்கூடச் சொந்தக்காரர், (அவர்தான் அந்தப் பாட்டுக்களை அச்சிட்டவர்) எங்கள் மூட்டைகளில் இருந்த அந்த திலகர் சரமகவிகளின் பிரதி ஒன்றைச் சிதம்பரம் பிள்ளையவர்களிடம் கொடுத்தார். அதை வாங்கின பிள்ளையவர்கள் அதிலிருந்து முதல் பாட்டைப் படித்தார். அது :

> இடியது விழுந்ததோதான் இரும்பினைப்
> பழுக்கக்காய்ச்சி இருசெவி நுழைந்ததோதான்
> ........................................
> ........................................
> திடமுள தீரவீரன் திலகனர்
> மாண்டாரென்ற தீயசொல் கேட்டபோது

அதைமட்டும் படித்துவிட்டு ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்

கள் "ஆம், ஆம். உண்மை உண்மை. இடிதான் விழுந்து விட்டது. இடிவிழுந்துதான் நாம் இப்படிக் கதிகலங்கித் தடுமாறுகின்றோம்" என்று ஆரம்பித்து ஒரு நீண்ட பிரசங்கம் செய்துவிட்டு "இந்தப் பாட்டுக்களை நிதானமாகப் படித்துப் பார்க்கிறேன்" என்று அதை மடித்துச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு தாம் வந்த காரியமாகிய காந்தி தீர்மான எதிர்ப்புக்கு எங்கள் ஓட்டுக்களைக் கோரினார். நாமக்கல்லிலிருந்து போன நாங்கள் அத்தனைபேரும் காந்தியின் தீர்மானத்தை ஆதரிக்கவென்றே புறப்பட்டவர்கள். நாங்கள் அப்படிச் செய்வோம் என்று நம்பியும் செய்ய வேண்டுமென்று கோரியுமே கிலாபத் கமிட்டியார் எங்களை அனுப்பியிருந்தார்கள். அப்படியிருக்க நாங்கள் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை எப்படி ஆதரிப்போம். ஸ்ரீ நாகராஜ ஐயங்கார் பேசவேயில்லை. நான் இரண்டொரு சந்தேகங்களை மட்டும் கேட்டுவிட்டு எதிர்வாதம் செய்யாமல் சும்மா இருந்துவிட்டேன். ஸ்ரீ வரதராஜ முதலியார் மட்டும் பிள்ளையவர்களை எதிர்த்து வாதாடினார். கடைசியாக எங்கள் கோஷ்டியிலிருந்து தம்முடைய கட்சிக்கு ஆள் கிடைக்காதென்று அறிந்துகொண்டு அடுத்த ஸ்டேஷனில் சிதம்பரம் பிள்ளையும் அவருடன் பிரசாரத்துக்கு வந்த நண்பர்களும் இறங்கி வேறு வண்டிக்குப் போய்விட்டார்கள்.

ஐந்தாறு ஸ்டேஷன்கள் கடந்து ஒரு பெரிய ஸ்டேஷனில் வண்டி நின்றது. முன் சிதம்பரம் பிள்ளையுடன் எங்கள் கம்பார்ட்மெண்டுக்கு வந்து என் பாட்டுக்களின் பிரதியைப் பிள்ளையவர்களுக்கு வாங்கித் தந்த நண்பர் மீண்டும் வந்தார். 'சிதம்பரம் பிள்ளை உங்களுடன் பேசவேண்டுமென்று விரும்புகிறார் கொஞ்சம் வாருங்கள்' என்றார். அபிப்பிராய பேதம் எப்படியிருந்தாலும் சிதம்பரம் பிள்ளையவர்களிடத்தில் மட்டற்ற மதிப்பு

வைத்திருந்த நான் அந்த அழைப்பை வெகு ஆர்வத்தோடு ஏற்றுக்கொண்டேன். என்றாலும், கூட இருக்கிறவர்கள் என்ன நினைப்பார்களோ என்று சற்றே தயங்கி நண்பர் நாகராஜ ஐயங்காரைத் திரும்பிப் பார்த்தேன். நாகராஜ ஐயங்காரும் சிதம்பரம் பிள்ளையிடத்தில் அளவற்ற அபிமானமுள்ளவர். சிதம்பரம் பிள்ளையவர்கள் 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'யை ஆரம்பித்த விவரங்களையும் அதற்குத் திலகர் செய்த உதவிகளையும் அரசியல் விஷயங்களில் திலகருக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் இருந்த தொடர்புகளையும் ஆரம்பகாலத்தில் எங்களுக்கெல்லாம் அடிக்கடி எடுத்துச் சொன்னவர் நாகராஜ ஐயங்கார்தான். திலக மகரிஷி யிடத்தில் தெய்வபக்தியுள்ளவர் நாகராஜய்யங்கார். அரசாங்கம் அப்போது திலகரிடத்தில் கொண்டிருந்த பயத்தாலும் பகைமையினாலும் திலகரைப் பார்க்கப் போவதுகூட ராஜத்வேஷக் குற்றமாகக் கொள்ளக்கூடிய சமயத்தில் சென்னைக்குத் திலகர் வருகிறார் என்பதை அறிந்தவுடனே என்னிடத்திற் கூடச் சொல்லாமல் சேலம் போவதாகச் சென்னைக்குச் சென்று திரும்பி வந்தபின் 'திலகரை தரிசித்துவிட்டேன்' என்று ஜென்ம சாபல்யம் கிடைத்து விட்டவர்போலச் சொல்லிக்கொண்டவர் நாகராஜ ஐயங்கார்......என்னைச் சிதம்பரம் பிள்ளை அழைப்பதாக அந்த நண்பர் சொன்னதைக் கேட்டு தயக்கத்தோடு திரும்பிப் பார்த்த என்னிடம் 'ஏன் போயிட்டு வாயேன்' என்றார் நாகராஜ ஐயங்கார். நான் எழுந்தேன். "என்ன இதைத் தான் மறுபடியும் சொல்லி உங்கள் ஓட்டைக் கேட்கக் கூப்பிட்டிருப்பார். நீங்கள் வழவழ கொழகொழ என்று பேசினதால் உங்களைச் சுலபமாகத் தம் கட்சியில் சேர்த்து விடலாம் என்று எண்ணி தனியே பேசக் கூப்பிட்டிருக்கிறார். ஏன் இப்படி உள்ளதைச் சொல்ல பயந்து சாகி

றீர்கள். கண்டிப்பாக முடியாது என்று சொல்லி விடுவதற்கென்ன" என்று வரதராஜ முதலியார் குறுக்கிட்டார். உடனே நாகராஜ ஐயங்கார் "அவன் போயிட்டு வரட்டும், முதலியார்! நீங்கள் சும்மா இருங்கள்" என்றூர். முதலியார் சும்மா இருந்துவிட்டார். நான் போனேன்.

அப்போது சிதம்பரம் பிள்ளை இருந்த 'கம்பார்ட்மெண்ட்' ஒரு இரண்டாவது வகுப்பு இடம். அவருடைய சொந்த இடம் அந்த வண்டியில்தானு என்பதும் எனக்குத் தெரியாது. அந்த ரயில்வண்டித் தொடரிலிருந்த எல்லா வண்டியிலும் எல்லா வகுப்பிலும் எல்லா 'கம்பார்ட்மெண்டி'லும் கொஞ்சம் கொஞ்சம் சிதம்பரம் பிள்ளை பிரயாணம் செய்கிறூர் என்பதை அறிந்த நான் அவர் எந்த வகுப்புக்கு டிக்கட் வாங்கியிருந்தார் என்று அறிய முடியவும் இல்லை, அறிய விரும்பவும் இல்லை. அவர் இருந்த அதே கம்பார்ட்மெண்டில் ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், ஜியார்ஜ் ஜோஸப் முதலானவர்களும் இருந்தார்கள். என்னைக் கண்டவுடன் சிதம்பரம் பிள்ளையவர்கள் மிகவும் இனிய முகத்துடன் வெகு பரிவோடு வரவேற்று பக்கத்தில் இடம் தந்து இருக்கச் செய்தார். தாம் ஒரு தலைவன், படிப்பில் பட்டம் பெற்றவன், தேசத்திற்காகக் கடுமையான சிறைவாசம் செய்து அரிய பெரிய தியாகங்களைச் செய்தவன், மற்ற மனிதர்களிடத்தில் இல்லாத பல சிறப்புக்கள் தம்மிடம் உண்டு என்பதான அகந்தை எண்ணங்கள் ஒரு சிறிதும் இல்லாத சிலருள் ஒருவர் சிதம்பரம் பிள்ளை. குழந்தையைப்போலக் குழைந்து பேசி என்னுடன் குலவிஞர். 'ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே' என்றதன் உண்மையை அவரிடத்தில் அப்போது கண்டேன். நெடுநாள்

பழகினவர்போல சிதம்பரம் பிள்ளை என்னுடன் பேசுவதைக்கண்ட ஆச்சாரியார் அதிசயம் அடைந்தவர்போல 'ராமலிங்கம் பிள்ளையை உங்களுக்குத் தெரியுமா?' என்று சிதம்பரம் பிள்ளையைக் கேட்டார். உடனே பிள்ளையவர்கள் 'நன்ருகத் தெரியும். இதோ பாருங்கள்' என்று தம் கையில் இன்னும் விரித்தபடியே வைத்துக் கொண்டிருந்த நான் பாடிய திலகர் சரமகவிகளின் அச்சுத்தாளை ஆச்சாரியாரிடம் நீட்டினுர். அதை வாங்கிப் பார்த்துவிட்டு ஆச்சாரியார் 'ஓ! இதுவா? இது உங்களுக்கு மிகவும் பிடிக்கும்' என்ருர். அந்தப் பாடலின் பிரதியை நானே முன் ஆச்சாரியாருக்கு அனுப்பியிருந்தேன். அவரும் அவற்றை மிகவும் பாராட்டிக் கடிதம் எழுதியிருந்தார். நான் ஏதாவது புதுப் பாட்டுக்களைச் செய்தால் அவற்றை அப்போதைக்கப்போது ஆச்சாரியாருக்கு அனுப்புவதுண்டு. அவர் அதற்குப் பாராட்டுகளை எழுதுவார். அப்படி நாளுகை அவருக்கு அனுப்பத் தவறினுலும் என்னுடைய பாட்டு என்று பத்திரிகைகளில் வெளியான எதையும் விரும்பிப் படித்துத் தாமே எனக்கு விமர்சனம் எழுதுவார். இது எங்களுக்குள் இருந்துவந்த தொடர்பு.

சிதம்பரம் பிள்ளை குலுங்கச் சிரித்துக் குதூகலம் மிஞ்சத் தம்முடைய இயல்பான கலகலத்தப் பேச்சில் கணீர்கணீரென்று சொற்களைக் கொட்டி என் கவிகளைப் புகழ்ந்தார். ஆச்சாரியார் பக்கம் திரும்பி "நானும் திலகரைப்பற்றி இரங்கற் பாட்டுகளைப் பாடினேன். இப்படி அமையவில்லை. உண்மையான கவித்திறம் எல்லோருக்கும் வருவதல்ல" என்று சொன்னபோது என் உடல் மயிர்க்குச் செறிந்து உள்ளம் பூரித்து கூச்சம் உதித்துக் குனிந்துகொண்டேன். என்னிடத்தில் உண்மைக் கவித்திறம் இருப்பதாக நான் எண்ணி எதையும் செய்த

தில்லை. அப்படி எண்ணி இறுமாப்படைந்துவிடக் கூடா தென்பது எனக்குக் கிடைத்த சத்சகவாசங்களினால் என் மனதில் எப்போதும் இருந்துவந்திருக்கிற ஒரு பிரார்த் தனை. என்றாலும் சிதம்பரம் பிள்ளையைப் போன்ற ஒரு சிறந்த தேசபக்தர், தியாகமூர்த்தி திலகர்பிரானுடைய பிரதம சிஷ்யர்களுள் சிறப்புற்ற ஒருவர், அன்னை பாரத தேவியின் விடுதலைக்காக மிகவும் கொடுமைகள் நிறைந்த சிறைவாசம் செய்து அருந்தவமாற்றிய அண்ணல், ஆழ்ந்த தமிழ் ஆராய்ச்சியுள்ள அறிஞர் அப்படி என்னைப் புகழ்ந்து தம் கவிகளைக் காட்டிலும் என் கவிகளில் உண்மைக் கவித்திற மிருப்பதாகச் சொன்னபோது நான் ஆனந்த பரவசம் அடைந்து விட்டது அதிசயம் அல்ல. அப்போது என் வயது முப்பத்துமூன்று, பிள்ளையவர்க ளுடைய வயது நாற்பத்தெட்டு. வயசிலும் கல்வியறி விலும், அனுபவத்திலும், தேச பக்தியிலும் தியாகத்திலும் என்னைக்காட்டிலும் எவ்வளவோ பெரியவரான அவர் தம்முடைய கவியைக்காட்டிலும் என்னுடைய கவி உண்மைக் கவித்திறம் உள்ளது என்று சொன்னது அவருடைய சான்றாண்மைக்கு அறிகுறி என்று இன்றளவும் நான் எண்ணியெண்ணி இன்புற்று வருகிறேன். 'சால்புக்குக் கட்டளை யாதெனின் தோல்வி துலையல்லார்கண்ணும் கொளல்' என்ற தெய்வத் திரு வாக்கின் உண்மையை அப்போது அவரிடம் கண்டேன். அதுவரையிலும் வெறும் தேசபக்திக்காகவும் தியாகத்துக் காகவும் மட்டும் அவரிடத்தில் எனக்கு இருந்துவந்த நன்மதிப்பு அந்த நிமிஷம் முதல் அதிகப்படலாயிற்று. என்னைப் புகழ்ந்து விட்டார் என்பதற்காக அல்ல. தம்மைக் குறைத்துக்கொண்டார் என்பதற்காகவே. என் கவியைமட்டும் புகழ்ந்துபேசி அத்துடன் விட்டிருக்கலாம். அது சாதாரணமாக மற்றவர்கள் செய்திருப்பார்கள்.

ஆனால் சிதம்பரனார் தம்முடைய கள்ளமற்ற உள்ளத்தின் பெருமையினால் தம்மைக் குறைத்தும் என்னைப் புகழ்ந்தும் பேசினார். தன்னலமற்ற பெரியவர்களின் தன்மைக்கு அது ஒரு சாட்சி.

பிறகு வெகுநேரம் அவரும் ஆச்சாரியாரும் கவித்துவத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆச்சாரியார் அப்போது என்னைப்பற்றியும் ஸ்ரீ சுப்ரமண்ய பாரதியாரைப் பற்றியும் பிள்ளையவர்களுடன் பேசினார் என்பதை என் காதில் விழுந்த இரண்டொரு வார்த்தைகளால் அனுமானித்தேன். அவர்கள் பேசிக்கொண்டதின் பெரும் பகுதியும் என் காதுக்கு எட்டவில்லை. கடைசியாக உரத்த குரலில் சிதம்பரம் பிள்ளையவர்கள் 'அந்த மன்னன் பாரதியை நினைத்தால்' என்று சொன்னது மட்டும் என் நினைவில் இன்றும் நிற்கிறது. அதன் தொடர்ச்சியாகக் குறைந்த குரலில் அவர் என்ன சொன்னாரோ அவை என் செவிட்டுக் காதுக்குச் சிக்கவில்லை. ஆனால் ஆச்சாரியாருடன் பேசும்போது சிதம்பரம் பிள்ளையவர்கள் அடிக்கடி என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்ததனால் அவர்களுடைய பேச்சு என்னையும் பற்றியதாகத்தான் இருக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டேன்.

இந்தப் பேச்சு முடிந்தும் முடியாமலும் இருக்கும்போது, டாக்டர் ராஜன் முதலானவர்கள் உட்கார்ந்திருந்த எதிர் வரிசையிலிருந்து அவர்களுக்குள் ஒருவர் தம் கையில் வைத்திருந்த ஏதோ அரசியல் சம்பந்தமான ஒரு காகிதத்தைப் பார்க்க ஆச்சாரியாரை அழைத்ததனால் ஆச்சாரியாரும் மற்றவர்களும் அதிலே கவனம் செலுத்தலானார்கள்.

சிதம்பரம் பிள்ளை என்பக்கம் திரும்பி உட்கார்ந்தார். "உங்கள் பாட்டு மிகவும் நன்றாக இருக்கிறது. உணர்ச்சி

வேகம் பொங்கி வருகின்றது. அதைப் படித்துப் பரவச மடைந்தேன். அதைச் சொல்லத்தான் உங்களை அழைத்தேன்" என்றார். உண்மையும் அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று அறிந்தேன்.

ஆனாலும் தனியே பேசச் சந்தர்ப்பம் கிடைத்ததை நழுவ விடக்கூடாது என்று நினைத்தோ என்னவோ சற்றே தயக்கத்துடன் தம்முடைய காந்தித் தீர்மான எதிர்ப்புப் பிரசாரத்தை ஆரம்பித்து, சில நிமிஷங்கள் அந்தத் தீர்மானத்தினால் வரக்கூடிய தீமைகளைத் தெளிவாகச் சொல்லிவிட்டு, திலகர் அந்த சமயத்தில் இல்லாமற் போனதையும் நினைப்பூட்டி என் அபிப்பிராயத்தை அறிய விரும்பினார். நான் அவர் சொன்னதை யெல்லாம் வெகு அனுதாபத்தோடு தலையை அசைத்துக் கேட்டுக்கொண்டு பதிலே பேசாமல் இருந்தேன். அவருடைய வாதத்திலுள்ள குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டி எதிர்வாதம் செய்ய எத்தனையோ விஷயங்கள் என் மனதில் எழுந்தன. ஆனாலும் அவருடன் எதிர்த்துப் பேசி வாதாடமட்டும் தைரியம் வரவில்லை. அவருடைய வாதங்கள் மிகவும் திறமை வாய்ந்தவை. எதிரியை எளிதில் மடக்கிவிடக் கூடிய ஆற்றல் அவரிடம் அதிகம் இருந்ததை அறிந்தேன். அவர் சொன்ன சில ஆணித்தரமான காரணங்கள் மறுக்க முடியாதனவென்றே அப்போது என் மனதில் பட்டது. திலகர் உயிருடன் இருந்தால் இந்த திட்டத்திற்கு உடன் படுவாரா என்பது எனக்கும் ஒரு சந்தேகமாகத்தான் இருந்தது. திலகரின் மீது எனக்கிருந்த பக்தி எள்ளளவும் அப்போது குறைந்துவிடவில்லை. இருந்தாலும் வெறும் கண்மூடித்தனமாகத்தானே என் உள்ளத்தை முற்றிலும் காந்தியிடம் பறிகொடுத்து விட்டவனாக இருந்தேன். காந்தியவர்களிடத்தில் எனக்கிருந்த அபார நம்பிக்கையால், காந்தீயத்தால் இந்த நாட்டிற்கு மிகவும் தீமை விளையும்

என்பதை விடாப்பிடியாகப் பேசி ஓய்வு ஒழிச்சலில்லாமல் பிரசாரம் செய்துவந்த சிதம்பரம் பிள்ளையிடம் என்னுடைய காந்தி பக்தியைச் சொல்லிக்கொண்டு அவருடைய அதிருப்திக்கு ஆளாக என் மனம் துணிய வில்லை. காந்தியடிகளிடத்தில் எனக்கு ஏற்பட்டுவிட்ட அளவற்ற நம்பிக்கையும், திலகரிடத்தில் எனக்கிருந்த தெய்வீக பக்தியும், சிதம்பரம் பிள்ளையவர்களிடத்தில் எனக்கிருந்த நன்மதிப்பும் அத்துடன் அவர் தம் கவிகளைக் குறைத்து என் கவிகளைப் புகழ்ந்துவிட்ட புதுப் பூரிப்பும் எல்லாம் சேர்ந்து ஒன்றேடொன்று பின்னிப் பிணங்கி அருட்டி மருட்டி என்னைக் குழப்பிவிட்டன. சிதம்பரம் பிள்ளையோ அடுத்தடுத்து என் அபிப்பிராயம் என்ன வென்று கேட்டுக்கொண்டே இருந்தார். தட்டிப் பேசவோ தைரியம் இல்லை. ஒத்துப்போகவோ உள்ளம் உடன்படவில்லை. திண்டாடித் திணறிப் போனேன்.

கடைசியாக அவரிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு சூழ்ச்சி செய்தேன். அது சூழ்ச்சிதான். ஆனால் அதில் பொய்யோ பித்தலாட்டமோ இல்லை. அதில் என் உள்ளக் கருத்தை உள்ளபடி சொல்லிவிடத் துணிவில்லாமற் போன குற்றம் இருந்தாலும் அதில் மனச்சாட்சி வருந்தக் கூடிய பாபம் ஒன்றுமில்லையென்று கண்டு அதை உபயோகப்படுத்திக் கொண்டேன்.

அவருடைய விவாதங்களைக் கேட்டுக்கொண்டே அவருக்கு என்ன விடையளிப்பது, எப்படி விடுபடுவது என்பதைப் பற்றி எண்ணிக்கொண்டு மௌனமாக இருந்த என்னைப் பார்த்து,

"என்னுடைய ஆர்கியுமெண்ட்களுக்கு உங்கள் உடன்பாடில்லையா?" என்ருர்.

அதற்கும் நான் பேசாமலிருந்தேன். என்னைச் சும்மா விட்டுவிடும்படி அவருடைய இரக்கத்தை வேண்டுகின்ற

வன்போல் அவரைப் பார்த்தேன். அந்த விண்ணப்பப் பார்வை வெற்றி பெற்றதைப்போல் அவர்,

"நான் சொல்லுவது உங்களுக்கு விருப்பமில்லை யானால் கூசாமல் சொல்லுங்கள். உங்களைக் கசக்க வேண்டுமென்று நான் கருதவில்லை" என்றார்.

"தாங்கள் சொல்லுவதெல்லாம் சரியா அல்லவா என்று நான் தீர்ப்புச் சொல்வது சரியல்ல. ஆனால் நான் காந்தியாருடைய தீர்மானத்தை ஆதரிப்பதாக வாக்களித்து விட்டேன்" என்றேன்.

"வாக்களித்து விட்டீரா! யாருக்கு? இப்படிப் பட்ட விஷயங்களில் எந்த நிமிஷத்திலும் நம்முடைய அபிப்பிராயங்கள் மாறலாம். அப்படி மாற்றிக்கொண்டு சமயத்துக் கேற்றபடி ஓட் செய்யும் தீர்ப்பு நம் உரிமை யல்லவா?" என்பனபோன்ற பல விஷயங்களைச் சொல்லி என் வாக்குறுதிகளை நான் மீறிவிடுவது அரசியல் விஷயங் களில் அதர்மம் ஆகாது என்று ஆலோசனை சொல்வது போல் பேசினார்.

"நானும் ஸ்ரீ நாகராஜய்யங்காரும் இன்னும் இரண்டு முஸ்லிம் சகோதரர்களும் நாமக்கல் பிரதிநிதிகளாக அங்குள்ள 'கிலாபத்' கமிட்டியின் சார்பாகத் தேர்ந் தெடுத்து அனுப்பப்பட்டிருக்கிறோம். காந்தியின் தீர்மா னத்துக்கு ஆதரவளிக்க வேண்டுமென்றே எங்களை முற்றிலும் நம்பி அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். அந்த நம்பிக்கைக்கு விரோதமாக எதையும் செய்வது துரோகம் ஆகுமே என்றுதான் அஞ்சுகிறேன்" என்றேன்.

இதைச் சொன்ன உடனே சிதம்பரம் பிள்ளை கலகல வென்று சிரித்து என் கையைப் பிடித்துக் குலுக்கி

"சபாஷ் புலவரே, உங்கள் உண்மைத் தன்மையை நான் மிகவும் மெச்சுகின்றேன். மனமார வாழ்த்து கிறேன். நீங்கள் உங்களை அனுப்பினவர்களுடைய

நம்பிக்கைக்கு துரோகம் செய்யக்கூடாதென்று நினைப்பது மிகவும் உயர்வான நோக்கம். அப்படியே செய்யுங்கள். அதுதான் சரி. நான் உங்களைத் தொந்தரவு செய்யக் கூடாது" என்று அந்த பேச்சை முடித்துவிட்டார். நான் என் சங்கடங்களிலிருந்து விடுதலை யடைந்து சந்தோஷம் அடைந்தேன்.

இந்த நிகழ்ச்சி ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையாகிய இந்தக் கப்பலோட்டிய தமிழனுடைய நேர்மைக்குணத்தின் சிறப்பை என் நினைவில் பதிய வைத்தது. (மேலே சொன்ன சம்பாஷணையில் அடங்கியுள்ள கருத்துகள் அத்தனையும் உண்மை. ஆனால் இருபத்தாறு ஆண்டு களுக்கு முன்னால் நடந்த இந்தப் பேச்சுகளில் நாங்கள் பிரயோகித்த பதங்கள் இவை தானா என்று சொல்ல முடியாது)

அடுத்த ஸ்டேஷனில் நான் சிதம்பரம் பிள்ளை இருந்த வண்டியை விட்டிறங்கி எங்கள் இருப்பிடத் துக்கு வந்தேன். நடந்ததை யெல்லாம் நாகராஜ ஐயங் காரிடம் சொல்லி சிதம்பரம் பிள்ளை, திலகர் உயிருடன் இருந்தால் இந்தத் தீர்மானத்துக்கு இடம் கொடுக்க மாட்டார் என்று விவாதித்த விவரங்களையும் சொன் னேன். அதற்கு நாகராஜ ஐயங்கார் சிதம்பரம் பிள்ளை சொன்ன விஷயங்களுக்கெல்லாம் மறுப்புச் சொல்லி திலகர் இருந்தால் கட்டாயம் காந்தியை ஆதரிப்பாரே யல்லாமல் எதிர்க்கமாட்டார் என்று கண்டிப்பாகச் சொன்னார். திலகரைப்பற்றி எனக்கிருந்த சந்தேகமும் தெளிந்து விட்டதுபோல நிம்மதியடைந்தேன்.

கப்பலோட்டிய தமிழனை சந்தித்துப் பேசின சம்பவத் தால் அவருடைய கல்வித்திறமையையும், வாதிப்பதில் அவருக்கிருந்த வல்லமையையும், சமத்துவ எண்ணத்தை யும், சரச சல்லாப குணத்தையும், நேர்மையைப் பாராட்

டும் நெறியையும் நான் நேராக அறிந்து கொள்ள நேரிட்டது.

அதே ரயில் வண்டிப் பிரயாணத்தில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய திடசித்தத்தையும் போர்க்குணத்தையும் தெரிந்துகொள்ளவும் ஒரு நிகழ்ச்சி நேர்ந்தது.

நாங்கள் பிரயாணம் செய்த 'கிலாபத் ஸ்பெஷல்' வண்டி சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து, வழக்கமாக தினந்தினம் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போகிற 'கல்கத்தா மெயில்' வண்டி புறப்படுவதற்கு ஆறு மணி நேரத்துக்கு முன்னுல் புறப்பட்ட வண்டி. மெயில் வண்டியைப்போல் அல்லாமல் அநேக சிறிய ஸ்டேஷன்களிலும் நின்று அங்கங்கே காத்திருந்த காங்கிரஸ் கிலாபத் பிரதிநிதிகளையும் ஏற்றிக்கொண்டு போக வேண்டியிருந்ததால் மெயில் வண்டியை விட அதிக நேரம் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. இரண்டு இரவும் கிட்டத்தட்ட இரண்டு பகலும் ஓடி மூன்ருவது நாள் காலை பத்து மணிக்கு கல்கத்தா சேரும்படியாக 'ஷெடியூல்' செய்யப்பட்டது.

கல்கத்தாவுக்கு முன்னுல் கரக்பூர் என்ற பெரிய ஸ்டேஷனில் எங்கள் 'ஸ்பெஷல்' நின்றது. நின்றது நின்றதுதான். சுமார் மூன்று மணி நேரத்துக்கு மேல் அங்கே நிற்கப் போட்டு விட்டார்கள். ஏன் இவ்வளவு நேரம் இங்கே நிறுத்தி விட்டார்கள் என்ற பரபரப்பு எங்களுக்குள் உண்டாயிற்று சில தீவிர வாதிகள் ஏன் இப்படிக் காக்கப் போட்டு விட்டார்கள் என்று 'கார்டு' துரையைக் கேட்டார்கள். அவர் 'ஸ்டேஷன் மாஸ்டரை'க் கேட்கச் சொன்ஞர். 'ஸ்டேஷன் மாஸ்டரை'க் கேட்டார்கள். அவர் கல்கத்தாமெயில் வண்டி பின்னுல் வந்துகொண்டிருப்பதாகவும் அந்த மெயில் இந்த ஸ்டேஷனுக்கு

வந்து எங்கள் ஸ்பெஷலுக்கு முன்னால் புறப்படும் என்றும் அது புறப்பட்டுப் போனபின் அரைமணி நேரத்துக்கு அப்புறம்தான் எங்கள் வண்டி புறப்படும் என்றும் சொன்னார். இதைக் கேட்ட தீவிர தேச பக்தர்களுக்கு கோபம் வந்து விட்டது. 'என்ன! அந்த மெயில் வண்டிக்கு ஆறு மணி நேரத்துக்கு முன்னால் புறப்பட்ட எங்களை அனாவசியமாக இங்கே மூன்று மணிக்குமேல் காக்கப்போட்டு, எங்கள் வண்டிக்கு முன்னால் மெயிலைப் போக விடுவதென்றால் இதைவிட எங்களுக்கு அவமதிப்பு இன்னும் என்ன இருக்கிறது' என்று அந்த ஸ்டேஷன் மாஸ்டரோடு ரகளை செய்ய ஆரம்பித்தார்கள். இந்தக் கூச்சல் 'கப்பலோட்டிய தமிழன்' காதில் விழுந்தது. அவர் வண்டியை விட்டு இறங்கி வெகு வேகமாக ஓடி விசாரித்தார். விஷயத்தை அறிந்த உடன் ஸ்டேஷன் மாஸ்டரோடு சண்டை போட்ட கட்சிக்குத் தாமே தலைவராகி விட்டார். மற்றவர்களை யெல்லாம் கையமர்த்திவிட்டு சிதம்பரம் பிள்ளையே அந்த வழக்கை வாதித்து 'எங்கள் வண்டிக்கு முன்னால் மெயில் வண்டியைப் போக விட மாட்டோம். எங்கள் வண்டிக்கு அரை மணி நேரத்துக்குப் பின்னால்தான் மெயிலை விட வேண்டும். எங்கே! அந்த மெயில் வண்டி. எங்களுக்கு முன்னால் எப்படிப் போய் விடும் என்பதைப் பார்த்து விடுகிறோம்' என்று சவால் விடுத்தார்.

அதற்கு அந்த 'ஸ்டேஷன் மாஸ்டர்' 'அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் என்ன செய்வேன். எனக்குக் கிடைத்துள்ள உத்தரவுப்படிக்குத்தான் நான் என் கடமையைச் செய்ய வேண்டும். மெயில் வண்டி முன்னால் போக வேண்டுமென்று உத்தரவு செய்தது நானல்ல' என்றார். அதற்குச் சிதம்பரம் பிள்ளை 'மெயில் வண்டி முன்னாலோ போகட்டும் பின்னாலோ போகட்டும். அதைப்பற்றி

அக்கரையில்லே. எங்களே எதற்காக இங்கே அனுவசியமாக மூன்று மணி நேரத்துக்கு மேல் காக்கப் போட்டீர்கள்? இந்த மூன்று மணி நேரமும் வண்டி ஓடியிருந்தால் இன்னேரம் நாங்கள் கல்கத்தா போய்ச் சேர்ந்திருப்போம் அல்லவா?' என்ருர்.

அதற்கு ஸ்டேஷன் மாஸ்டர் 'ஆம். இது சரியான கேள்விதான். ஆனுல் உங்கள் வண்டியை இங்கே மூன்று மணி நேரம் காக்கப்போட வேண்டுமென்பது ஏற்பாடல்ல அது எதிர்பாராமல் ஏற்பட்டுவிட்டது. இந்த ஸ்டேஷனில்தான் மெயில்வண்டி உங்கள் வண்டியைத் தாண்டி முன்னுல் போகவேண்டும் என்பது 'டிராபிக் மானேஜருடைய உத்தரவு.' மெயில் வண்டி இன்றைக்கு சுமார் மூன்று மணி நேரம் 'லேட்' அதனுல் இந்த சங்கடம் ஏற்பட்டுவிட்டது என்ன செய்யலாம்' என்ருர்.

'என்ன செய்யலாம். எங்கள் வண்டியை உடனே விடலாம். மூன்று மணி நேரம் 'லேட்' ஆன மெயில் வண்டி இன்னும் கொஞ்சம் லேட் ஆகிவிட்டால் என்ன முழுகிப் போகும்? எங்கள் வண்டியைவிடச் சொல்லுங்கள்' என்று கப்பலோட்டிய தமிழன் கர்ஜித்தார்.

'அப்படிச் செய்ய எனக்கு அதிகாரமில்லே' என்ருர் ஸ்டேஷன் மாஸ்டர்.

'அப்படிச்செய்ய உங்களுக்கு அதிகாரம் இல்லேயென்ருல் எப்படிச் செய்வது சரியென்று எங்கள் அதிகாரத்தைக் காட்டுகிரும்' என்று சொல்லிக்கொண்டே சிதம்பரனுர் வண்டியை நோக்கி வந்தார். இதற்குள் வண்டியில் இருந்த எல்லா இளேஞர்களும் இறங்கி வந்து சிதம்பரம் பிள்ளேயைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களேப் பார்த்து சிதம்பரம் பிள்ளே ஒரு சிறு பிரசங்கம் செய்து 'சரி அந்த மெயில் வண்டி நம்முடைய வண்டிக்கு முன்னுல் போகக்கூடாதென்று நாமெல்லாரும் மெயிலுக்கு

முன்னால் தண்டவாளத்தில் உட்கார்ந்து கொண்டு சண்டித்தனம் செய்வோம். மெயில் எப்படி முன்னால் போய் விடும் பார்ப்போம்' என்றார். (அப்போது சண்டித்தனம் என்ற பதம்தான். 'சத்யாக்ரகம்' என்ற சொல் அப்போது வழக்கத்துக்கு வரவில்லை) உடனே சிதம்பரம் பிள்ளையினுடைய கட்சிக்கு ஏராளமான ஆள்கள் சேர்ந்துவிட்டார். எனக்குத் தெரிந்த யாரார் அதில் சேர்ந்தார்கள் யாரார் சேரவில்லை என்பது இப்போது என் நினைவில் இல்லை. ஆனால் ராஜகோபாலாச்சாரியாரும் அவருடன் சேர்ந்த ஒரு சிறு கோஷ்டியும் அப்படிச் செய்வது சரியல்லவென்று சிதம்பரம் பிள்ளைக்கு மாறு பட்டார்கள் என்பதை நான் இன்னும் மறக்கவில்லை. எனது நண்பர் நாகராஜ ஐயங்கார் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் நடந்துகொண்டிருந்த அத்தனை பரபரப்பிலும் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. ஸ்டேஷன் மாஸ்டருக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் நடந்த வாக்கு வாதத்துக்கு முன்னாலிருந்தே இந்த விவகாரம் ஆரம்பமானதிலிருந்து அதன் முன்னேற்றத்தையும் முடிவையும் அறிந்து கொள்ள வெகு ஆசைப்பட்ட நான் அடிக்கடி வண்டியை விட்டு இறங்குவதும் மீண்டும் வந்து அதில் ஏறி வண்டியைவிட்டு இறங்காமலிருந்த நாகராஜய்யங்காருக்கு நடக்கிற விவாதங்களின் விவரங்களைச் சொல்லுவதுமாக இருந்தேன். சிதம்பரம் பிள்ளை வண்டிக்கு முன்னால் சண்டித்தனம் செய்ய ஆள் திரட்ட ஆரம்பித்ததை அறிந்த உடன் நாகராஜ ஐயங்கார், வண்டியை விட்டிறங்காமல் வண்டிக் கதவண்டை வந்து நின்று கொண்டு, பிளாட்பாரத்தில் சண்டித்தனம் செய்யப் போகிறவர்கள் கும்பலில் நின்றுக்கொண்டிருந்த என்னைக் கைகாட்டி அழைத்தார். நான் போனேன். இரண்டு பேரும் உள்ளே போய் எங்கள் இருப்பிடத்தில் உட்கார்ந்

தோம். நாகராஜன் என்னைப் பார்த்து 'ராமலிங்கம் நீ இந்த ரகளையில் சேராதே. மெயில் வண்டிக்கு 'மெயில்' என்ற முறையில் நியாயமாகக் காட்டவேண்டிய மரியாதைக்காக அதை முன்னால் போக விடுவதில் அநியாயம் ஒன்றுமில்லை. இப்போதிருக்கிற வேகத்தில் அந்த நியாயத்தை நாம் சொன்னால் கேட்கமாட்டார்கள். யாரோ எப்படியோ செய்யட்டும் நீ மட்டும் இதில் சேராதே' என்று கண்டித்தார்.

நான் பிளாட்பாரத்தில் சிதம்பரம் பிள்ளையின் கட்சி ஆதரிக்கும் கூட்டத்தில் நின்றுகொண்டிருந்தது அவருடைய கட்சியை ஆதரித்துவிட்டதனால் அல்ல. ஆனால் அதில் சேரலாமா வேண்டாமா என்று என்னுள் குழம்பிக்கொண்டுதான் கும்பலோடு நின்றுகொண்டிருந்தேன். சிதம்பரம் பிள்ளை ஸ்ரீ திலகருடைய மதிப்பிற்குரிய தேசபக்தர் என்பதனால் எனக்குப் பிள்ளையவர்களிடத்தில் இருந்த பிரியத்துக்காக மட்டுமாவது அவர் கட்சியில் சேரத்தான் ஆசை உதித்தது. ஆனால் காந்தியடிகளின் தெய்வீகத் தன்மையில், என்னையறியாமலும் என் மனதில் உதித்து உரம்பெற்றுவிட்ட காந்திபக்தியும், அந்த காந்திக்கு விரோதமாக சிதம்பரம் பிள்ளையவர்கள் பிரசாரம் செய்து வருகிறாரே என்ற வருத்தமும் அந்த ஆசையைத் தடுத்தன. உண்மையைச் சொன்னால் அப்போது என்னுடைய வாலிபத் துடிப்புகள் என்னைச் சிதம்பரம் பிள்ளையோடு சேரத்தான் வற்புறுத்தின. அப்படிக் குழம்பிக்கொண்டே கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த என்னைக் கூப்பிட்டு நாகராஜய்யங்கார் 'நீ மட்டும் இதில் சேராதே' என்று சொன்னபோது ஒரு எதிர்ப்பு உணர்ச்சி தான் எழுந்தது. நாகராஜய்யங்காரோடு கொஞ்சம் தர்க்கம் செய்தேன். எவ்வளவு தர்க்கம் பேசியும் அவர் இடம் கொடுக்கவில்லை. நாகராஜ ஐயங்கார் பிள்

ளைப் பருவம் முதல் பிரியாத சகபாடி. நானும் அவரும் சமரசமான சல்லாபிகள். வாடா போடா என்று தான் எங்களுக்குள் வழக்கம். எல்லா விஷயங்களிலும் அவருடன் எதிர்ப்புப் பேசுவதில்தான் எனக்கு இச்சை. இருந்தாலும் அவரது மாசற்ற வாழ்க்கையும் மருவற்ற ஒழுக்கமும், பகைமை பாராட்டுகிறவர்களுக்கும் நன்மையே செய்கிற அபூர்வ பண்பும், அவமரியாதையாகப் பேசி புண்படுத்தி விடுகிறவர்களிடத்திலும் அவர் காட்டும் பொறுமையும் எனக்கு அவரிடத்தில் ஒருவித பயபக்தியை உண்டாக்கியிருந்தது. அதனால் ஆரம்பத்தில் நான் எவ்வளவு ஆவேசத்தோடு எதிர்த்து வாதாடினாலும் கடைசியில் அவருக்கு அடங்கிப் போவதே வழக்கம். காந்திய சாத்விகத்தில் எனக்கு வந்த கவர்ச்சியும் அதனால் என்னுள் உதித்த கவிதைகள் களங்கமற்ற சாந்த வாசனை கமழ்ந்துகொண்டே வளர்ந்துவரக் காரணமும் இயல்பாகவே சாந்த குணம் நிறைந்திருந்த நாகராஜய்யங்காருடைய சகவாசத்தினால் என்றால் அது வெறும் சத்தியம்தான், சம்பிரதாயத்துக்காகப் புகழ்வதல்ல.

ஆதலால் என்னுடைய ஆசையையும் அபிப்பிராயத்தையும் ஒதுக்கிவிட்டு நாகராஜன் சொன்னதை ஒத்துக்கொண்டேன்.

வேடிக்கையைப் பாருங்கள். திலகர்பிரானையும் அவருடைய பிரதம சிஷ்யர் என்பதற்காக சிதம்பரம்பிள்ளையவர்களையும் என்னேரமும் புகழ்ந்து போற்றுவதனால், வெகு சுலபமாகச் சிதம்பரம் பிள்ளையின் கட்சியில் சேர்ந்துவிட வேண்டிய நானும் நாகராஜய்யங்காரும் இன்னும் சிலருமே அதில் சேராதிருக்க, காந்தியடிகளை மிகவும் ஆதரித்து, காந்தியின் 'சாத்வீக ஒத்துழையாமை' தீர்மானம் நிறைவேறக் கூடாதென்று நெடுக பிரசாரம் செய்துவந்த சிதம்பரம் பிள்ளையை நேர்ந்தப்படியெல்லாம்

எதிர்த்துப் பேசி சண்டை யடித்துக்கொண்டே வந்தவர்களில் முதல்வராக இருந்த எங்களுடன் வந்த வரத ராஜுலு முதலியாரும் அவருடன் சேர்ந்து பேசின மற்றவர்களும் மெயில் வண்டிக்கு முன்னால் தண்டவாளத்தில் படுத்துக்கொள்ளுகிற கட்சியில் தாராளமாகச் சேர்ந்து கொண்டார்கள். சாத்விக இயக்கத்தை ஆரம்பிக்கப் போகிற காந்தியடிகளுக்குச் சாதகமாக 'ஓட்' போடுவதற்கென்றே சத்தியம் செய்துகொண்டு வந்திருப்பதாக சிதம்பரம் பிள்ளையுடன் வாது பேசினவர்களுள் பெரும்பாலோரும் எங்கள் ரயில் வண்டி மெயில் வண்டிக்கு முன்னால் போகவேண்டும் என்பதற்காக அப்போது எழுப்பின கோஷங்களையும் கோபதாபப் பேச்சுக்களையும் இப்போது நினைத்தாலும் துணுக்கமுண்டாகிறது. சாத்வீகத்தையும் சத்தியத்தையும் எழுத்தாலும் சொல்லாலும் எவ்வளவு போற்றுகின்றோம், ஆனால் செயலில் மட்டும் எவ்வளவு மாற்றுகின்றோம் என்பது, காந்தியத்தில் இருபத்தாறு வருஷங்கள் ஊறிக்கிடந்த பிறகும் இன்றைக்கு இருக்கிற உண்மையைப் பார்க்கிறபோது, உலகப் போக்குக்கு ஒத்துக்கொள்ளாத இயக்கம் என்று அதை பலபேர் எதிர்த்த அந்த ஆரம்பகாலத்தில் அப்படி இருந்ததில் அதிசயமில்லை. சிதம்பரம் பிள்ளையின் படையில் பலர் சேர்ந்தார்கள். அந்தச் சேனைக்குத் தலைவனாக சிதம்பரம் பிள்ளையவர்கள் விளங்கிய வீராவேசத் தோற்றம் அடிக்கடி என் மனக்கண்ணின் முன்னால் மலர்வதுண்டு.

வெள்ளைக்காரனுடைய அதிகாரக் கோட்டையை இடித்தெறியப் படையெடுத்துவிட்ட சேனைக்குத் தலைவன் போல கப்பலோட்டிய தமிழன் சிதம்பரம் பிள்ளை வெகு களிப்புடன் அன்றைக்கு நின்ற அந்தக் காட்சி

மானிலம் அதனில் ‘ உண்டு போர் ’ எனில் அந்த மாற்றம்
தேனினும் இனிப்புச் செய்யும் சிந்தையர்............

என்று கம்பன் போர்வீரர்களின் மறத் தன்மையை வர்ணிக்கும்போது சொல்லுகின்ற வரிகளை இன்றைக்கு நினைப்பூட்டுகின்றது.

சேனை திரண்டுவிட்டது. மெயில் வண்டியை ஸ்டேனுக்கு அனுமதிப்பதற்குக் கைகாட்டி இறக்கப்பட்டு விட்டது. மெயில் வேகத்தில் வந்துகொண்டிருக்கிறது. சிதம்பரம் பிள்ளையும் அவருடைய சேனு வீரர்களும் மெயில்வண்டி நிற்பதற்கு முன்னுலும் அதன் இஞ்சினுக்கு முன் தண்டவாளத்தில் குதித்துவிடுவார்களோ என்று நினைக்கும்படி துடித்துக்கொண்டிருந்தார்கள்...... இதற்குள் அந்த படையெடுப்பை விரும்பாதவர்களான சிறுபான்மைத் தொகுதியில் இருந்தவர்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அவர்களிற் சிலர் சிதம்பரம் பிள்ளையிடம் சென்று அந்த முரட்டு முயற்சியை விட்டு விடும்படி பேசிப் பார்த்தார்கள். பலிக்கவில்லை. கடைசியாக எங்களுடன் அதே வண்டியில் வந்துகொண்டிருந்த சேலம் சக்கரவர்த்தி விஜயராகவாச்சாரியாரிடம் சென்ருர்கள். விஜயராகவாச்சாரியார் திலகர் கூட்டத்தைச் சேர்ந்தவர். காந்தியின் தீர்மானத்தை மிகக் கடுமையாகக் கண்டிப்பவர்களில் முதன்மையானவர். ஆதியிலிருந்து காங்கிரஸ் மகாசபையின் செல்வாக்குக்குச் சிறந்த துணைவரான பழுத்த தேசபக்தர். சண்டை கிடைத்தால் சாமான்யத்தில் விட்டுவிடக் கூடியவரல்ல. வக்கீல் தொழிலிலும் சரி காங்கிரஸ் மேடையிலும் சரி எதிர் கட்சியை கதிகலங்கச் செய்துவிடக்கூடிய திறமை வாய்ந்தவர். சிதம்பரம் பிள்ளையிடத்தில் மிகவும் அபிமானமுள்ளவர். பிள்ளையவர்கள் தம்முடைய கப்பலோட்டும்

முயற்சியில் அந்த 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம் பெனி'க்கு மூலதனம் தேடிப் பங்குதாரர்களைச் சேர்க்கச் சேலம் வந்திருந்தபோது ஸ்ரீ விஜயராகவாச்சாரியும், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும்தான் அந்த முயற்சிக்கு முன்னால் நின்று உதவிபுரிந்தவர்கள். அந்த இரண்டு ஆச்சாரியார்களுக்குள் ராஜகோபால ஆச்சாரியார் காந்தி யின் கட்சியைச் சேர்ந்தவராகி விட்டதால் அவருடைய வார்த்தை சிதம்பரம் பிள்ளையிடத்தில் செல்லாது. விஜய ராகவாச்சாரியார் காந்தி கட்சிக்கு விரோதமானதினாலும் சிதம்பரம் பிள்ளைக்கு விஜயராகவாச்சாரியாரிடத்தில் மிகுந்த பக்தி விசுவாசம் இருந்ததினாலும் அவர் சொன்னால்தான் சிதம்பரம் பிள்ளை கேட்பார் என்று விஜயராக வாச்சாரியாரிடம் போய் சிதம்பரம் பிள்ளை செய்யத் தீர்மானித்திருக்கிற காரியத்தை விட்டுவிடும்படி அவருக்குச் சொல்லச்சொல்லி விஜயராகவாச்சாரியாரை வேண்டினார்கள். பணத்தை மட்டும் கருதிய கச்சேரி வழக்குகளில் கூட தம்முடைய கட்சிக்காரனை விட்டுக் கொடுக்காத விஜயராகவாச்சாரியார் தேசாபிமானத்திலும் காங்கிரஸ் கொள்கையிலும் தம் கட்சியைச் சேர்ந்தவராகத் தமக்கு மிகவும் வேண்டியவரான சிதம்பரம் பிள்ளையை விட்டுக் கொடுத்து விடுவாரா? சிதம்பரம் பிள்ளை செய்வதில் குற்றம் ஒன்றுமில்லையென்று பேசி பிராது சொல்ல வந்த வர்களை மருட்டிவிட்டார். அவருடன் பேசப் போனவர் களில் அவருக்குச் சரியான பதில் சொல்லி எதிர்வாதம் புரியத் தைரியமும் சாமர்த்தியமும் உள்ளவர்கள் யாரும் இல்லை. அந்த வண்டியில் இருந்த அத்தனை பேர்களுக் குள்ளும் விஜயராகவாச்சாரியாரை மடக்கக்கூடிய விவா தத் திறமையும் விநயமும் துணிச்சலும் சமயோசித சாதுரியமும் உள்ளவர் ஒரே ஒருவர்தான் உண்டு. அவர் தான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். வக்கீல் தொழி

லிலும் விஜயராகவாச்சாரியாருக்கு எதிர்க் கட்சியில் ராஜகோபாலாச்சாரி அமைந்தால்தான் கட்சிக்காரனுக்கும் திருப்தி, கச்சேரியில் காட்சிக்காரர்களுக்கும் திருப்தி. ஒரு வழக்கில் விஜயராகவாச்சாரியார் ஒரு கட்சிக்கு வக்காலத்து வாங்கிவிட்டால் உடனே எதிர்கட்சிக்காரர்கள் ராஜகோபாலாச்சாரியாரிடம்தான் ஓடுவார்கள். 'விஜயராகவாச்சாரியாரும் சேலம் வாசி, ராஜகோபாலாச்சாரியாரும் சேலம் வாசி. விஜயராகவாச்சாரியாரும் பிரபல வக்கீல், ராஜகோபாலாச்சாரியாரும் பிரபல வக்கீல். இவரும் ஐயங்கார், அவரும் ஐயங்கார். இவரும் ஆச்சாரி என்ற பட்டம் படைத்தவர், அவரும் அப்படியே. இவருக்கும் சக்ரவர்த்தி என்ற குடும்பப் பெயர் முன்னால் உண்டு, அவருக்கும் அதேமாதிரி. இவரும் கெட்டிக்காரர், அவரும் கெட்டிக்காரர். யானைக்கு யானை கை கொடுத்தாற் போல்தான்' என்று ஜனங்கள் பேசிக் கொள்வதுண்டு. இப்படி வார்த்தைகளை அடுக்கிக் காட்டுவதில் மட்டும்தான் இவர்களுக்குள் ஒற்றுமையைக் காணலாம். ஆனால் இந்த இரண்டு ஆச்சாரியார்களும் இயல்பிலும், தொழிலின் செயல் முறையிலும் முற்றிலும் வேறுபட்டவர்கள்.

விஜயராகவாச்சாரியார் ராஜஸம் மிகுந்தவர். ராஜகோபாலாச்சாரியார் ஸாத்விகம் மிகுந்தவர். முன்னவர் ஆர்ப்பாட்டம் உள்ளவர், பின்னவர் அடக்கம் உள்ளவர். மூத்த ஆச்சாரியார் எதிர்கட்சியைத் தம்முடைய வாதங்களால் ஓங்கியடித்து உட்கார வைத்துவிடுவார், இளைய ஆச்சாரியார் நிதானமாகப் பேசித் திணற வைத்துவிடுவார். விஜயராகவாச்சாரியார் உரக்கப் பேசுவதனாலும் உருட்டு மருட்டுகளாலும் ஓங்கி மேஜையைத் தட்டி ஓசை யெழுப்புவதாலும் நீதிபதியையும், எதிர்கட்சி வக்கீலையும் நிலைகுலைத்து தன் கட்சிக்குப் பலம் காட்டுவார். ராஜகோபாலாச்சாரியார் வாழைப் பழத்தில் ஊசியை

ஏற்றுவதுபோல சந்தடி செய்யாமல் சலசலப்புக் காட்டாமல் மறுக்க முடியாத நியாயங்களைக் காட்டி மயக்கச் செய்துவிடுவார். விஜயராகவாச்சாரியார் எதிர்கட்சிக்காரர் நடுநடுங்கிப் போகும்படிகூட சிற்சில சமயங்களில் கோபமும் கொதிப்புமாகக் குற்றம் காட்டிப் பேசுவார். ராஜகோபாலாச்சாரியார் கோபிக்க வேண்டிய சமயம் வந்தாலும் கோபக்குறி சிறிதும் காட்டாமல் புன்சிரிப்போடு மோகனாஸ்திரம் விட்டதுபோல முன்னால் நிற்பவனை முழிக்கச் செய்துவிடுவார். விஜயராகவாச்சாரியார் கட்சிக்காரன் கொடுக்க வேண்டிய 'பீஸை' பைசா பாக்கியில்லாமல் கண்டித்துக் கரந்து விடுவார். ராஜகோபாலாச்சாரியார் கண்டித்துக் கேட்க மாட்டார், கட்சிக்காரன் பேசின 'பீசுக்கு' மேல் அவனே அதிகமாகக் கொடுக்க நினைக்கும்படி அன்பு காட்டுவார். கொடுக்க முடியாதவன் என்று கண்டால் பேசினதற்குக் குறைவாகவும் வாங்கிக் கொண்டு விட்டுவிடுவார். விஜயராகவாச்சாரியாரிடத்தில் பணமில்லாமல் கட்சிக்காரன் பக்கத்தில் போக முடியாது. ராஜகோபாலாச்சாரியாரிடத்தில் பணமில்லாமலும் பயமின்றிப் போகலாம்...... இது சுபாவ வித்யாசந்தான். விஜயராகவாச்சாரியார் தொழில் முறையில் கண்டிப்பாக இருந்தாரென்பதன்றி பண ஆசையுள்ளவரென்றாவது, பணத்தை மட்டும் கருதி குணத்தை விட்டவரென்றாவது சொல்ல முடியாது.

இத்தனையும் எதற்காகச் சொன்னேன் என்றால் மிகப் பெரிய காங்கிரஸ் தலைவருள் ஒருவரான விஜயராகவாச்சாரியாரை கச்சேரியிலாவது வேறிடத்திலாவது யாராவது வெல்ல முடியுமானால் அது ராஜகோபாலாச்சாரியார் ஒருவர்தான். விஜயராகவாச்சாரியாரிடத்தில் ராஜகோபாலாச்சாரியார் அபரிமிதமான மரியாதை காட்டுவார். எவருக்கும் வணங்காமுடி மன்னரான

விஜயராகவாச்சாரியாருக்கு ராஜகோபாலாச்சாரியாரிடத்தில் மட்டும் கொஞ்சம் வணக்கம் வரும்.

கடைசியாக ராஜகோபாலாச்சாரியார் விஜயராகவாச்சாரியாரிடத்தில் மிகவும் வநயமாகப் பேசியதின் விளைவாக சிதம்பரம் பிள்ளையின் சண்டித்தனத்தை விட்டுவிடும்படி யோசனை சொல்ல விஜயராகவாச்சாரியார் சம்மதித்தார். ராஜகோபாலாச்சாரியார் விஜயராகவாச்சாரியாரிடத்தில் பேசியதன் சாரம் 'மெயில் வண்டி நம்முடைய வண்டிக்கு முன்னால் போக வேண்டுமென்பது நியாயம் அல்லதான். அதற்காக நாம் போர் தொடுப்பதில் அநியாயம் இல்லை. ஆனாலும் நம்முடைய சுயராஜ்யத்துக்காக நாம் போராட வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. நம்முடைய சக்திகளையெல்லாம் சுதந்தரப் போராட்டத்துக்காகச் சேமிப்பதை விட்டு இந்தச் சின்னச்சின்ன விஷயங்களில் சிதறவிடக்கூடாது. அன்றியும் இங்கே நாம் இந்தச் சண்டையில் இறங்கி விட்டால் அது முடிவு பெற எவ்வளவு காலம் போகுமோ தெரியாது. கல்கத்தாவிற்குச் சென்று நாம் உடனே கவனிக்க வேண்டிய காங்கிரஸ் வேலைகளெல்லாம் கெட்டுப் போகும்' என்பது தான்.

உடனே விஜயராகவாச்சாரியார் சிதம்பரம் பிள்ளையை அழைத்து வர ஆள் விட்டார். சிதம்பரம் பிள்ளை வந்தார். விஜயராகவாச்சாரியார் சொன்னார். சிதம்பரம் பிள்ளை கேட்டார். மெயில் முன்னாற் போயிற்று. நாங்கள் பின்னால் போனோம். இந்த சம்பவத்தில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய ஆண்மையையும், வெகு விரைவில் கட்சி சேர்த்து விடக்கூடிய ஆற்றலையும், எதிர்ப்புகளுக்கு அஞ்சாத துணிச்சலையும், தலைவனுக்கு உடனே தலைவணங்கும் தளபதியின் தன்மையையும் நான் கண்ணாரக் கண்டேன்.

வெள்ளைக்காரரை விரட்ட வேண்டும் என்பதில் வெகு மூர்த்தண்யமான முரட்டுத்தனம் காட்டுவாரென்ருலும் சிதம்பரம் பிள்ளை மிகவும் இளகிய மனமும் இனிய குணமும் உள்ளவர். நண்பர்களிடத்தில் வெகு நயமாகவும் நாகரீகமாகவும் நடந்து கொள்வார். அவருடைய வாதங்களில் அற்பத்தனமோ கண்ணியக் குறைவோ காண முடியாது. அவருக்கு அஹிம்சை மார்க்கத்தில் அணுவேனும் நம்பிக்கையில்லை. பகைவனை வெல்லுவதில் பரிசுத்தம் பார்க்க முடியாதென்பதும் போர் மூண்டு விட்ட பின் புண்ணியம், பாவம், பொறுமை, பொருமை என்றெல்லாம் ஆலோசிக்க அகத்தியம் இல்லையென்பதும் அவருடைய கொள்கை. போர் தொடுக்கும் காரணம் மட்டும் சரியானதா என்று பார்க்க வேண்டும். அது நியாயமானதென்று நிச்சயித்து விட்டால் போரின் முறைகளைப்பற்றி நிறை பார்த்துக் கொண்டிருப்பது கோழைத்தனம் என்பதே அவர் கொண்டது. ஆனால் இந்த நம்பிக்கை அவருடைய மனப்பூர்வமானது. மனசில் ஹிம்சையையே மனனம் செய்து கொண்டு வெளியில் அஹிம்சையையே பேசி உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உலுத்த குணம் அவரிடத்தில் இல்லவே இல்லை. இந்த விஷயத்தில் நம்மிற் பெரும்பாலோரும் பித்தலாட்டக்காரர்கள் தான் என்று சொன்னால் அது பிழையாகாது.

கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்த பின் நாங்கள் இறங்கியிருந்த இடத்தில் சிதம்பரம் பிள்ளை ஓய்வு ஒழிச்சலில்லாமல் காந்தியடிகளின் அஹிம்சை வழிகளுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்து 'ஓட்' சேகரிக்க முயன்ருர். ஆனால் அவருக்குக் கிடைத்த ஆதரவு மிக மிகவும் சொற்பமே. திலகர் இருந்தால் இந்தத் தீர்மானத்துக்கு இடங்கொடுக்க மாட்டார்

என்று நம்பின சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் காந்தியையே ஆதரித்தார்கள். அப்போது காங்கிரசுக்கு மிகச் சிறந்த தலைவர்களாக விளங்கிய அனைவரும் ஏகோபித்து எதிர்த்துப் பேசியும்கூட ஏராளமான ஓட்டுகளால் காந்தியவர்களுடைய தீர்மானம் நிறைவேறியது.

மனித சுபாவத்துக்கு மாறானதென்றும், நடைமுறைக்கு சாத்தியமானதல்லவென்றும், இன்று நாம் அனுபவத்தில் காண்கிற அந்த அஹிம்சை தீர்மானம் அவ்வளவு அமோகமான ஓட்டுகளால் நிறைவேறின ரகசியம் என்ன என்பதை சற்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

என்னவென்றால் மனித சுபாவத்தில் மறைந்து கிடக்கிற ஆன்ம உணர்ச்சி எப்போதும் அஹிம்சையைத்தான் நாடுகின்றது. ஆனால் மனிதனுடைய நித்திய அனுஷ்டானத்தில் ஒவ்வொரு நிமிஷமும் முன்னணியில் நிற்கிற சரீர உணர்ச்சிகள் அவ்வளவும் ஹிம்சையையே அவலம்பிக்கின்றன. பெரும்பாலும் மக்களுக்குள் மறைந்தும் இருந்து கொண்டிருக்கிற ஆன்ம உணர்ச்சி ஒரு சிறிதும் தலைதூக்க முடியாதபடிதான் மனித சமூகத்தின் சமுதாய வாழ்க்கை நடந்தும் நடத்தப்பட்டும் வருகிறது. எனினும் இந்த ஆன்ம உணர்ச்சி என்பது ஒவ்வொரு மனிதனிடத்திலும் மறைவாகவேனும் இருந்து கொண்டுதான் இருக்கிறதென்பது உண்மையிலும் உண்மை.

அற்புதப் பிறவியான மகாத்மா காந்தியவர்களின் அருந்தவங்களால் அவருக்குண்டான அதிசயிக்கத்தக்க ஆன்ம சக்தியின் வேகத்தால் எல்லா மனிதரிடத்திலும் இருந்துகொண்டேயிருக்கிற ஆன்ம உணர்ச்சியானது அந்த கல்கத்தா காங்கிரசில் மேலோங்கி நிமிர்ந்து நின்றது. அதனால், தங்களுடைய தினசரி வாழ்க்கையில் அஹிம்சை கொள்கைகளை அனுஷ்டித்தறியாத, அனுஷ்டிக்கவே முடியாத, முழுதும் முரட்டுப் பேர்வழிகளும்

565—C

கூட காந்தியடிகளின் அஹிம்சை தீர்மானத்தை ஆவேசத்தோடு ஆதரித்தார்கள். அடிக்கடி அப்படி மேலோங்கி வருகின்ற ஆன்ம உணர்ச்சியின் உச்சாடன வேகம் குறைந்து போனதனுல்தான் இன்றைக்கு அந்த அஹிம்சை மார்க்கத்துக்கு அடிப்படையாக இருந்த காங்கிரஸ்காரர் களிடத்திலும் கலவரங்களைக் காண்கிருேம்.

கலகங்களும் கலவரங்களும் எவ்வளவு ஏற்பட்டாலும் அந்த ஆன்ம உணர்ச்சி அஹிம்சையைத்தான் அவலம்பிக்கும். அந்த ஆன்ம உணர்ச்சி சமுதாய வாழ்க்கையில் அற்றுப் போகாமல் இருக்கச் செய்வதுதான் மகாத்மாக்களின் வேலை. அந்த வேலையினுல்தான் மனித சமூகம் மிருக வாழ்க்கைக்கு மாறுபட்டதாக இன்னும் இருந்து வருகிறது.

கல்கத்தாவில் காந்தியடிகளின் அஹிம்சை தீர்மானம் நிறைவேறியதிலிருந்து சிதம்பரம் பிள்ளையவர்களின் அரசியல் வாழ்க்கை அடங்கிவிட்டது. காந்தியை எதிர்க்க முடியாதென்று கண்டு ஒதுங்கி விட்டார்.

சிதம்பரம் பிள்ளையவர்கள் நல்ல தமிழன். தமிழன் என்ருல் தமிழ்ப் பண்புகள் நிறைந்தவர். தமிழ்ப்பண்பு என்ருல் தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கங்களிலும் தமிழ் மொழி இலக்கியங்களிலும் தமிழன் எந்தெந்த நோக்கங்களைச் சிறந்தனவென்று பின்பற்றி வாழ்ந்து வந்திருக்கிருனே அந்தக் குணவிசேஷங்கள் நிறைந்தவர். தமிழ் இலக்கிய நூல்களில் ஆழ்ந்த அறிவுடையவர். சுருங்கச் சொன்னுல் தமிழனுடைய லட்சியப் பண்புகள் தெய்வ நம்பிக்கை, வீரம், கலை, காதல், என்று சொல்லிவிடலாம். இந்த நான்கு ரஸனைகளும் ஏறத்தாழ சரிசமானமாகக் கலந்துள்ள பண்புதான் தமிழ்ப் பண்பு. இதில் ஒன்று இரண்டு சற்றே அதிகமாகவோ குறைவாகவோ அவரவர்களுடைய இயல்புக்கு ஏற்றவாறு இருக்கலாம். ஆனுல்

இந்த நான்கில் ஒன்று இல்லாவிட்டாலும் அது சரியான தமிழ்ப்பண்பு ஆகாது. 'சங்ககால இலக்கியங்கள்' என்ற பெயரில் நமக்குக் கிடைத்துள்ள நூல்கள் ஆதியாக 'பாரதியார் பாட்டுகள்' அந்தமாக எல்லா தமிழ் இலக்கியங்களையும் ஒன்ருகச் சேர்த்து ஊடுருவிப் பார்ப்போமாளுல் தமிழ் நோக்கம், தமிழ்-வாழ்க்கை, தமிழ்க்கலை, தமிழ்ப்பண்பு என்பன என்ன என்று எளிதில் விளங்கும். அந்தத் தமிழ்ப்பண்பை தமிழ்மொழி நூல்களில் மட்டுமன்றி தமிழ்நாட்டில் எங்கெங்கும் இன்றளவும் நின்றுளவாகிய பழைய கோயில்களிலும் கோபுரங்களிலும் குளங்களிலும் கூவங்களிலும் கோட்டைகளிலும் கொத்தளங்களிலும் இருக்கின்ற சிற்பச் சிலைகளிலும் சித்திரங்களிலும் கல்வெட்டுச் சாசனங்களிலும் அந்தத் தமிழ்ப் பண்பைக் காணலாம். அந்தத் தமிழ்ப் பண்பிற்கு, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற வாதுகளும், சாதி சமயச் சண்டைகளும், தமிழன் - அன்னியன் என்ற தர்க்கங்களும் இல்லை. அப்படிப்பட்ட தமிழ்ப் பண்புக்கு அறிகுறியாகச் சிதம்பரம் பிள்ளை திகழ்ந்தார்.

சிதம்பரம் பிள்ளையவர்களுடைய அந்திய நாட்கள் வறுமையால் வாடிப் போனதாக நேர்ந்தது தமிழ் நாட்டின் தப்பிதமேயாகும். அடிமைத்தனம் மிகுந்து விலங்கினங்கள் வசிக்கும் காடாந்தகாரமாக இருந்த தமிழ் நாட்டில் கல்லையும் முள்ளையும் களைந்து படாத துன்பங்களைப்பட்டுப் பண்படுத்தி தேசாபிமானம் என்ற விதையை நட்டுப் பயிர்செய்து பாதுகாத்த ஆதி வேளாளனுகிய சிதம்பரம் பிள்ளை துன்பம் நிறைந்த சிறைவாசத்தையும் கழித்து வெளியே வந்தபோது தமிழ்நாடு அவரைத் தக்கபடி வரவேற்று ஆதரிக்கத் தவறிவிட்டது. இன்றைக்கு அவருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று துடிக்கின்ருேம். அந்தமட்டில் அது ஒரு நன்முயற்சிதான்

என்றாலும் சிதம்பரம் பிள்ளையை அறிந்த யாரும் அவருடைய கடைசி நாட்கள் கஷ்டங்கள் நிறைந்தனவாக இருந்ததைத் தமிழர்கள் கவனிக்காமல் விட்டு விட்டார்களே என்று கண்ணீர்விட்டுக் கலங்காமல் இருக்க முடியாது.

சுப்ரமண்ய பாரதியார் சோறின்றி வாடிக்கொண்டே பாடிக்கொண்டு மறைந்தார். சுப்ரமண்ய சிவா ஊரூராகச் சென்று பிச்சைக்காரனைப்போல் பிழைத்து மாண்டார். தமிழ்நாட்டுத் தியாகிகளுள் தலைவரான சிதம்பரம் பிள்ளை வறுமையில் வாடியும் ஓசையில்லாமல் தமது கடைசி நாட்களைக் கஷ்டங்களிலேயே கழித்து ஒழித்தார்

சிதம்பரம் பிள்ளையவர்களுடைய அருமை பெருமைகளைப்பற்றி அலுப்பில்லாமல் அடிக்கடி பேசி ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்த நானறிந்த முதல் மனிதன் காலஞ் சென்ற சுப்ரமண்ய சிவா அவர்கள். சிவா அவர்கள் சிதம்பரம் பிள்ளையின் அந்தரங்கங்களை யெல்லாம் நன்றாக அறிந்தவர். சிதம்பரம் பிள்ளையவர்களுடைய உண்மையான வரலாறுகளைத் தெரிந்திருந்தவர் சிவாதான். பிள்ளையவர்களுடைய சரித்திரத்தை தாமே எழுதப்போவதாக சிவா அவர்கள் சேலத்தில் என்னிடம் சொன்னார். அதற்குச் சில பாட்டுகளையும் அதை அச்சேற்ற வேண்டிய அனுகூலங்களையும் நான் செய்யவேண்டும் என்று சிவா என்னைக் கோரியிருந்தார். அது கைகூடுமுன் அவர் காலமாகிவிட்டார். சிவாவின் சிம்ம கர்ஜ்ஜனை போன்ற பிரசங்கங்களில் சிதம்பரம் பிள்ளையவர்களுடைய தேசபக்தியைப் பற்றியும் தியாகங்களைப் பற்றியும் அவர் உள்ளம் உருகி கண்ணீர் ததும்பப் பேசிய கட்டுரைகள் இன்னும் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. சிவாவின் மூச்சுப் போகிறவரையில் சிதம்பரம் பிள்ளையின் சிறப்புகளைப் பாடிக்கொண்டே பல ஊர்களி

லும் அலைந்து திரிந்து கடைசியாக சேலம் ஜில்லாவி லுள்ள பாப்பாரப் பட்டியில் பரகதியடைந்தார். பாப் பாரப்பட்டியில் பாரதமாதாவின் கோவில்கட்ட சிவா அவர்கள் செய்த முயற்சிகளில் அந்த ஆலயத்தில் பல தேச பக்தர்களின் சிலைகளைப் பிரதிஷ்டை செய்ய நினைத் திருந்ததையும் அந்த தேச பக்தர்களுக்குள் சிதம்பரம் பிள்ளை முதல் ஸ்தானம் பெற்றிருந்தார் என்பதையும் நான் அறிவேன். பாப்பாரப் பட்டிக்கு நான் ஒரு முறை போயிருந்தபோது அங்கே சுப்ரமண்ய சிவா பாரதமாதா கோவிலைக்கட்டக் குறிப்பிட்டிருந்த இடத்தையும் அந்த கோயிலைக்கட்டி முடிக்கவேண்டிய எல்லா முயற்சி களையும் மேற்கொண்டு அதற்காக வாக்களித்திருந்த அன்பர்களையும் கண்டேன். பாரதமாதா கோயிலுக்காக சிவா வகுத்திருந்த திட்டங்களையும் அதில் சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு எவ்வளவு சிறந்த பீடம் கொடுக்கப் பட்டிருந்தது என்பதையும் அறிந்தேன். அந்த முயற்சி அவரோடு முடிந்தது.

சிவாவுக்கு அடுத்தபடி சிதம்பரம் பிள்ளைக்குத் தமிழ் நாட்டில் தனிச் சிறப்புகள் நடக்கவேண்டுமென்று துடி துடித்து அலைகிறவர் சிவஞான கிராமணியார் என்பது தான் எனக்குத் தெரியும். சென்ற பத்து ஆண்டுகளாக சிவஞான கிராமணியார் சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு சிறப்பான ஒரு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டு மென்று தமிழ் நாட்டின் பலவிடங்களிலும் அவருடைய அபூர்வமான சொல்மாரியைச் சொரிந்து வந்திருக்கிறார். சிதம்பரம் பிள்ளையின் உருவப்படத்தை முதன் முதல் சென்னையில் காங்கிரஸ் மண்டபத்தில் திறந்துவைத்து விழா நடத்திய ஏற்பாடுகளையெல்லாம் செய்தவர் சிவ ஞான கிராமணியார்தான். அந்த உருவப்படத்தை மாட்ட அந்த காங்கிரஸ் மண்டபத்தின் சுவர்களில்

ஒரு ஒதுக்கான இடத்தை யாரோ காட்டி விட்டதற்காக கிராமணியார் கடுங் கோப மடைந்து அந்தப் படம் மண்டபத்தின் மையத்தில் வைக்கப்பட வேண்டுமென்று வாதாடி அப்படியே வைக்கப் பட்டதையும் நான் அறிவேன்.

'கப்பலோட்டிய தமிழன்' என்ற சிறப்புப் பெயருடன் சிதம்பரம் பிள்ளையின் சரித்திரம்போல வெளியிடப்பட்ட இந்த சிறு நூலும் கிராமணியவர்களுக்குச் சிதம்பரம் பிள்ளையவர்கள் மீதுள்ள ஆர்வத்தின் அறிகுறியே ஆகும். சிதம்பரம் பிள்ளையவர்களுடைய சரித்திரத்தை விஸ்தாரமாகத் தெரிந்தவர்கள் யாரும் அதை எழுதவில்லையே என்ற ஆத்திரத்தால் தெரிந்தமட்டிலும் துண்டுதுண்டான நிகழ்ச்சிகளை ஒன்று சேர்த்து மக்களிடையே பிள்ளையவர்களுடைய நினைவு மங்காமல் இருக்கவேண்டுமென்று சிவஞான கிராமணியார் செய்துள்ள இந்த முயற்சியைத் தமிழ் நாடு மிகவும் நன்றியுடன் வரவேற்கும் என்பது என் நம்பிக்கை. பாரத நாட்டின் மீது சிவஞான கிராமணியவர்களுக்கு உள்ள பரந்த தேசபக்தி பழுதுபடாமல் தமிழ் மொழியிலும் தமிழ் நாட்டிலும் தமிழ் நாட்டுத் தலைவர்களிடத்திலும் அவருக்குள்ள தனி பக்தியை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

வாழ்க சிதம்பரம் பிள்ளையவர்களுடைய திருநாமம் வளம்பெறுக சிவஞான கிராமணியாரின் 'கப்பலோட்டிய தமிழன்' கதை. இறைவன் இன்னருள் புரிவார். நலம்.

வெ. இராமலிங்கன்.

# தமிழ் ஞானம் முழங்கிவரும்

## சிவஞான கிராமணியார்

தமிழ்நாட்டில் தற்சமயம் மிகவும் செல்வாக்குள்ள அறிஞர்களில் ஸ்ரீ சிவஞான கிராமணியார் ஒருவர். விஷயங்களைத் துருவி ஆராய்ந்து பார்த்து விளக்கமாகத் தேனொழுகும் தமிழ் நடையில், தமிழன் காதுக்கும் கருத்துக்கும் விருந்துவைக்கும் பரோபகாரி ஸ்ரீ கிராமணியார். அவருடைய சண்டமாருதப் பிரசங்கங்கள் காவிரி நதியின் வெள்ளப்பெருக்குப் போல தமிழ் இனத்திற்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாக்கியிருக்கிறது.

"தமிழன் சிறப்பாக வாழ்ந்தவன்; வாழப் பிறந்தவன்; உலகை வாழ்விக்க வந்தவன்" என்று முரசு கொட்டும் போர்வீரர் கிராமணியார். அவருடைய தலைமையின்கீழ் இன்று தமிழ் இளைஞர்கள் ஒன்று திரண்டு வருகின்றனர்.

தமிழ் இன வளர்ச்சிக்காக ஒரு பெரும் போராட்டப் படையை உருவகப்படுத்தும் வேலையில் ஸ்ரீ கிராமணியார் முனைந்திருக்கிறார். அவருடைய முரசொலி மூலை முடுக்கிலும் கேட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் அவருக்குத் தமிழ்மொழி, தமிழ்ப் பெரியார்கள் மீதுள்ள பற்றுத்தான்.

அவர் போற்றிப் புகழ்ந்து வணங்கும் தமிழ்ப் பெரியார்களில் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை தலையானவர். வ. உ. சி. தமிழ்நாட்டில் விதைத்த வித்து இன்று மரமாகித் தழைத்து நிற்கிறது. தேசிய

விஷயங்களுக்கே அஸ்திவாரம் வ. உ. சி. தான். அந்தப் பெரியாருடைய வரலாற்றை ஸ்ரீ கிராமணியார் மிக அழகிய தமிழில் தமிழ்நாட்டிற்குக் கொடுத்திருக்கிறார். கிராமணியார் நாவன்மை உலகப் பிரசித்தம். அவருடைய எழுத்துவன்மையையும் தமிழ்நாட்டார் அறிந்துகொண்டு வருகிறார்கள். இப்புத்தகத்தில் கிராமணியாரின் இதய உணர்ச்சி பெருக்கெடுத்து ஓடுகிறது. தமிழர்களுக்கு ஸ்ரீ கிராமணியார் உதாரண புருஷர். நல்ல வழிகாட்டியும் கூட!

நாவலர் கிராமணியாரை நாமக்கல் பாவலர் முன்னுரை கொடுத்துப் பாராட்டியிருக்கிறார். நாமக்கல் கவிஞரின் முன்னுரை வெகு அற்புதமாக அமைந்திருக்கிறது.

கப்பலோட்டிய தமிழரின் வாழ்க்கை தமிழர்களுக்கு ஒரு மங்காத காவியம். அதைத் தமிழ் மக்களுக்குப் புத்தகமாகக் கொடுத்த கிராமணியார் அவர்களுக்குத் தமிழ் நாடு நன்றி செலுத்தும் என்பதில் ஐயமில்லை.



தமிழ்ப் பண்ணையாளர்

# கப்பலோட்டிய தமிழன்

தூத்துக்குடியில் வக்கீல் அரங்கசாமி ஐயங்கார் என்பவர் ஒருநாள் க்ஷவரஞ் செய்துகொள்ள நாவிதர் ஒருவரை அழைத்தார். க்ஷவரஞ் செய்துகொண்டிருக்கும் போது நாவிதர், "ஏன் சாமி! கலெக்டர் போலீஸ் பட்டாளத்தை அதிகப்படுத்தவேண்டும் என்றபோது நீங்கள் ஆதரவு காட்டியதாக ஜனங்கள் சொல்லிக்கொள்கிறார்களே அது உண்மையா?" என்று கேட்டார்.

"அடே! அதை நீ ஏன் கேட்கிறாய்? அது உன் வேலையல்ல" என்று அதட்டினார் ஐயங்கார்.

"அப்படியானால், உமக்கு க்ஷவரஞ் செய்வதும் என் வேலையல்ல" என்று சொல்லிக்கொண்டே கத்தியை மடக்கிப் பெட்டியில் வைத்துக்கொண்டு கடுகி நடந்தார் அம்பட்டர்.

பாவம்! ஐயங்கார் அரை க்ஷவரத்தோடு அவதிப்பட நேர்ந்தது. எவ்வளவோ கெஞ்சியும் நாவிதர் திரும்பவில்லை. வேறு அம்பட்டர்களை அழைத்தார் ஐயங்கார். ஒருவரும் இணங்கவில்லை. உச்சிநேரமாயிற்று. உண

வருந்தியபாடில்லை. வீட்டிற்குள் சென்றால் வைதீகத்திற்கு விரோதமென மனைவி மறுப்பாள். ஊருக்குள் சென்றால் தேசத்துரோகி என மக்கள் வெறுப்பார். என் செய்வார்? "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" என்னும் பழமொழி ஐயங்கார்பால் உண்மையாயிற்று.

இனி வேறு வழியில்லையென உணர்ந்து கலெக்டரிடம் நேரில் சென்று, "துரையவர்களே! அம்பட்டர்களெல்லாம் என்னைக் கைவிட்டனர். தாங்கள்தான் தயவு செய்ய வேண்டும். போலீசுக்கு உத்தரவு கொடுத்தால் போதும்" என்று புலம்பினார்.

அந்த வழிக்கு நான் வரமாட்டேன். என்னை நம்பிப் பயனில்லை எனக் கைவிரித்தார் கலெக்டர்.

இந்நிலையில் ஐயங்கார் திண்டாடித் தெருவில் அலைந்து பின்னர் ரயிலேறித் திருநெல்வேலிக்குச் சென்று மீதியுள்ள மயிரையுஞ் சிரைத்துக்கொண்டு ஊர் திரும்பினார்.

* * *

மேலே கூறியது கற்பனை அல்ல; உண்மை வரலாறு. இதற்குக் காரணமென்ன?

தூத்துக்குடிக் கோரல் மில் (இப்போது ஹார்வி மில்) தொழிலாளர்கள் தங்கள் கூலி விகிதத்தை உயர்த்த வேண்டுமென்று மில் நிர்வாகிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். நிர்வாகிகள் தொழிலாளர்களின்

குறையைத் தீர்க்கச் சம்மதிக்க வில்லை. ஆகவே தொழிலாளர்கள் ஒன்று திரண்டு ஒருமனப்பட்டு வேலை நிறுத்தஞ் செய்தனர். மெய் வருந்த உழைத்துக் கூலிபெறும் நாட்களிலேயே அரைவயிற்றுக் கஞ்சிக்கும் போதாது அவதிப்படும் ஏழைத் தொழிலாளிகள் வேலை நிறுத்த நாட்களில் குடும்பத்தைக் காப்பதெங்ஙனம்? தொழிலாளர்கள் தங்கள் மனைவி மக்களுடன் பட்டினிகிடக்க நேர்ந்தது.

இதை யறிந்த ஒரு வீரர் கருணையுடன் முன்வந்து தமக்குத் தெரிந்த வக்கில்களின் துணையுடன் பொது மக்களிடம் பணம் வசூலித்து வேலை நிறுத்தஞ் செய்துள்ள தொழிலாளர்களுக்கு உதவி, அவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றினார். அத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்கி, வேலை நிறுத்தஞ் செய்துள்ள 2000 தொழிலாளர்களில் 1000 பேருக்குத் தூத்துக்குடி நகர மக்கள் வேறு வேலைகளைக் கொடுத்து ஆதரித்தனர். வேலை நிறுத்த நாட்களில் தினசரிப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். அக்கூட்டங்களில் அவர் பேசுவார். தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு மில் நிர்வாகிகள் இணங்கினாலொழிய பணியக்கூடாதெனப் பறை சாற்றுவார். இவரது உணர்ச்சிமிக்க வீர உரைகளைக் கேட்கும் தொழிலாளர்கள் உறுதியும் ஊக்கமுங் கொண்டு வேலை நிறுத்தத்தை நடத்தி வந்தனர். இதனால் மில் நிர்வாகிகள் அவர்மீது சீற்றங் கொண்டனர். இவர் முதலாளிகளைக் கெடுக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணங்கொண்டு தொழிலாளர்களை வேலை

நிறுத்தஞ் செய்யத் தூண்டினர் என்றும், இவரது சொற்பொழிவுகளால் ஊரில் கலகமேற்படுமென்றும் மில் நிர்வாகிகள் மாஜிஸ்திரேட்டுக்கு மனுச்செய்தனர். மாஜிஸ்திரேட், அத்தொழிலாளர் தலைவரை நேரில் வரவழைத்து, அவரது பிரசங்கங்களால் பொதுஜன அமைதிக்குப் பங்கமேற்படு மெனத் தாம் நினைப்பதால் இனி எந்தப் பொதுக் கூட்டத்திலும் பேசக்கூடாதென எச்சரிக்கை செய்தார். மாஜிஸ்திரேட்டின் எச்சரிக்கையை அவர் சிறிதும் மதியாது, "அஞ்சுவது யாதொன்றுமில்லை, இனி அஞ்ச வருவதுமில்லை," என்ற திடச் சித்தத்துடன் தொழிலாளர் கூட்டங்களிற் தொடர்ந்து பேசிவந்தார்.

கோரல் மில் வேலை நிறுத்தச்செய்தி மதுரையிலும் பரவியது. கோரல் மில் நிர்வாகத்திற்குட்பட்ட மதுரை பருத்திஆலைத் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்ல மறுத்துவிட்டனர். தூத்துக்குடி வேலை நிறுத்தம் ஒரு வாரம்வரை நீடித்தது. கடைசியாக மில் நிர்வாகிகள் பணிந்து விட்டனர். தொழிலாளர்களின் கூலியைச் சிறிதளவு உயர்த்திக் கொடுப்பதாக நிர்வாகிகள் வாக்களித்து தொழிலாளரின் தலைவருடன் சமரஸம் செய்து கொண்டபிறகு தொழிலாளர்கள் வழக்கம்போல் வேலைக்குத் திரும்பினர். வேலை நிறுத்த நாட்களில் பொதுமக்களின் உணர்ச்சியைக் கண்டு பயந்த தூத்துக்குடி வெள்ளையர்கள் இராக்காலங்களில் நகரிலிருக்க அஞ்சிப் பெண்டு பிள்ளைகளுடன் துறைமுகஞ் சென்று இராப்போதைக் கப்பலிலேயே கழித்து வந்தார்களாம். இந்த விதமாக தொழிலாளருக்குத் தலைமை வகித்து

ஊரெல்லாம் புரட்சிக்கனலைக் கிளப்பிய வீரர்தான் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.

சிதம்பரம் பிள்ளையின் சொற்பொழிவுகளால் மக்களின் மனதில் நாட்டுப் பற்றுப் பொங்கி யெழுவதைக் கண்டு அதிகாரிகள் அச்சங்கொண்டனர். எனவே, கலெக்டர் ஊரிலுள்ள பிரமுகர்களை ஒன்று கூட்டி, கலகம் நிகழாமல் தடுக்கவும், பிரஜைகள் ராஜ விசுவாசிகளாக இருக்கவும் என்ன செய்யலாமென்று ஆலோசித்தார். தூத்துக்குடியில் விசேஷ போலீஸ் படையை வைக்க விரும்புவதாகவும் கூறினார். கூட்டத்தில் பெரும்பாலோர் அதை எதிர்த்தனர். ஆனால் வக்கீல் திரு அரங்கசாமி ஐயங்கார் என்ற இராஜ விசுவாசி மட்டும் மனப்பூர்வமாக ஆதரித்தார். விசேஷ போலீஸ் படையைத் தருவிக்கா விடில் சிதம்பரம் பிள்ளையின் பிரசங்கத்தால் ஊரே அழிந்து விடுமென அலறினார். இவரது செய்கையை ஊரார் வெறுத்தனர். அன்று முதல் திரு. ஐயங்கார் தூத்துக்குடி மக்களின் பகைவரானார்.

அதனால்தான் ஐயங்காருக்கு மேற்கூறிய 'க்ஷவர மறுப்பு' நடந்தது.

இவ்விதம் நாட்டுமக்களின் உணர்ச்சியைத் தூண்டி விட்டு தமிழ் நாட்டில் தொழிலாளர் இயக்கம் கண்ட சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு தமிழனுக்கு ஒரு மங்காத காவியம் போலாகும்.

# சிதம்பரனார் வாழ்க்கை

பாண்டிநாடு என்பது தமிழகத்தின் ஒரு பகுதி. அந்நாடு பண்டை நாளில் சீரெலாம் பெற்றுத் திகழ்ந்தது. அற நெறிதவறாத அரசர்களும், போரில் புறங்கொடாத வீரர்களும், பொய்யடிமை யில்லாத புலவர்களும், வாய்மை தவறாத வணிகர்களும் அந்நாட்டில் நிறைந் திருந்தனர்.

வளைந்த செங்கோலைத் தன்னுயிர் கொடுத்து நிமிர்த்திய நெடுஞ்செழியன் ஆட்சி புரிந்ததும், குற்றமற்ற கோவலனைக் கொன்றதற்காகக் கண்ணகி தேவியார் அரசியல் புரட்சி விளைவித்ததும், உலகெலாம் உணர்ந்த உத்தமப் புலவர்கள் ஒருங்கே அமர்ந்து தமிழ் வளர்த்த சங்கம் திகழ்ந்ததும் அந்தப் பாண்டிய நாட்டில்தான்.

அத்தகைய பழம் பெருமை வாய்ந்த பாண்டி நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் ஓட்டப்பிடாரம் என்னும் சிற்றூர் ஒன்று உளது. இதற்குத் தென்னளகை என் றும் பெயர். இவ்வூரில் உலகநாத பிள்ளை என்பவருக் கும் பரமாயி அம்மையாருக்கும் குமாரராகத் திருவாளர் வ. உ. சிதம்பரனார் 1872-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் தேதி வியாழக்கிழமை யன்று தோன்றினார்.

வ. உ. சிதம்பரனுர் முதன் முதலாகக் கல்வி பயின்றது ஒரு திண்ணைப் பள்ளிக் கூடத்திலேயே. 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பது போல இளமையிலேயே இவரது உள்ளத்தில் தமிழ் வித்து ஆழ்ந்து பதிந்து வரலாயிற்று. இவர் தூத்துக்குடி செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பள்ளியில் ஆங்கிலம் பயின்ருர். இவர் நுண்ணறிவுடையா ராதலால் ஒவ்வோராண்டும் பரீட்சையில் தவருமல் தேர்ச்சி பெற்று மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் வெற்றி யடைந்தார். பின்னர் வழக்கறிஞர் பரீக்ஷயிலும் தேர்ச்சி பெற்ருர். நாட்டுக் கல்வியில் நாட்டமுடையவராக இருந்தமையால் இவருக்குத் தமிழறிவு சிறந்து விளங்குவதாயிற்று.

சிதம்பரனுர் வழக்கறிஞர் தொழிலை முதலில் ஓட்டப்பிடாரத்திலேயே தொடங்கினுர். பின்னர் நண்பர்களின் வேண்டுகோளின்படி 1900-ம் ஆண்டில் தூத்துக்குடிக்குச் சென்று தொழில் நடத்தினுர். இவர் வயதில் இளைஞராயிருந்தும் பிற வழக்கறிஞர்கள் இவரைக் கண்டு பொருமை கொள்ளும் வண்ணம் தொழிலைத் திறம்பட நடத்தி வந்தார். இவருக்குக் கிரிமினல் தரப்பில்தான் பழக்கமும் அனுபவமும் அதிகம். இதில் இவருக்கு மிக்க தேர்ச்சியும் திறமையும் வாய்ந்த பிற வழக்காளர்களைவிட அதிக வருமானம் வந்து கொண்டிருந்தது. ஆனுல் இவர் இவ்விதம் தம் வக்கில் தொழிலில் வருமானம் ஒன்றையே பிரதானமாக நாடாமல், ஒழுக்கம் வாய்மை இவற்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இந்தச் சீரிய நோக்கு இவரிடம் வாழ்நாள் முழுவதும் காணப்பட்டது.

சிதம்பரனாருக்கு ஏழைகளிடத்தில் இரக்கம் அதிகம். கட்சிக்காரரின் நிலைமைக்குத் தக்கவாறு பணம் கேட்பாரேயன்றி வழக்கின் சிரமத்தைக் கவனிக்க மாட்டார். ஏழைகளுக்காக அவர்களிடம் பொருளை எதிர்பாராமல் வழக்கெடுத்துரைப்பதுண்டு. போலீசார் யார்மீதாவது தவறாக வழக்குத் தொடுத்ததாக தமது மனதுக்குத் தோன்றினால், அவருக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்வார். இதனால் போலீஸ் அதிகாரிகளின் ஆத்திரத்துக்கு ஆளாக வேண்டியிருப்பினும் அஞ்சமாட்டார். இவர் கடுஞ்சொல்லின்றிக் காட்சிக் கெளியவராக இருந்தார்.

சிதம்பரனாரின் தந்தையார் அவருக்கு 23-வது வயதில் திருச்செந்தூர் சுப்பிரமணியப் பிள்ளையவர்களின் குமாரத்தி வள்ளியம்மை என்ற மங்கை நல்லாளை மணஞ் செய்து வைத்தார். இவ்வம்மையார் இல் வாழ்க்கையில் தம் கணவருக்கு உற்றுழியுதவும் ஊன்று கோல்போலவும் அறுசுவை யுண்டி அளிக்கும் அன்னை போலவும் விளங்கினார்.

சிதம்பரனாரிடம் ஒருநாள் உறவினர் ஒருவர் ஒருகட்சிக் காரரைக் கொண்டுவந்து விட்டு அவர் சென்ற பிறகு கமிஷன் கேட்க இவர் இவ்விஷயத்தைப் பற்றித் தம் மனைவியாகிய வள்ளியம்மையாரிடம் கலந்து ஆலோசித்தார். இவ்வம்மையார், “கமிஷன் கொடுத்து வழக்கைப் பெறுவது இழிதொழில். பெற்ற பொருளைக் கட்சிக்காரரிடம் திருப்பிக் கொடுத்து விடுங்கள்” என்று இயம்பினார்.

சிதம்பரனர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கண்ணில்லாத ஞானியொருவரைத் தமதில்லத்தில் வைத்துக் காப்பாற்றி வந்தார். வள்ளியம்மையார் அந்தக் குருடருக்குத் தாமே அமுதூட்டுவார். இதையறிந்த அயலார் இழிகுலத்தோனை வீட்டில் வைத்து அமுதளித்து வருகின்றனரெனப் பழிச்சொல் பகர்வாராயினர். சிதம்பரனர் தமது மனைவியாரிடம் அந்தப் பழிச் சொல்லைக் கூறி மேற்செய்ய வேண்டியவற்றைப் பற்றி ஆலோசனை கேட்டார். அம்மையார், "தங்களுக்குத் தெரியாத விஷயமா? சந்நியாசிக்குக் குலம் ஏது? உயிர்களனைத்தும் ஒன்றாயிருக்கும்போது அவற்றைப் பகுத்துப் பார்ப்பது பேதமையன்றோ! உயிர்கள் தோறும் பரமன் வீற்றிருக்கின்றான் என்பது தாங்கள் அறியாததல்லவே! பழிப்பார் பழிக்கட்டும்; நாம் நமது மனச் சாட்சிப்படி நடப்போம்" என்றார்.

மேற்சொன்ன இரு நிகழ்ச்சிகளையும் பின்வரும் அகவற் பாவில் சிதம்பரனரே கூறுகிறார்.

உற்றான் ஒருவன் ஒருநல் கட்சியோடு
உற்றான்; நல்கினன், ஒளித்து வந்தபின்
"உரிய கமிஷனை உதவுக" என்றான்.
புரிவதறியாது பொள்ளெனச் சென்றுயான்
மங்கையை வினவினேன், மதியொடு பணிந்து, "நும்
செங்கைப் பொருளைக் கட்சிபால் கொடுக்க;
அதனைக் கொள்ளற்க" என்றாள்.

* * *

சிவத்தை யுணர்ந்த தேசிக னொருவன்
தவத்தால் என் இலம் தங்கப் பெற்றேன்.
ஊனக் கண்ணினை ஒழித்தவன் நின்றதால்

தானக் குறையினைத் தவிர்த்திட ஊட்டினள்.
குலத்தில் அன்னேன் குறைந்தவன் என்றென்
தலத்தினில் உள்ளோர் சாற்றினர் ; குற்றம்
கேட்டதும் அவ்வுரை கிளர் தேசிகனை
ஓட்டிடக் கருதி யான் உரமில்லாமையால்
அவளிடத்துரைக்க அடுக்களைச் சென்றேன்,
அவளெனைக் கண்டதும் அறைந்திடும் முன்னர்யான்,
" எல்லாம் உணர்ந்த என்னுயிர் நாத !
எல்லாம் கடவுளா யிருக்கக் கண்டும்
உருவம் முதலிய ஒன்றிலும் பேதம்
மருவுதல் இலாமை மலைபோல் கண்டும்
கற்பனையாகக் காணும் குலத்தின்
.............. .........................
பழமை பாராட்டிப் பகுத்துப் பிரித்தல்
நன்றோ? சொல்லாய் ! நவிலுவார் நவிலுக ;
என்றும் போற்பணி இயற்றுவோம் " என்றனள்
வடுக்கண் டொழிக்கும் மந்திரியனையாள்.

வள்ளியம்மையார் தமிழ்க் கல்வியில் சிறந்து விளங்கினர். திருக்குறளைப் பொருளுடன் ஓதி யுணர்ந்திருந்ததற்கு

வள்ளுவர் குறளை வளனுறப் படித்துக்
கொள்ளும் விதத்தில் கூறுவள் உரையுடன்

எனச் சிதம்பரனர் கூறுவதே சான்றாகும்.

இவ்விதக் குணநலன்களைப் பெற்றிருந்த வள்ளியம்மையார் 1901-ம் ஆண்டில் மரண மெய்தினர். அவ்வம்மையாரின் பிரிவால் பிள்ளையவர்கள் பெருங்கவலை யடைந்தார். வள்ளியம்மையாரின் அரிய குணங்களைப்பற்றி

அவர் பாடிய இரங்கற் பாக்கள் பல. அவற்றில் சில வருமாறு:

இல்லமதில் ஒன்றுமே யில்லை யென்னுள், எக்காலும்
நல்லுணவு தான்சமைத்து நல்குவாள், அல்லலொழித்து
இன்புறவே செய்திடுவாள், எப் பணியுமுள்ள முடன்
அன்புமிகு நல்லாள் அமைந்து.

* * *

என்னுடை நேயர்களும் ஏழைப்பரதேசிகளும்
என்னுடை வீடுவந்தால் ஏந்திழைதான்—தன்னுடைய
பெற்ருேர் வந்தார்கிளெனப்பேணி உபசரிப்பாள்
கற்ருேரும் உள்ளுவக்கக் கண்டு.

நன்றியறிதலையே நல்லொழுக்கமாகக் கொண்ட சிதம்பரனுர் முதல் மனைவியாரின்பால் காட்டும் நன்றிக் கறிகுறியாக மீண்டும் அவ்வம்மையாரின் குடும்பத்திலேயே திருமதி மீனுக்ஷியம்மை என்ற பெண்ணரசியை மணம் புரிந்து கொண்டார்.

மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிப்பதை அவர் அடியோடு வெறுத்தார். ஜாதிக்கொரு நீதி கூறும் சழக்கர்களையும் பிறப்புக் காரணமாக தீண்டாதவரெனக் கூறும் தீயர்களையும் கண்டிக்கப் பின்னை சற்றும் தயங்குவதில்லை. “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்,” “நல்ல குலமென்றும் தீய குலமென்றும் சொல்லள வல்லால் பொருளில்லை” என்றும் முன்னேர் மொழிந்த சொல்லின் பொருளை முற்றும் உணர்ந்திருந்தார். கடவுள் படைப்பிலே அனைவரும் சமம் என்ற உயரிய கருத்தே இவரது உள்ளத்தில் குடிகொண்டிருந்தது.

ஆதிதிராவிட அன்பரொருவரை, தமது இன்னுயிர்த் துணைவராகக் கொண்டு தமிழ்க் கல்வியைக் கற்பித்தார். அவர்தான் சாமி சகஜானந்தர். பிள்ளை சிறையிலிருந்து மீண்டதும் சிலகாலம் சென்னையில் வசிக்க நேர்ந்தது. அப்போது ஒருநாள் சென்னை ரிப்பன் அச்சு யந்திரசாலையில் சிதம்பரனாரும், சாமி சகஜானந்தரும் முதன்முதலாக ஒருவரையொருவர் சந்தித்து உரையாட நேர்ந்தகாலையில், பிள்ளை அவரது சாதியை விசாரித்தாராம். "நான் நந்தனார் வகுப்புப் பிள்ளை" யென சகஜானந்தர் பதிலளிக்க, உடனே சிதம்பரனார் சகஜானந்தரின் இரு கைகளையும் இறுகப் பிடித்து, "உண்மையைக் கூறியதால் நீர்தான் உண்மை அந்தணர்" எனக் கூறி, சகஜானந்தரைத் தமதில்லத்திற்கு வரச் செய்தார். பின்னர் பல ஆண்டுகள் அவரைத் தம் வீட்டிலேயே வைத்திருந்து, உணவளித்துத் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய சிறந்த தமிழ் நூல்களைப் பயிற்றுவித்தார். சிதம்பரனார் சென்னையைவிட்டு நீங்கி, மீண்டும் தமது சொந்த ஊராகிய ஒட்டப்பிடாரம் சென்றபோது சகஜானந்தரையும் தம்முடன் கூட்டிச் சென்றார். தமது உறவினர் இல்லங்களில் நடக்கும் விழாக்களுக்குச் சகஜானந்தரையும் தம்முடன் அழைத்துச் செல்வார். யாராவது சகஜானந்தரின் குலத்தைக் குறித்துக் கேட்டால், "இவரொரு துறவி; இவரை சாதி விசாரிக்கப் படாது" என்பாராம். "தமது பிள்ளையைப் போன்று என்னை வளர்த்தார், அப்பெருந்தகை வள்ளல்," எனச் சகஜானந்தரே கூறுகின்றாரெனில் வேறென்ன சான்று

வேண்டும்? திரு. சகஜானந்தர், சிதம்பரனாருக்கு எழுதிய கடிதமொன்றில்,

தாமின் புறவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்று ரெனக்கழறும்—மாமறைக்குச்
சான்றுச் சிதம்பரமென் தந்தை நினைக்கண்டேன்
நான்மாறென் செய்வேன் நவில்.

*   *   *

கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டில் என்றனுக்கு
மெய்ம்மாட்டி நின்றருளும் வித்தகனே—செம்மறையின்
பாவனைத்துஞ் சிந்தை பதித்தேன், சிதம்பரமென்
தேவ! நினது இன்னருளால் தேர்ந்து.

*   *   *

சாவா மருந்தெனவே தற்பரனார் வள்ளுவர்செய்
பாவால் அறிவு எனக்குப் பாலித்த தேவா!
சிதம்பரமென் சற்குருவே! சிந்தையினில் நின்னின்
பதம்பெற்றேன் என்றும் பணிந்து.

எனச் சிதம்பரனாரைத் தந்தையாய்க், குருவாய்த், தெய்வமாய்க் கருதி அஞ்சலி செய்கிறார்.

# சுதேசிக் கப்பல் கம்பெனி

மரக்கலங்களின் துணையால் திரைகடலோடியும் திரவியந் தேடுவதில் திறமை பெற்றிருந்தனர் பண்டைத் தமிழர். கப்பல் ஓட்டும் கலை தமிழர்க்கே உரித்தாயிருந்தது என்றால் அது மிகையாகாது.

வாணிபத்திற்கே யன்றிப் பகை மன்னரைப் புறங் காணப் படைகொண்டு செல்லவும், மரக்கலங்களைப் பயன்படுத்தினர் பண்டைத் தமிழ் மன்னர். சோழ மன்னர்கள் பலம் வாய்ந்த கப்பற் படையை உடையவரா யிருந்தனர். ராஜ ராஜ சோழன் லட்சக்கணக் கான தமிழ் வீரர்களைக் கப்பல்களிற் கொண்டு சென்று இலங்கைத் தீவை வென்றதாகச் சரித்திரம் கூறுகிறது.

இவ்வாறு வாணிபத்தில் பொருளையும் போரில் புகழையும் அடைவதற்குப் பண்டைத் தமிழர் கப்பல் களைப் பயன்படுத்தினர். பின்னாளில் இந்தியா ஆங் கிலேயருக்கு அடிமைப்பட்டது. நமது நல்வாழ்வில் நாட்டமில்லாத அவ்வன்னியர், நம்மிடமிருந்து அரசைப் பறித்ததோடு நில்லாமல் பொருள் தேடும் வழிகள் அனைத்தையுங்கூட அபகரித்தனர். அந்த வகையில் தமிழரின் கப்பல் வாணிபமும் ஆங்கிலேயரின் வசமாயிற்று.

இந்தியாவில் நில ஆதிக்கமும், கடல் ஆதிக்கமும்பெற்ற ஆங்கிலேயர், நமது தமிழகத்தின் செல்வத்தையெல்லாம் கொள்ளை கொண்டு செல்வாராயினர்.

தமிழ் இனத்துக்குற்ற இந்தக் கேவல நிலை கண்டு சிதம்பரனாரின் நெஞ்சு பொறுக்கவில்லை. ஆயினும் என் செய்வார்? ஆட்சித் திறனும், சூட்சி அறிவுங் கொண்டு அனைத்துலகும் ஆணை செலுத்தும் ஆங்கிலேயர் முன்பு அவர் எம்மாத்திரம்? ஏன்? தமிழ் மக்கள் அவ்வளவுபேரும் ஒருங்கு சேர்ந்து போராடினாலுங்கூட ஆங்கிலேயர் நம்மிடமிருந்து பறித்த வாணிபத்தைப் பற்றுதல் எளிதோ? இல்லை; இல்லை.

ஆகவே, தமிழரது உரிமையைப் பறித்து உடைமையையுங் கொள்ளை கொள்ளும் வெள்ளை வர்த்தகரை விரட்டியடிக்க எண்ணியவராய்க் காலத்தை எதிர்ப்பார்த்திருந்தார் சிதம்பரனார்.

இங்நிலையில்தான் இந்திய கண்டத்தின் வடக்கே வங்கப் பிரிவினைக் கிளர்ச்சி வலுக்கலாயிற்று. ஒன்றுபட்ட ஒரே தேசிய இனமாக இருந்த வங்காளியரை இந்து என்றும், முஸ்லிம் என்றும் பிரித்து அவர்களது தாயகமாகிய வங்க நாட்டையும் இந்து வங்காளம், முஸ்லிம் வங்காளம் என்று இரண்டாகத் துண்டாட நினைத்தார் வைசிராய் லார்டு கர்சான்.

குடிமக்களிடையே ஒற்றுமையை உண்டாக்குவதே அரசாங்கத்தின் பொறுப்பு. ஆனால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இதற்கு நேர்மாறாக மக்க

ளிடையே ஒற்றுமையைக் குலைத்து வேற்றுமையை உண்டாக்குவதையே தனது வேலையாகக் கொண்டு விட்டது. இதற்கு வங்காளப் பிரிவினையே சான்று.

ஆனால் ஏகாதிபத்தியத்தின் இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு வங்காளிகள் இரையாகவில்லை. அவர்கள் இந்துவென்றும் முகம்மதியரென்றும் பிரியாது, வங்காளிகள் அனைவரும் ஒரே இனம் என்ற உணர்ச்சியுடன் ஒன்றுபட்டுப் பிரிவினையை எதிர்த்துப் போராடினர். தூங்கும்பொழுதுகூடத் தாய்நாட்டின் தொண்டையே நினைத்திடுபவரன்றோ வங்காளிகள்?

வங்கப் பிரிவினை எதிர்ப்புப் போராட்டமானது வங்காளத்தோடு நிற்காமல் இந்தியா எங்கணும் பரவியது. இந்திய மக்கள் வங்கப் பிரிவினையை எதிர்க்கும் பொருட்டு அந்நிய ஆடை பகிஷ்கார இயக்கத்தை ஆரம்பித்தனர். அந்நிய ஆடைகள் மலைமலையாகக் குவிக்கப்பட்டு நெருப்புக்கிரையாக்கப்பட்டன. பரதேச ஆடையில் பற்றி எரிந்த தீயானது எவ்வளவு தூரம் அடிமைப்பட்ட மக்களின் அகத்தே சினத் தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது என்பதைக் காட்டிற்று. ஏற்கனவே காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிதம்பரனார் சீற்றங் கொண்ட சிங்கமென எழுந்தார். நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழில் நடத்திவந்த அவர் நாட்டுரிமைப் போரில் நாட்டங் கொண்டார்.

தம்மிடமிருந்த அன்னிய ஆடைகள் அனைத்தையுந் தீ வைத்துக் கொளுத்தினர். எரிவது ஆடையன்று;

ஏகாதிபத்தியமே என்று எண்ணி மகிழ்ந்தார். இனி அன்னிய பொருள்கள் எவையும் வாங்குவதில்லை என்று உறுதிபூண்டார். அன்னிய துணி தரித்தவனைக் கண்டாலும் அவருக்கு உடனே கண் சிவந்துவிடும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வங்க மண்ணிலே போர் துவங்கிவிட்டதைக் கண்டு, பூரிப்படைந்தார்; தாம் கருதிய காரியங் கைகூடிவிட்டதாகக் களிப்பெய்தினர். இனி தமிழர்களைத் தட்டி எழுப்பி ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரின் இரண்டாவது முனையைத் தமிழ்நாட்டில் துவக்க எண்ணினர். வங்காளியரைப் போன்று தமிழ் மக்களும் தங்கள் மண்ணில் ஆங்கில சாம்ராஜ்யத்திற்கு அழிவுதேட வேண்டுவது அவசியமென உணர்ந்தார்.

எனவே, வீரத்திற்கு விளை நிலமான பாண்டிநாட்டில் படை திரட்டினர்! க்ஷவரத் தொழிலாளி, சலவைத் தொழிலாளி, வண்டி ஓட்டுவோர் ஆகிய பாட்டாளி மக்கள் அனைவரும் அவரது படையில் சேர்ந்தனர். கிராமத்திற்குக் கிராமம், வீதிக்கு வீதி கூட்டங்கள்போட்டுப் பேசி மக்கள் மனத்தில் சுதந்தரக் கனலை மூட்டினர்.

ஆங்கிலேயர் இந்தியாவில் புகுந்து நமது அரசுரிமையைப் பறித்தது இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டிக் கொழுக்கவே அல்லவா? சிதம்பரனர் இதை நன்குக அறிந்தவர். ஆதலால் அவர் ஆங்கிலேய வணிகக் கூட்டத்தின்மீதே தமது முதல் தாக்குதலை ஆரம்பித்தார்.

தூத்துக்குடிக்கும் சிங்களத்திற்கும் இடையில் வாணிபப் பொருள்களைப் "பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி"யின் கப்பல்களே ஏற்றுமதி இறக்குமதி செய்து வந்தன. அக்கம்பெனி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆணி வேரான வெள்ளை வர்த்தகருடையது. நாட்டில் தோன்றிய சுதேசி இயக்கத்தை அவ்வெள்ளையர் கம்பெனி வெறுத்தது. மேலும், அக்கம்பெனி இந்திய வியாபாரிகட்குப் போதிய வசதி அளிக்கவில்லை என்ற எண்ணம் இந்திய வியாபாரிகளிடையே பரவியது. எனவே, தூத்துக்குடி இந்திய வர்த்தகரின் ஆதரவு கொண்டு சிதம்பரனார் 1906-ம் ஆண்டில் "சுதேசிக் கப்பல் கம்பெனி" யொன்றைத் தோற்றுவித்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்த பாலவநத்தம் ஜமீன்தார் திரு. பாண்டித்துரைச் சாமித் தேவரைக் கம்பெனியின் தலைவராக்கினார். தாம் செயலாளராக இருந்து காரியங்களை நடத்தி வந்தார். தூத்துக்குடி வியாபாரிகள் தங்களாலானவரை சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பொருளுதவி புரிந்தனர். எனினும், அது போதுமானதாயில்லை. ஏகாதிபத்தியத்தின் சக்தி முழுவதையுங் கொண்டு நடத்தப்படும் வெள்ளையர் கம்பெனிமுன் இந்த உதவி எம்மாத்திரம்! எனவே, சிதம்பரனார் வடநாட்டில் பலவிடங்களுக்குச் சென்று பொருள் தேடினார்.

"ஆங்கிலேயர் நம் அரசைப் பறித்தது பொருள் பறிக்கவேயாம். ஆகவே, பொருள் பறிக்கும் வாணிபக் கப்பலுக்கு வேட்டு வைத்தாலொழிய அவ்வாங்கிலேயர் இந்தியாவைவிட்டு வெளியேறார்" என்று முழக்கஞ் செய்தார்.

சிதம்பரனாரின் வீர உரைகளைக் கேட்ட வடநாட்டு வணிக மக்கள் சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பங்கு தாரர்களாகச் சேர்ந்தனர். சிதம்பரனார் கப்பல் கம்பெனிக்குப் பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட்டு வட இந்தியா செல்லப் புறப்பட்டபோது, "மீண்டும் என் தமிழகம் திரும்பும்பொழுது கப்பலுடன் திரும்புவேன்; இல்லையேல், அங்கேயே கடலில் வீழ்ந்து மாள்வேன்" என்று சபதஞ் செய்து சென்றார். என்னே இவரது மனவலிமை!

அவர் பம்பாய்க்குச் சென்றிருந்தபொழுது ஊரில் அவரது ஒரே புதல்வன் நோய்வாய்ப்பட்டு அபாய நிலையை எய்தினான். மனைவியாரும் பூர்ண கர்ப்பவதியா யிருந்தார். சிதம்பரனாரின் நண்பர்கள் அவருக்குச் செய்தி அறிவித்து ஒருமுறை ஊர் வந்து போகுமாறு வேண்டினர். இடுக்கண் வந்தபோதும் அஞ்சுத லறியா நெஞ்சுரன் உடையவராதலால், "என் மனைவியையும் மகனையும் இறைவன் காப்பான்; என்னைவிட அவன் சக்தி வாய்ந்தவன்" என்று பதிலளித்தார். தமது குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமையைவிட இந்திய சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய சேவையே பெரிதென நினைத்தார் அப்பெரியார்.

பம்பாய் சென்ற சில மாதங்களுக்குப் பின்னர் பிள்ளையவர்கள் கப்பலுடன் தூத்துக்குடித் துறைமுகம் வந்து சேர்ந்தார். கப்பலின் பெயர் 'லாவோ' என்பதாகும். 'காலியா' என்ற மற்றொரு கப்பலை திரு. எஸ். வேத

மூர்த்தி முதலியார் பிரான்சுக்கு நேரில் சென்று வாங்கி வந்தார்.

சிதம்பரனார் தாம் செய்த சபதம் மாறாது கப்பலுடன் வந்தமை கண்டு தமிழ் மக்கள் பரவசமெய்தினர். 'வீரச் சிதம்பரம் வாழ்க' என விண்ணதிர வாழ்த்தினர். அரசியல்வாதிகள், "எழுந்தது போராட்டம், வீழ்ந்தது ஏகாதிபத்தியம்" என்று இறுமாந்து கூவினர்.

சுதேசிக் கப்பல் கம்பெனி நாளுக்குநாள் வலுப் பெற்று வளர்ந்து வந்தது. சுதேசிக் கப்பலிலேயே பொருள்களை ஏற்றுவதென மக்கள் விரதங் கொண்டு அதை நடைமுறையில் நிறைவேற்றலாயினர். முதலில் ஒருசில வர்த்தகர்கள் வெள்ளையர்களின் ஆசைமொழியில் சிக்கி, கட்டுப்பாட்டை மீறி அன்னியர் கம்பெனியை ஆதரித்தனர். எனினும் சிதம்பரனாரின் வேண்டுகோளுக்கிணங்கி அவர்களும் நல்வழிப்பட்டு நாட்டுரிமையில் நாட்டங் கொண்டனர். வர்த்தகர்கள் மட்டுமன்றி பிரயாணிகளும் பரதேசிக் கப்பல் கம்பெனியைப் பகிஷ்கரித்து சுதேசக் கப்பலில் பிரயாணஞ் செய்தனர்.

சுதேசக் கப்பல் கம்பெனியின் செல்வாக்கு பெருகுவதைக்கண்ட வெள்ளையர்கள் தங்கள் கம்பெனியின் கப்பல் கட்டணங்களை வெகுவாகக் குறைத்தனர். இந்திய வர்த்தகரிடம் தரகர்களை அனுப்பிக் கெஞ்சினர். ரெயில்வே நிலையத்தில் கையாட்களை அமர்த்தித் தங்கள் கப்பல்களில்தான் சுதேசிச் சாமான்கள் போவ

தாகப் பொய்ப் பிரசாரமுஞ் செய்தனர். அதனுல் சுதேசிக் கம்பெனியாரும் ரெயில்வே நிலேயத்தில் தொண்டர்களே நிறுத்தி வர்த்தகர்களுக்கும் பிரயாணி களுக்கும் உண்மையைக் கூறி தங்கள் கம்பெனிக்கு ஆதரவு தேடினர்.

போட்டியிட்டும், கட்டணத்தைக் குறைத்தும், பொய்ம் மொழிகள் புகன்றும் காரியம் கைகூடாமற் போகவே வெள்ளேக் கம்பெனியார் தங்கள் கப்பலில் பிரயாணிகள் கட்டணம் ஏதுமின்றி இலவசமாகச் செல்லலாமென்று அறிக்கை விடுத்தனர். எனினும் பயனில்லே. இந்த மாய வித்தைகளினுல் மக்களின் மன உறுதியைக் குலேக்க முடியவில்லே. அவர்களது நாட்டுப்பற்ருகிய தீ எழுநாவிட்டு எரியத் தொடங் கியது.

மக்களின் மன உறுதியை அறிந்த பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி முதலாளிகள் சிதம்பரனுரை அணுகி சுதேசிக் கப்பல் கம்பெனியைவிட்டு விலகுவதாயின் லக்ஷம் ரூபாய் தருவதாக மன்ருடினர்.

> "வீரசுதந்திரம் வேண்டி நின்ருர்—பின்னர்
> வேறென்று கொள்வாரோ"

என்று பாரதியார் பகர்ந்ததுபோல் நாட்டின் விடுதலேப் போரில் உயிரையே அர்ப்பணிக்கத் துணிந்த அந்த வீரர் பொருளுக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கத் துணிவாரோ? வெள்ளேயரின் வஞ்சக வலேயில் சிக்க மறுத்து அவர்களே விரட்டி விட்டார் அவ்வீரர்.

ஈன்றாள் பசிகாண்பா ளாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

என்ற வள்ளுவரின் குறள் மொழியை குருமொழியாகக் கொண்டவரன்றோ சிதம்பரனார்?

சுதேசிக் கப்பல் கம்பெனி நாளுக்குநாள் உரம் பெற்று வந்தது. இந்தியாவின் வடக்கே வங்கப் போர்முனையில் ஆங்கில சாம்ராஜ்யத்தின் அரசியல் அதிகாரம் ஆட்டங்கண்டு விட்டதென்றால், தெற்கே தமிழகப் போர்முனையில் ஆங்கிலேயரின் வர்த்தகச் சுரண்டலுக்கு முடிவு கட்டிவிட்டார் சிதம்பரனார். ஆகவே சாம்ராஜ்யமென்னும் நச்சு மரமானது இந்திய மண்ணில் வேருடன் விழுந்து விடுமோ என்று அதிகார வர்க்கம் அச்சங் கொண்டது.

# அரசியல் பிரவேசம்

சிதம்பரம் பிள்ளை சுதேசியத்தின் மறுமலர்ச்சிக்குச் சேவை செய்வதோடு நின்றுரில்லை. அரசியலிலும் கலந்து பணியாற்றினுர். நீண்ட கால அடிமைத் தனத்தின் பயனுக, இந்திய நாட்டின் செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே அறமாகித் தீர்ந்து விட்டதைக் கண்டு பிள்ளையின் மனம் பதைத்தது. இங்கிலையிலிருந்து நாட்டை மீட்டு, குடிமக்கள் சொன்னபடி நடக்கும் குடியரசை யமைப்பதே இனித் தமது வேலையென எண்ணினுர். அவ்வெண்ணத்தை நிறைவேற்ற இந்திய மக்களின் தாய்ச் சபையாம் காங்கிரஸ் மகா சபையில் சேரலானுர்.

சிதம்பரம் பிள்ளை ஆண்டுதோறும் கூடும் காங்கிரஸ் மகா சபைக்குப் பிரதிநிதியாகச் சென்றுர். அந்நாளில் காங்கிரஸில் பாமரமக்களின் ஆதிக்கம் வலுக்கவில்லை. பணக்காரர்களும், வக்கீல்களும் அம்மகா சபையை நடத்தி வந்தனர். காங்கிரஸில் இரண்டு கட்சிகள் இருந்தன. ஒன்று மிதவாதம்; மற்றொன்று தீவிர வாதம். தீவிர வாதிகளின் தலைவர் திலகர் பெருமான். பிள்ளை தீவிர வாதிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர். மேலும், அவர் திலகரைத் தமது அரசியல் குருவாகக் கருதினுர். காங்கிரஸில் மிதவாதிகளே எண்ணிக்கை

யிலும் செல்வாக்கிலும் மிகுந்திருந்தனர். இவர்கள் ஆண்டுதோறும் காங்கிரஸ் சபையைக் கூட்டி, ராஜ வாழ்த்துக்குப் பின் அழகான தீர்மானங்கள் நிறை வேற்றுவதும் சரமாரியாகப் பேசுவதும் தவிர, செயலில் எதையுஞ் செய்து காட்டத் துணிவு கொண்டார்களில்லே. சுயராஜ்யம் என்ருல் வெள்ளே யருக்குப் பதில் கறுப்பர் ஆள்வது என்பதே, அவர் களது வியாக்கியானம்.

1907-ம் ஆண்டு சூரத் நகரில் கூடிய காங்கிரஸ், மித வாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பூர்த்தியுருமல் குழப்பத்தில் முடிந் தது. அதன் பின்னர் திலகரின் தலைமையில் தீவிர வாதிகள் ஒன்று கூடித் தங்கள் முற்போக்குக் கொள் கையை நாடெங்கும் பரப்பித் தேச மக்களேச் சுதந்திரப் போருக்குத் தயார் செய்வதெனத் தீர்மானித்தனர். திலகர், தமிழ் நாட்டில் தமது கொள்கைக்கு ஆதரவு தேடும் பொறுப்பு யாவையும் பிள்ளேயிடமே ஒப்ப டைத்தார். "தென்னுடு முழுவதிலும் சிதம்பரம் பிள்ளே ஒருவர் தான் வீரர் என்பது திலகரின் கருத்து" என ராஜாஜி சென்னேயில் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறி ஞர். ஆகவே, அத்தகைய நம்பிக்கை வாய்ந்த சீடரிடம் திலகர் தமிழ் நாட்டை ஒப்படைத்ததில் ஆச்சரிய மொன்று மில்லே யல்லவா?

அன்னிய ஆட்சியினல் விளேயும் தீமைகளேப் பொதுமக்களிடம் விளக்கிக் கூறி, அவர்களேத் தேசாபிமானிகளாகச் செய்யும் நோக்கத்துடனும்,

சிதம்பரம் பிள்ளையவர்களின் முயிற்சியால் 1908-ம் ஆண்டில் திருநெல்வேலியில் "தேசாபிமான சங்கம்" ஒன்று நிறுவப்பட்டது. இச்சங்கத்தார் அடிக்கடி பொதுக் கூட்டங்கள் கூட்டிச் சுதேசிப்பற்று, அன்னிய சாமான் விலக்கு, தேசியக் கல்வி ஆகியவற்றின் அவசியத்தை விளக்கிப் பிரசாரஞ் செய்து வந்தனர். சங்கம் நாளுக்கு நாள் வளர்பிறைபோல் வளர்வதாயிற்று.

இச்சமயத்தில் துறவு பூண்டிருந்த சுப்ரமணிய சிவா திருநெல்வேலிக்கு வந்தார். சிவா சிறந்த தமிழறிஞர்; பழுத்த தேச பக்தர்; அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மையாளர். சிவாவின் வருகையையறிந்த தேசாபிமான சங்கத்தார் அவரைத் தங்கள் பிரசாரத்திற்குப் பயன் படுத்திக் கொண்டனர். சிவா பொதுக் கூட்டங்களில் தொடர்ந்து பேசி வந்தார். சிவாவின் சொற்பொழிவைக் கேட்க மக்கள் வெகு தூரத்திலிருந்துகூடத் திரள் திரளாக வந்தனர்.

சிவா தூத்துக்குடிக்கும் வந்து பலப் பொதுக் கூட்டங்களிற் பேசினர். இக்காலத்தில் சிதம்பரனர் சுதேசிக் கப்புல் கம்பெனியின் செயலாளராக விருந்தால் கம்பெனி வேலை முடிந்ததும் மாலை நேரங்களில் தூத்துக்குடிக் கடற்கரையில் நடைபெறும் பொதுக் கூட்டங்களுக்கு வந்து சிவாவின் பேச்சைக்கேட்டு அகமகிழ்வார். "கற்றாரைக் கற்றரே காமுறுவர்" என்னும் ஆன்றோர் மொழிப்படிச் சிதம்பரனரும், சிவாவும் பிரியா நட்புக் கொண்டனர்.

நாளடைவில் பொது மக்களின் வற்புறுத்தலின்பேரில் சிதம்பரனாரும் பொதுக் கூட்டங்களிற் பேசலானார். சிவாவின் பேச்சில் நெருப்புப் பொறி பறக்கும். சிதம்பரனார் பேச்சு சூறைக் காற்றுபோல் சுழற்றியடிக்கும். ஏற்கெனவே எரிந்துக் கொண்டிருக்குந் தீயுடன் காற்றுஞ் சேர்ந்தால் கேட்கவேண்டுமோ? மக்களின் மனத்தில் நாட்டுப் பற்று நன்கு சுடர் விட்டெரியலாயிற்று. பலவித இன்னல்களுக்கும் ஆளாகியிருந்த தொழிலாளர்களுக்கு இவர்களிருவரின் ஆவேசப் பேச்சுக்கள் புத்துணர்ச்சியை யுண்டாக்கின.

# சிறைப்படல்

அக்காலத்தில் காங்கிரஸின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய பிபின் சந்திர பாலர் சிறையி லிருந்து விடுதலை பெறும் நாளாகிய 1908-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9-ந் தேதியைத் திருநெல்வேலி ஜில்லா வெங்கும் திருநாளாகக் கொண்டாடுவதெனத் தேசாபி மான சங்கத்தார் தீர்மானித்தனர். இதையறிந்த சர்க்கார் அதிகாரிகள் சஞ்சலங் கொண்டனர். மார்ச்சு 9-ந் தேதியன்று தூத்துக்குடியில் ஊர்வலமோ,பொதுக் கூட்டமோ நடத்தக்கூடாதென்று மாஜிஸ்திரேட் தடையுத்தரவு பிறப்பித்தார். மக்கள் தங்கள் நலத் தைக் கோரிப் பாடுபட்ட தலைவர் சிறைக் கஷ்டத்தி லிருந்து விடுபட்டதற்குச் சந்தோஷத்தைத் தெரிவிக் கும் கொண்டாட்டங்களை நடத்துவதைக் கூட அனு மதிக்க அதிகார வர்க்கம் மனங் கொள்ளவில்லை. பிபின் சந்திர பாலர் ஏகாதிபத்திய எதிரியல்லவா?

மாஜிஸ்திரேட், சிதம்பரம் பிள்ளையை நேரில் வர வழைத்து பாலர் விடுதலைக் கொண்டாட்ட சம்பந்த மாக நடைபெற விருக்கும் ஊர்வலங்களிலோ, பொதுக்கூட்டங்களிலோ கலந்து கொள்ளக் கூடா தென எச்சரிக்கை செய்தார். அம்மாதிரி எழுத்து மூலம் உத்தரவு தரும்படி கேட்டதற்கு மாஜிஸ்திரேட் மறுத்துவிட்டார்.

பிள்ளையின் தீவிரப் போக்கையும் அதிகாரிகளின் அடக்கு முறையையுங் கண்ட சுதேசிக் கப்பல் கம்பெனி நிர்வாகிகள் இதனுல் யாது விளையுமோ என அச்சங்கொண்டனர். உடனே நிர்வாக போர்டின் கூட்டத்தைக் கூட்டி அதில், கம்பெனியின் நன்மையைக் கருதி சிதம்பரனுர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடலாகாதெதன தீர்மானித்தனர். வளர்த்த கடா மார்பில் பாய்வது போன்ற இந்த நடவடிக்கையைக் கண்டு பிள்ளை மனம் வருந்தினுர்.

•

சுதேசிக் கம்பெனி பங்குதாரர்களில் மிகப்பெரும் பாலோர் லாபத்தைக் கருதியே சேர்ந்தவர்கள். அவர்கள் நாட்டில் கொழுந்து விட்டெரிந்த சுதேசி இயக்கத் தீயில் சுயநலக் குளிர்காய நினைத்தார்கள். ஆனுல் கம்பெனியைத் தோற்றுவித்த சிதம்பரனுரின் எண்ணமோ வேறுவிதமாக இருந்தது. அவர் கம்பெனியைத் துவக்கியது தமக்குப் பொருள் சேர்ப்பதற்கோ புகழ் சேர்ப்பதற்கோ அல்ல. இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கும் வெள்ளையர்கள் கூட்டத்தை இந்தியாக் கண்டத்தை விட்டு விரட்டுவதற்காகவே யாகும்.

> நாட்டில் எங்குஞ் சுதந்தர வாஞ்சையை
> நாட்டினுய், கனல் மூட்டினுய்
> ஓட்டம் நாங்கள் எடுக்க வென்றே கப்பல்
> ஓட்டினுய் பொருள் ஈட்டினுய்.

என்று கலெக்டர் விஞ்ச் கூறியதும் அதற்குப் பதிலாக

பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு
போகவோ : நாங்கள் சாகவோ
அழுது கொண்டிருப்போமோ ஆண்பிள்ளைகள் நாங்கள்
அல்லமோ உயிர் வெல்லமோ.

எனச் சிதம்பரனுர் செப்பியதாக பாரதியார் பாடியிருப்பதே தக்க சான்றுகும்.

பிள்ளையவர்கள் சுதேசக் கப்பல் கம்பெனியின் மூலம் சுதந்தரப் போருக்கு துணைபுரிந்தார். எனவே ஏகாதிபத்தியம் அவர் மீது வலுவில் போர் தொடுத்தது. எனினும் சிதம்பரனுர் கொஞ்சமும் அஞ்சவில்லை. கலெக்டரின் அதிகார ஆணையையோ காசாசை கொண்ட கம்பெனி நிர்வாகிகளின் கட்டளையையோ அவர் சிறிதும் மதிக்கவில்லை.

முன்ஏற்பாட்டின்படியே மார்ச்சு 9-ந்தேதியன்று பிபின்சந்திர பாலரின் விடுதலைத் திருநாள் திருநெல்வேலியில் சிறப்பாக நடைபெற்றது. கலகம் ஏதும் நிகழாதிருக்கப் போலீஸ் அதிகாரிகள் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். சிதம்பரனும் சிவாவும் கலெக்டரின் தடையுத்தரவை மீறி பதினுயிரக்கணக்கான மக்களடங்கிய ஊர்வலத்தில் கலந்துகொண்டதுடன் பொதுக்கூட்டத்திலும் பேசினுர்கள்.

இவ்விதமாகத் திருநெல்வேலி ஜில்லா வங்காளத்தையும் மிஞ்சி நின்றது. எங்குஞ் சுதந்திரப் பேச்சும் வந்தேமாதர முழக்கமும் ஒலித்தன. வெள்ளையரைக் கண்டால் வெறுப்பு : அதிகாரிகளைக் கண்டால் ஆத்

திரம்: அன்னிய ஆடை தரித்தவரைக் கண்டால் கோபம். அந்நியக் கப்பல் கம்பெனியை ஆதரிப்பவர்களுக்கும் அந்நிய ஆடையை அணிந்தவர்களுக்கும் சுதேசிக் கிளர்ச்சியை அடக்குவதில் அதிகாரிகளுடன் ஒத்துழைக்கும் தேசத் துரோகிகளுக்கும் வண்ணார் துணிவெளுக்கமாட்டார்: அம்பட்டர் க்ஷவரஞ் செய்ய மாட்டார்: பலகாரக் கடைக்காரர் பலகாரந் தர மாட்டார்: வண்டிக்காரர் வண்டி ஓட்டமாட்டார். இவ்வாறு திருநெல்வேலி ஜில்லாவெங்கும் சிதம்பரனார் இட்டது சட்டமாயிற்று. இவர் வார்த்தைக்கு மறு வார்த்தை கூறுவாரில்லை. இவரது ஆணை பிறந்தால் அனலையும் விழுங்க மக்கள் தயாரா யிருந்தனர். சிதம்பரனாரின் தீவிரப் போக்கையும் பொதுமக்களிடையே அவருக்குள்ள செல்வாக்கையுங் கண்டு அதிகாரிகள் அச்சங்கொண்டனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் நிலைத்திருக்கச் சிதம்பரனாரைச் சிறைசெய்தே தீர வேண்டுமென்று முடிவு செய்தனர். தூத்துக்குடியிலேயே கைது செய்வதென்றால், ஜனங்கள் ஆத்திரங்கொண்டு கலகம் விளைப்பரென்று அஞ்சிய கலெக்டர் விஞ்ச், திருநெல்வேலிக்கு வந்து தம்மைச் சந்திக்க வேண்டுமென சிதம்பரனாருக்கும் சிவாவுக்கும் ஆணை அனுப்பினார். அதன்படி சிதம்பரனாரும் சிவாவும் மார்ச்சு மாதம் 12-ந் தேதி திருநெல்வேலி சென்று கலெக்டரைக் கண்டு பேசினர். திருநெல்வேலி ஜில்லாவை விட்டு உடனே வெளியேறச் சம்மதிக்க வேண்டுமென்றும், அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுவதில்லையென நன்னடக்கை ஜாமீன் தரவேண்டுமென்றும் சிதம்பரனாரிடம் கலெக்டர் கூறினார். இச்சமயத்தில் சிதம்பரனாருக்கும் கலெக்

டருக்கும் கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது. சிதம்பரனார் ஜாமீன் தரவும், ஜில்லாவைவிட்டு வெளியேறவும் தம்மால் இயலாதென்றும், வேண்டுமானால் தம்மைக் கைது செய்யலாமென்றுங் கூறினார். உடனே சிதம்பரனாரும், சிவாவும் கலெக்டர் முன்னிலையிலேயே கைது செய்யப்பட்டார்கள். சிதம்பரனாரின் இல்லத்தையும் போலீசார் சோதனைசெய்து சில கடிதங்களைக் கைப்பற்றினர்.

# கொந்தளிப்பு

சிதம்பரனுர் கைது செய்யப்பட்ட செய்தி திருநெல் வேலி முழுவதும் காட்டுத்தீபோல் சில விநாடிகளுக் குள் பரவியது. மறுநாள் (மார்ச்சு மாதம் 13-ந் தேதி) வர்த்தகர்கள் கடையடைத்தனர். மாணவர்கள் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லாது பவனி வந்தனர். இவ்வித மாக ஊர் முழுவதும் கடையடைப்பும் கொந்தளிப்பு மாக யிருந்தன. தேச பக்தர்களும், தேசீய ஸ்தாபனங்க ளும் சிதம்பரனுரைக் கைது செய்ததைக் கண்டித்துப் பொதுக்கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தினர். நகரில் 'அமைதியைக் காக்க'ப் போலீஸ் படை தரு விக்கப்பட்டது. தொழிலாளர்கள் சிறுசிறு கூட்டங் களாகச் சேர்ந்து நகரில் பல பாகங்களிலும் ஊர்வலஞ் சென்றனர். வீதியிலிருந்த முனிசிபல் விளக்குகளெல் லாம் பிடுங்கி எறியப்பட்டன. முனிசிபல் மண்ணெண் ணெய்க் கிடங்கு தீக்கிரையாயிற்று. சிலர் முனிசிபல் காரியாலயத்திற்குள் புகுந்து அதிலுள்ள பொருள்களை யெல்லாம் வெளியில் கொண்டுவந்து நெருப்பிட்டுக் கொளுத்தினர். சர்ச்மிஷன் கல்லூரிக்குள் புகுந்து ரெவரெண்டு ஷாப்டர் என்னும் தலைமையாசிரியரை 'வந்தே மாதரம்' என்று சொல்லும்படி வற் புறுத்தினர். அவர் மூன்று முறை வந்தே மாதரம்

என்று உரத்து உச்சரித்தார். அக் கல்லூரியி லுள்ள சாமான்களை எல்லாம் உடைத்து வீதி யில் விட்டெறிந்தனர். பின்னர் போலீஸ் ஸ்டேஷ னுக்குள் புகுந்து துப்பாக்கி முதலிய ஆயுதங்களைச் சேதப்படுத்தியதுடன் கட்டிடத்தையும் தீவைத்துக் கொளுத்தினர். இவ்விஷயமறிந்த கலெக்டரும் போலீஸ் சூப்பரின்டெண்டும் விரைந்து வந்து கலகத்தை அடக்க முயன்றனர். கலெக்டர், தம் கைத்துப்பாக்கியால் கலகக்காரர்களை நோக்கிச் சுட்டார். இதனால் நால்வர் மாண்டதுடன் மூவர் படுகாயம் அடைந்தனர். வலம் புலியம்மன் கோயிலில் பணி செய்யும் 17 வயது சிறுவன் வீதியில் வந்துகொண்டிருக்கையில் கையி லிருந்த தேங்காய் தவறி கீழே விழவும் அதை எடுக்கக் குனிந்தான், அவ்வளவுதான், கலெக்டரின் கைத் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட குண்டு சிறுவன் மண்டையில் பாய்ந்து அங்கேயே மாண்டான். ரொட் டிக் கடையில் வேலை செய்யும் 18 வயதுப் பையன் கடையைப் பூட்டிக்கொண்டு கையில் சாவியுடன் வீடு செல்கையில் சுடப்பட்டு மாண்டான்.

கலெக்டரின் கைத்துப்பாக்கிக்கு இரையான நால்வரில் இருவர் இந்துக்கள், ஒருவர் முஸ்லிம், மற்றொருவர் ஆதிதிராவிடர். இறந்தவர்களின் பிரேதத்தை அப் புறப்படுத்தவோ, காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்விக்கவோ அதிகாரிகள் அக்கறை கொள்ளாது, வீதியிலேயே விட்டுச் சென்றனர். மாலைவரை பிரேதங்கள் வீதியிலேயே கிடந்த பின்னர் அவற்றின் உறவினர்கள் வந்து எடுத்துச் சென்றனர்.

கலகக்காரர்கள் கற்களால் அடித்ததால் இன்ஸ்பெக்டருக்கு மண்டை உடைந்தது ; கலெக்டருக்குச் சொற்ப காயம். குழப்பம் மூன்று நாட்கள் வரை தொடர்ச்சியாக நடைபெற்றது. இதே சமயத்தில் தூத்துக்குடியிலும், தச்சநல்லூரிலும் கடையடைப்பும், குழப்பமும் நிகழ்ந்தன. தச்சநல்லூரில் யூனியன் ஆபீஸ் கொளுத்தப்பட்டது. சாதாரண போலீசாரால் அமைதியை நிலவச் செய்வது அசாத்தியம் என்றுணர்ந்து, சென்னை சர்க்கார் தண்டப் போலீஸ் படையைத் திருநெல்வேலி, தூத்துக்குடி, தச்சநல்லூர் ஆகியவிடங்களுக்கு அனுப்பிவைத்து அப் படையினர்க்காகுஞ் செலவைப் பொதுமக்களிடமே வசூல்செய்யப்படுமென அறிவித்தனர்.

கனம் குருசாமி ஐயரும் மற்றும் இரு பிரமுகர்களும் சென்னைக்கு வந்து, தண்டப் போலீஸை அகற்ற வேண்டுமென கவர்னரை வேண்டினர். ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் குழப்பத்தை அடக்கப் போலீசாருக்குத் தக்க சமயத்தில் உதவி புரியாததால், தண்டப் போலீஸை அனுப்ப நேரிட்டதென்றும், ஆகவே மீண்டும் அமைதி நிலவும்வரை திருப்பி அழைக்க முடியாதென்றும் கவர்னர் கூறினர். பிரமுகர்கள் ஏமாற்றத்துடன் ஊர் திரும்பினர்.

இந்தக் குழப்பத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறித் தச்சநல்லூர், திருநெல்வேலி, தூத்துக்குடி முதலிய விடங்களில் 89 பேர்களைப் போலீஸார் கைது செய்து வழக்குத் தொடுத்ததில் ஒருவரைத் தவிர மற்றவர்கள் பலவித தண்டனைகள் அடைந்தனர்.

## கொடுந் தண்டனை

1908-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23—26-ந் தேதிகளிலும் மார்ச்சு 1, 3 தேதிகளிலும் அரச நிந்தனையாகப் பேசியதாக 124-A. பிரிவுப்படியும், சுப்பிரமணிய சிவாவுக்கு இடமும், உணவும் அளித்து உதவியதாக 153-A. பிரிவுப்படியும் சிதம்பரம் பிள்ளைமீது போலீசார் வழக்குத் தொடுத்தனர். இவ்வழக்கு திருநெல்வேலி டிப்டி மாஜிஸ்திரேட் முன்பு மார்ச்சு மாதம் 26-ந் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சிதம்பரனாரின் சொற்பொழிவுகளில் ஆக்ஷேபகரமானவையென சர்க்கார் தரப்பில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் பின்வருமாறு :—

"ஜனங்கள் ஒன்றுசேர்ந்தால் வெள்ளையரை விரட்டிவிடலாம். நாமெல்லோரும் ஒன்றுசேர்ந்து விட்டோம் எனத் தெரிந்தால் போதும். அவர்களே போய் விடுவார்கள்."

"இந்தியாவில் 50 ஆயிரம் வெள்ளையர்கள் உள்ளனர். கட்டாயத்தின்பேரில் அவர்களை வெளியேற்றுவது எளிதேயாகும். ஆனால் இந்தியர்கள் பலாத்காரஞ் செய்யக் கூடாது. என்றாலும் வெள்ளையருக்கு நாம் அஞ்சவேண்டியதில்லை."

"இந்தியர்கள் தாங்கள் தீர்மானித்தபடி அன்னிய நாட்டுத் துணி, சர்க்கரை, எனமல் பாத்திரம் முதலிய பொருள்களை வாங்காமல் இருந்தால் ஆங்கிலேயர் தாங்களாகவே இந்தியாவைவிட்டுப் போய்விடுவார்கள்."

"இன்னும் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்குச் சிலர் உதவி செய்கிறார்கள். இனி நான் அவர்களைக் கேட்கப் போவதில்லை. சிலர் என்னிடம் வந்து அப்படிப்பட்டவர்களுக்குக் கெடுதல் செய்வதாய்க் கூறினார்கள். நான் அவர்களைத் தடுத்தேன். தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டும் என்று அவர்கள் சொன்னார்கள்."

"நாவித நண்பர்கள் அன்னிய ஆடை தரித்தவர்களுக்குத் தாங்கள் இனி வேலை செய்வதில்லை எனச் சத்தியஞ் செய்து கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவர் வந்தால், கத்தியால் அவன் தலையைத் தொட்டு அனுப்பி விடுவார்கள்."

"சுய ஆட்சியைத் தவிர அன்னிய ஆட்சியை விரும்புகிறவர்களுண்டா? வருவதெல்லாம் வரட்டும்; நாம் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை."

சிதம்பரனாருக்காகத் தஞ்சை வக்கீல் திரு என். கே. இராமசாமி ஐயர் கோர்ட்டில் தோன்றி வாதாடினார். வழக்கு நடந்துகொண்டிருக்கையில் டிப்டி மாஜிஸ்திரேட் தமது வக்கீலிடம் நேர்மையாக நடந்துக்கொள்ள

வில்லை யெனக் கூறி சிதம்பரனர் எதிர் வழக்காட மறுத்துவிட்டார். மாஜிஸ்திரேட் பூர்வாங்க விசாரணைக்குப் பிறகு வழக்கை அடிஷனல் செஷன்ஸ் கோர்ட்டிற்கு மாற்றினர். செஷன்ஸ் கோர்ட்டில் நீதிபதி பின்ஹே முன்பு வழக்கு விசாரணை சுமார் இரண்டு மாதகாலம் நடைபெற்றது. சிதம்பரனருக்காக வக்கீல் திரு. சடகோபாச்சாரியாரும், சர்க்கார் தரப்பில் பாரிஸ்டர் ரிச்மண்டும் தோன்றி வாதித்தனர். பிள்ளை தரப்பில் கவியரசர் சி. சுப்ரமணிய பாரதியார் உள்பட சான்றோர் பலர் சாட்சி கூறினர். இவருக்கு விரோதமாக சர்க்கார் தரப்பில் சாட்சியங் கூறியவர்களில் பெரும்பாலோர் போலீஸ்காரர்களும் பிரிட்டிஸ் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியைச் சேர்ந்த வெள்ளையர்களு மாவர்.

ஜுலை மாதம் 7-ந் தேதி நீதிபதி பின்ஹே தீர்ப்புக் கூறினர். சிதம்பரனர் குற்றவாளியெனத் தீர்மானித்து, அரச நிந்தனைக் குற்றத்திற்காக 10 வருடத் தீவாந்தரத் தண்டனையும், சிவாவுக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காக 10 வருட தீவாந்தரத் தண்டனையும் விதித்து இரண்டு தண்டனைகளையும் ஒன்றன் பின் ஒன்ருக (இருபது வருடம்) அனுபவிக்க வேண்டுமெனக் கூறினர்.

செஷன்ஸ் நீதிபதி பின்ஹே அளித்த தீர்ப்பின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:—

" சிதம்பரம் பிள்ளை தொழில் அபிவிருத்திக்குப் பாடுபடுவதாக நடித்துக்கொண்டு ஆங்கிலேயர்களுக்கும்

இந்தியர்களுக்கும் இடையே சாதிப்பகைமையை ஊட்டிவந்தாரென்ற குற்றச்சாட்டை மறுப்பதற்கில்லை. பிள்ளை பெரிய ராஜத்துரோகி; அவரது எலும்புக்கூடுகூட ராஜ விசுவாசத்திற்கு விரோதமானது. சிவா அவர் கையில் அகப்பட்ட ஒரு கோல். திருநெல்வேலி குழப்பத்திற்கு இவர்கள்தான் காரணம்".

"பிள்ளை கைத்தொழில் வளர்ச்சிக்குப் பாடுபடுவதாகக் கூறிக்கொண்டு சுதந்தரம் பெறுவதற்கான மார்க்கங்களை மக்களுக்குப் போதிக்கிறார். கோரல் மில் வேலை நிறுத்தத்தை உண்டாக்கியவர் இவரே."

"இந்தியாவில் அரசியல் விஷயமாகப் பேசச் சட்ட ரீதியான சமயமே யில்லை. ஏனெனில் பிரிட்டிஷாருக்கிருப்பதுபோல் இந்தியருக்கு வாக்குரிமையில்லை. சர்க்கார் ஒரு சட்டத்தை இயற்றினால் அதை ம[illegible]வோ, திருத்தவோ நேரடியான நடவடிக்கைகளில் இறங்கச் சட்டம் அனுமதிக்கவில்லை. இந்தியர்கள் தனியாகக் கூடி சர்க்காருக்கு வேண்டுகோள் அனுப்பலாம். அப்போதும் அதிகாரிகள் அதைக் கவனிக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை."

"இங்கிலாந்தில் அரசியல் விஷயமாகப் பேசுகிறவன் தன்னுடைய வாக்காளர்களைப் பார்த்துப் பேசுகிறான். அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கிறது. அந்த வாக்கை அடுத்த தேர்தல் சமயம் வரும்போது தன் பக்கமாய்க் கொடுக்கத் தூண்டும் நோக்கத்துடன் பேசுகிறான். இந்நாட்டிலோ அம்மாதிரிச்செய்ய சந்தர்ப்பமிருப்பதாகக் கூறமுடியாது. திருநெல்வேலியி

லும், தூத்துக்குடியிலும் உள்ள சாதாரண மக்களுக்கு வாக்குரிமை இல்லை. ஆகையால் ஒருவன் ஜனங்களைக் கூட்டி வைத்துப் பேசக் கனவிலும் நினைக்கமாட்டான். ஏனெனில் தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவர்களுக்குச் சக்தியில்லை. இந்நாட்டில் அரசியல் விஷயத்தைப் பற்றிப் பேசும் ஒருவன் யாரைப் பார்த்துப் பேசுகிறானோ அவர்களுக்குச் சட்டப்படி அமைந்திருக்கும் சக்தி எதையும் உபயோகிப்பதற்கில்லை. பின் என்ன எண்ணத்தோடு பேசுகிறான்? ஜனக் கூட்டத்திற்கு உள்ள ஓரே சக்தியைப் பிரயோகிக்க வேண்டும் என்றுதான் பேசவேண்டும். அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உடற்பலத்தை உபயோகிக்கும் படித் தூண்டித்தான் பேசுகிறான். இது மகா அபாயமானதாகும்.''

"அன்னியப் பொருள்களை விலக்குமாறு பேசலாம். ஆனால் சாதாரண மக்களைப் பார்த்து, இப்படிப் பேசினால் கேட்பவர்கள் அவற்றோடு நிற்பார்களா? அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடாதெனப் பேசப்பட்டது. இது 124. ஏ பிரிவின்கீழ் அபாயகரமான எல்லைக்குப் போவதாக ஏற்பட வில்லையா?''

சட்டஞானம் பெற்ற வழக்கறிஞரை, அரசியல் தலைவரை, கப்பலோட்டிய கருணையாளரை, ஏழைகள் பால் இரக்கங்கொண்ட ஏந்தலை, செந்தமிழ் வல்ல சிதம்பரனாரைக் கொலையும், கொள்ளையும் புரிந்த கொடியவர்களான சமூக விரோதிகளோடு இருபதாண்டுகள்வரை பூலோக நரகமான அந்தமான் தீவில் வாழுமாறு நீதிபதி பின்ஹே தீர்ப்பளித்தார். முப்பத்

தைந்தே வயதுடைய வாலிபப் பருவத்தினரான பிள்ளையவர்கள் பெற்ற தாய்தந்தையரையும், இளம் மனைவியையும், இரண்டு, நான்கு வயதுடைய இரு பச்சிளம் பாலகர்களையும் பிரிய நேரிட்டது.

வீரத் தமிழரான சிதம்பரனார் தமக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையால் மனங் கலங்கவில்லை. இவரைக் கோர்ட்டிலிருந்து சிறைக்குக் கொண்டு செல்லுகையில் தம் எதிர்லே முகவாட்டத்துடன் நின்றிருந்த தூத்துக் குடி மாசிலாமணிப் பிள்ளையை நோக்கி "தம்பி! பயப் படவேண்டாம். கிடக்கிறான் இந்தப் பயல். இருக் கிறது ஹைகோர்ட். அடித்துத் தள்ளிவந்து விடு கிறேன்" என்று கூறிச் சிறைச்சாலையாம் தவச் சாலையை நண்ணினார் அஞ்சா நெஞ்சுடைய அண்ணல் சிதம்பரனார்.

தென்னிந்தியாவில் சிதம்பரனார் சிறைத் தண்டனை யடைந்த அதே வாரத்தில்தான் வட இந்தியாவில் லோகமான்ய திலகர் தமது "கேசரி" என்னும் பத்திரி கையில் அரசாங்க விரோதமான கட்டுரையொன்று எழுதியதற்காக ஆறுவருடம் தீவாந்தரமும் பத்தா யிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். குருவும் சீடரும் ஒரே சமயத்தில் சிறைபுகுந்தனர். என்றாலும் குருவைவிட சீடரையே அதிகமாகப் பழிதீர்த்துக் கொண்டது ஏகாதிபத்தியம்.

தமிழ் நாட்டின் தனிப் பெருந் தலைவரான சிதம் பரம் பிள்ளைக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனை யால் தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவெங்கும்

பேரதிர்ச்சி உண்டாயிற்று. பத்திரிகைகள் நீதிபதி பின்ஹேயின் தீர்ப்பைக் கடுமையாகத் தாக்கித் தலையங்கங்கள் எழுதின. அவற்றில் சில பின்வருமாறு:

ஸ்டேட்ஸ்மன் (கல்கத்தா):— "தேச பக்தர் சிதம்பரனுருக்கு விதிக்கப்பட்ட தண்டனைகள் நியாயத்திற்கும் சட்டத்திற்கும் விரோதமானவை. பிள்ளையவர்கள் தியாகம் மகத்தானது".

வங்காளி:— "நீதிபதி பின்ஹேயின் சித்தாந்தங்கள் இந்நாட்டில் அமுலுக்கு வரும் நாள் துரைத்தனத்தாருக்கும் ஜனங்களுக்கும் கெட்டநாளாகும். சுதேசிக் கைத்தொழில் வளர்ச்சிக்குப் பிள்ளை பாடுபட்டது குற்றமானால் இந்தியர் அனைவரும் குற்றவாளிகளே."

அமிர்தபஜார்:— "பிள்ளையவர்களுக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையால் பிரிட்டிஷ் நீதி அதிகாரத்திற்கே பெரும் அபகீர்த்தி உண்டாகும். நீதிபதி பின்ஹேயின் கருத்து பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பதிலாக சுதேச அரசாட்சியை விரும்புவதே அரச நிந்தனை. பிள்ளையைப் போன்று துன்பம் அனுபவிக்கும் ஒவ்வொருவரும் எதேச்சாதிகாரத்தின் பிரேதப் பெட்டியின்மேல் ஒவ்வொரு ஆணியை அறைகின்றனர்."

சுதேசமித்திரன்:— "இவ்வளவு கொடிய தண்டனை விதிக்கப்படுமென்று நாம் கனவிலுங்கூட கருதவில்லை. நினைக்கையிலேயே மயிர்க்கூச் செறிகிறது. கைகூசுகிறது. இந்த துக்கத்தைத் தென்னிந்திய மக்கள் எப்படிச் சகிப்பார்கள்? பிள்ளை கப்பல் கம்பெனியை நிறுவாமலும், சுதேசிக் கைத் தொழில்களின் அபி

விருத்திக்குப் பாடுபடாமலும், கோரல் மில் வேலை நிறுத்தத்தில் ஏழைத் தொழிலாளர்களுக்கு உதவாமலும் இருந்திருந்தால் நீதிபதி பின்ஹே குறைந்த தண்டனை விதித்திருப்பார் போலும்! பிள்ளை தேசாபிமானங்கொண்டு பொது ஜன நன்மைக்காக உழைத்தது அவருக்குக் கேடாய் முடிந்தது."

சிதம்பரம் பிள்ளைக்கு ஆயுள் அளவும் தீவாந்தரத் தண்டனை விதிக்கப்பட்ட செய்தியைக் கேட்டு அப்போது இந்தியா மந்திரியாகவிருந்த லார்டு மார்லி என்பவர் மனம் பதைத்தார். 'அவர் இராஜப் பிரதிநிதி லார்டு மின்டோவுக்கும் பின்வருமாறு எழுதினர் :

"திருநெல்வேலி, தூத்துக்குடி மனிதர் (சுப்ரமணிய சிவா, சிதம்பரம் பிள்ளை) இருவருக்கும் விதித்துள்ள தண்டனையைச் சிறிதும் ஆதரிக்க இயலாது. அடுத்த மெயிலில் அத்தீர்ப்பு என்பார்வைக்கு வரும். அத்தண்டனைகள் நிலைக்கா. கொடுமையான இக் காரியங்களை எக்காரணங்கொண்டும் நான் ஆதரிக்க முடியாது. இந்தப் பிழைகளையும், முட்டாள்தனங்களையும் நீங்கள் உடனே கவனிக்கவேண்டும். ஒழுங்கை நாம் நிலைநாட்ட வேண்டியதுதான். ஆனால் கொடுமை மிதமிஞ்சிவிடின் ஒழுங்கென்பது நிலைக்குமோ? மற்று வெடிகுண்டுக்கு அதுவே மார்க்கமாகும்."

சிதம்பரம் பிள்ளை தமக்கு செஷன்ஸ் நீதிபதி விதித்த தண்டனையை ரத்துச்செய்ய வேண்டுமெனக் கோரி ஹைகோர்ட்டுக்கு மனுச்செய்தார். 1908-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ந் தேதி பிரதம நீதிபதி ஆர்னல்

ரைட், நீதிபதி மன்ரோ ஆகியவர்கள் முன்பு அப்பீல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிள்ளைக் காக திருவாளர்கள் சடகோபாச்சாரியார், நரசிம்மாச் சாரியார் ஆகிய இருவரும் ஆஜராகி வாதித்தனர்.

நவம்பர் மாதம் 4-ந்தேதி நீதிபதிகள் தீர்ப்புக் கூறினர். ஆங்கிலேயர்கள் ஆளும் வகுப்பாராயிருப்பதை ஒழித்து விட வேண்டுமென்பதே பிள்ளையின் நோக்கமென்றும், அவர் அன்னிய சரக்குப் பகிஷ்காரத்தை வற்புறுத்திப் பேசியது சுதேசக் கைத்தொழில்களின் அபிவிருத்திக் காக அல்லாமல் ஆங்கிலேயரை வெளியேற்ற வேண்டு மென்பதற்காகவே யென்றும், ஆகவே, சிதம்பரனார் குற்றவாளியென செஷன்ஸ் நீதிபதி பின்ஹே தீர்மா னித்ததைத் நாங்களும் ஒப்புக்கொள்ளுகிறோம் என்றும் எனினும் உடந்தைக் குற்றத்திற்கு விதிக்கப்பட்ட 10 வருட தீவாந்தர தண்டனையை ஆறுவருடமாகவும். இராஜநிந்தனைக் குற்றத்திற்கு விதிக்கப்பட்ட 10 வருட தண்டனையை 4 வருடமாகக் குறைக்கிறோம் என்றும் இவ்விரண்டு தண்டனைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிப்பதற்குப் பதிலாக ஏககாலத்தில் அனுபவித் தாற் போதுமென்றுங் கூறினர்.

எப்படியேனுஞ் சிதம்பரனாரை விடுவிக்க வேண்டு மென்று அவாக்கொண்ட இவரது நண்பர்கள் ஹைறக் கோர்ட்டு தீர்ப்பில் திருப்தி கொள்ளாமல் பெரு முயற்சி செய்து பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய் தனர். அதன்பேரில் அந்தமான் சிறைவாச தண்டனை ரத்துசெய்யப்பட்டு ஆறுவருடக் கடுங்காவல் தண்டனை யாக மாற்றப்பட்டது.

# சிறையில் துன்பம்

சிதம்பரனர் தமது தண்டனைக் காலத்தைக் கோயம்புத்தூர் கண்ணனூர் சிறைகளிற் கழித்தார். அந்நாளில் சிறைகள் தேசபக்தர்களால் நிரப்பப்பட வில்லை. ஆகவே, பிள்ளையவர்கள், தன்னந் தனியாய்த் தவங் கிடந்தார். இன்றுள்ளனபோல் வகுப்பு முறை களும், பிற வசதிகளும் அன்றில்லை. அரசியல் கைதி களுக்கெனத் தனி உரிமைகள் எதுவும் வழங்கப்பட வில்லை. சிதம்பரனர் சிறையிற்பட்ட துன்பம் கொஞ்ச மன்று. கல்நெஞ்சம் படைத்த சிறையதிகாரிகள் அவரைக் கொலை, திருட்டு முதலிய பாதகச் செயல் களைப் புரிந்து தண்டனைப்பெற்ற கொடியவர்களைவிடக் கேவலமாக நடத்தினர். அறுசுவையுண்டு அரசர் போல் வாழ்ந்த சிதம்பரச் சீமான் சிறையில் கேழ்வரகுக் கூழுண்டார். சிறையிலிருந்து அவர் தம் மனைவிக்கு எழுதிய கடிதமொன்றில்,

முக்கனியின் சாறெடுத்து முந்திரி ஏலம் வாதம்
அக்காரம் தேன் பாலோ டட்டுட்டக்—கக்குமென்ற
கேழ்வரகின் கூழுண்டல் கேடறியாய் நின்மலர்த்தாள்
வாழ்வதொக்கும் கற்காட்டில் வந்து.
வாழைப்பழங் கடிக்க மாட்டாத என்பற்கள்
ஏழைச்சிறுர் கடிக்க ஏலாத—காழுடையாய்
சீடைதினல் இந்நாள் சிறுகுடிலில் நிற்பதொக்கும்
மேடையையும் ஏற்கா தென் மெய்.

எனச் சிறையில் தனக்களிக்கும் உணவின் தன்மை யைப்பற்றிக் கூறுகின்றுர். பொதுஜனக் கிளர்ச்சி— பத்திரிகைகளின் கண்டனம்—கணக்கற்ற உண்ணு விரதங்கள்; உயிர்த் தியாகங்கள்—காங்கிரஸ் ஆட்சி யில் சீர்திருத்தங்கள்; இத்தனைக்கும் பிறகு இன்றுங் கூட, 'சி' வகுப்பு அரசியல் கைதிகளுக்கு அளிக்கப் படும் உணவில் புழுப், பூச்சிகளும், கல்லும் மண்ணும் கலந்திருக்கின்றனவென்றால், இன்றைக்கு 37 ஆண்டு களுக்குமுன்னர், அதிலும் அரசியற் கைதிகள் என் போர் சிதம்பரனுரைத் தவிர வேறெவரும் சிறை யிலில்லாத அந்நாளில் சிறை உணவின் கேவலத் தன் மையைக் கூறவும் வேண்டுமோ?

சிறைக் கொடுமைகளால் சிதம்பரனுரின் உடற் பலம் குறையலாயிற்று. சிறை புகுந்த ஆறு மாதத்திற் கெல்லாம் அவரது உடல் நிறை ஐந்தில் ஒரு பங்கு குறைந்துவிட்டது. அதன் பின்னரே அதிகாரிகள் அவருக்குக் கேழ்வரகு உணவை நிறுத்தி அரிசி உணவு தந்தனர். சிதம்பரனுர் தமது சிறை வாழ்வைக் குறித்து குடும்பத்தாருக்கு கவி வடிவில் எழுதியுள்ள கடிதங்கள் கல் நெஞ்சையுங் கரைக்குந் தன்மை வாய்ந்தனவாகும்.

தந்தைக்கு எழுதிய கடிதம் வருமாறு:—

சுவாமியே! தந்தையே! தூயநற் பெரியோய்!
அவாவியே வந்தெனே ஆண்டருள் ஈசா!
... ... ...
... ... ...
மூன்றிரு திங்கள் முரண்சிறை இருந்தேன்

சான்ருெரு கடவுளே தண்ணளி கூர்ந்து
விரைவினில் என்னை வெளியேற்றி அருள்க
தரைமிசை நெடுநாள் தங்கிடச் செய்க
இந்த வாரம் எடுத்த நிருவையில்
ஐந்தி லொன்ருக அருகிய தென்னுடல்,
அரிசி உணவுக்கு அளித்தனன் அனுமதி
பெரியவன்; மற்றவன் பேசான் என்றெடு
சீரிய நின்னடி சிரமேற் கொண்டு யான்
பாரிய என்னுளம் பாரதத் தாய்க்கும்
உரிமை யொடு பெற்றெனை உவப்பொடு வளர்த்த
பெருமை சேர் அன்னைக்கும் பிறர்க்கும் எனது
மெய்மன வாக்கால் விரும்பிஇன் றளித்தேன்
தெய்வ வணக்கமும் சீர்தரும் வாழ்த்துமே.

மற்றும் மனைவியாருக்கு அவர் எழுதிய மற்ருேர் அகவற்பாவில் சிறையில் வாழும் தமது தோற்றம் எப்படியிருந்தது என்பதை விளக்குகிருர் :—

திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவுற நிற்குமென் மாசிலா மனைவியே!
என்னரும் உயிரினும் என்னுயர் உளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துனக் களித்தேன்
பின்னுளப் பாதியைப் பெரியநம் தேயத்தின்
தன்னடிக் களித்தேன் சத்தியம் இஃதே

... ... ... ... ...

... ... ... ... ...

சிறியவிரு சட்டைகள் தேகத்தில் புனைந்துளேன்
சிறியவோர் குல்லாச் சிரத்தினில் தரித்துளேன்
வெற்றியே தவத்தினும் வேறுள எஃதினும்
பெற்றிடச் செய்திடும் பெருமையொடு மற்றுள
நலமெலாம் எளிதினில் நல்கிடுங் கழலொன்று
வலதுதாள் மேலே மாணுற யாத்துளேன்

சிவனடித் தொண்டர்கள் சிறப்புற அணிந்திடும்
நவமறு மணிநாண் நற்களம் பூண்டுளேன் .
தவத்தினில் சிறிது சரீரம் இளைத்துளேன்
உவப்பொடு கண்டெனை உயர்வெலாம் பெறுவையே,

சிதம்பரனார் கேவலமான உணவருந்தி உடல்வலி குன்றி உயிருக்கு ஊசலாடும் நிலைமையிலிருந்தபோதும் கடுமையான வேலைகளைச் செய்யும்படிக் கட்டளை யிட்டனர் சிறையதிகாரிகள். "செக்கு மாடுகள்போல் உழைத்து ஏங்குகின்றார் அந்தக் கரும்புத் தோட்டத் திலே" என்று தோட்டத் தொழிலாளர் துயரைக் குறித்து பாரதியார் பாடினார். மாடு போல் அல்ல. மாடாகவே செக்கு வலித்தார் சீரியர் சிதம் பரனார். ஒருநாள், கடும் வெய்யலிற் செக்கிழுக்கையில் மூர்ச்சித்து விழுந்தாராம். கல்வி, கேள்வி, அறிவு ஆற்றல்களில் மேம்பட்ட சிதம்பரனார் செக்கிழுக்க, அவர் செய்த குற்றந்தான் என்ன? ஆம்; தொண்டு செய்யும் அடிமை சுதந்திர நினைவு கொண்டதே குற்ற மல்லவா? செக்கிழுக்க நேர்ந்ததைப் பற்றி வீரச் சிதம்பரனார் விம்மி யழவில்லை. பின் எப்படி அத் துன்பத்தைச் சகித்திருப்பார்? எண்ணெ யாடும் செக்கைச் சுற்றுவதாக அவர் எண்ணியிருக்க மாட் டார்; எண்ணியிருப்பின் அவரது உள்ளம் கசிந்திருக் கும்; தமிழ்த் திருமேனி நொந்திருக்கும். அவர் செக் கைச் சுற்றும்போதெல்லாம் சுதந்தர தேவியின் ஆலயத் தைச் சுற்றுவதாகக் கற்பனை செய்து கொண்டிருப் பார். கற்பனா சக்தி படைத்த கவிவாணரல்லவா?

சிறைக்குள்ளே அதிகாரிகள் இழைக்கும் இன்னல் ஒருபுறமிருக்க, சிறைக்கு வெளியேயிருந்து கடன்காரர்

களும் சிதம்பரனாருக்குத் தொல்லை விளைவித்தனர். அவர் சிறை புகுந்ததும் அவரால் நடத்தப்பட்டுவந்த கப்பல் கம்பெனி முறிந்துவிட்டது. இதனால் பங்கு தாரர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. கம்பெனி யின் முறிவுக்குச் சிதம்பரனாரின் அரசியல் நடவடிக்கை களே காரணம் என்று பங்குதாரர்களில் சிலர் அவர் மீது பழி சாற்றினர். மேலும் தங்களுக்கேற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டுமென்று சிறையி லிருந்த சிதம்பரனாரின்மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் முயன்றனர். இதைக் கண்டு சிதம்பரனார் சிந்தை நொந்தார். சிறையிலிருந்து அவர் திரு. சி. விஜயராகவாச்சாரியாருக்கு பின்வரு மாறு கடிதம் எழுதினார் :—

> "என்னால் துவக்கப்பட்ட சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பொருள் உதவிய எல்லாருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவியுங்கள். கம்பெனி முறிந்ததினால் ஏற்பட்ட நஷ்டத்தைப் பங்குதாரர் கள் ஏற்க மறுத்தால் அக்கடன்களை நானே கொடுத்து விடுகிறேன். ஆனால் தயவுசெய்து நான் சிறை மீளும்வரை அவர்களைப் பொறுத் திருக்கச் சொல்லுங்கள்."

மற்றும் கப்பல் கம்பெனிக் கடன்காரர்களைப் பற்றி எழுதிய கவி வருமாறு :—

(1) எண்ணரிய துன்பங்கள் எய்தியுள வெஞ்சிறையை
நண்ணிடினும் நான் அஞ்சேன் ; நாவாயின்—எண்ணறியா(து)
என்னேரென் தாள்நிதியை ஈயாதெனைக் கொடுக்கச்
சொன்னாலும் யான்அஞ்சேன் சோர்ந்து.

(2) என்மனமும் என்னுடம்பும் என்சுகமும் என்அறமும்
என்மனையும் என்மகவும் என்பொருளும்—என்மனமுங்
குன்றிடினும் யான்குன்றேன் ; கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து.

இந்தக் கவிகள் சிதம்பரனார் சிறைத் துன்பமும் கடன்காரர் தொல்லையுஞ் சேர்ந்து வருத்தியபோதும் சோர்ந்து விடவில்லை என்பதையே காட்டுகின்றன.

சிதம்பரனாரும், கவியரசர் பாரதியும் நெருங்கிய நண்பர்கள். திலகரைப் பின்பற்றுபவர். இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாதவர்கள். ஆகவே சிதம்பரனார் சிறையில்படுந் துன்பத்தை அறிந்து பாரதியார் நெஞ்சங் குமுறினார். அந்த மேலோன் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதைக் கேட்டு, நெஞ்சு பொறுக்கவில்லை. 'மெய்யறம்' போன்ற நீதி நூல்கள் எழுதிய அவரது கைகள் சிறையில் செக்கு வலிப்பதைக் கேட்டுக் கண்ணீர்விட்டார் பாரதியார்.

தமது அருமைத் தோழர் சிதம்பரனாருக்குற்ற துன்பம் மனித சக்தியால் நீக்க முடியாதது என்று எண்ணினார். ஆகவே, அவர் சர்வ வல்லமை வாய்ந்த இறைவனிடம் முறையிடலானார்:—

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுங் காண்கிலையோ.

* * *

மாதரையும் மக்களையும் வன்கண்மையாற் பிரிந்து
காதல் இளைஞர் கருத்தழிதல் காணாயோ.

என்ற பாரதியார் பாடலிலுள்ள வரிகள், நமக்கு, எதை நினைவூட்டுகின்றன? முப்பது வயதில்காதற் பரு

வத்தில் மனைவியைத் துறந்து, மக்களைப்பிரிந்து சிறையில் வாடிய சிதம்பரனாரின் துன்பத்தையே சித்தரித்துக் காட்டுகின்றன அல்லவா ?

சிதம்பரனாரை, "மேலோன்," "நூலோன்," "காதல் இளைஞன்" என்றெல்லாம் கூறிக் கடவுளுக்கு அறிமுகப்படுத்துகிறார் பாரதியார். அந்த வீரன் "சிறையில் வீழ்ந்து கிடப்பதை, செக்கடியில் நோவதை, மனையாளைத் துறந்ததை, மக்களைப் பிரிந்ததை, கண்ணூரர்ச் சிறையில் கருத்தழிந்து வாடுவதை, இறைவா நீ காணாயோ!" என்று கதறுகின்றார்.

"மேலோர்கள்", "நூலோர்கள்" என்று பாரதியார் பன்மையில் குறிப்பிட்டாலும், அவர் சிதம்பரனாரை நினைவில் கொண்டே கூறியிருப்பார் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், "மேலோர்", "நூலோர்" என்ற உயர்ந்த நிலையில் வைத்து பேசத்தக்கவர்கள் அந்நாளில் சிதம்பரனாரைத் தவிர வேறெவரும் சிறைப் புகுந்ததில்லை, செக்கு வலித்ததில்லை யல்லவா ?

## பயங்கரப் புரட்சி

தமிழ் நாட்டில் தேசியப் புரட்சியின் வித்தை விதைத்த சிதம்பரனுரை அரசாங்கம் சிறைக்குள் தள்ளியது. எனினும் புரட்சி அடங்கியபாடில்லை. பகிரங்கமாகச் சாத்வீக முறையில் நடைபெற்ற சுதேசிக் கிளர்ச்சியை சர்க்கார் அடக்குமுறையால் நசுக்கவே, புரட்சி வேறு ரூபத்தை அடைந்தது. சாத்வீகப் புரட்சி பலாத்காரப் புரட்சியாக மாறியது. சிதம்பரம் பிள்ளைக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனை — திருநெல்வேலி குழப்பத்தில் கலெக்டரின் துப்பாக்கித் திருவிளையாடல்களால் ஆத்திரம்கொண்ட வாலிபர்கள் இனிச் சாத்வீகக் கிளர்ச்சி பயன் தராது என எண்ணி, ஆயுதம் கையிலேந்தி பலாத்காரச் செயல் புரியத் தீர்மானித்தனர். அதன் மூலம் நாடு விடுதலை அடையுமென நம்பிக்கைகொள்ளலாயினர். இவ்வாலிபர்களின் கொள்கை பிள்ளை யவர்களுக்கு உடன்பாடன்று.

சிதம்பரம் பிள்ளை அஹிம்சையில் நம்பிக்கை கொண்டவரல்ல. எனினும் ஆயுத பலங்கொண்டு ஆட்சி முறையைக் கவிழ்க்கவேண்டுமென்று இவர் எப்பொழுதும் கூறியதில்லை. அம்முறை இந்தியாவின் தற்போதைய நிலைமைக்குப் பொருந்தாது என்பதும்

இவரது கருத்து. பலாத்கார இயக்கத்தைப் பற்றி பிள்ளையின் கருத்து பின் வருமாறு :—

"ஒரு பேரரசின் துணையைப்பெற்றுப் போர் புரிதல், அல்லது தேசம் முழுவதும் ஒரே காலத்தில் ப்ரட்சி செய்தல், சுய அரசாட்சிக்குச் செல்லும் வழி என்று சிலர் கூறுகின்றனர். அவ்வழிகள் தேச மக்கட்கும் பொருட்கும், அழிவும் கேடும் விளைவிப்பவை ; நம் காங்கிரஸ் கோட்பாட்டுக்கு மாறுபட்டவை ; நாம் கைக்கொள்ள முடியாதவை. ஆதலால், அவ்வழிகள் நாம் விரும்பும் சுய அரசாட்சியை அடைவதற்கும், நமது தேசத்தின் நிலைமைக்கும் பொருத்தமற்றவை என நாம் தள்ளிவிடுவோமாக."

திருநெல்வேலியில் நிகழ்ந்த குழப்பத்திற்கோ, இனி நாம் கூறப்போகும் பயங்கரக் கொலைக்கோ பிள்ளை அவர்கள் எவ்விதத்திலும் காரணமல்லர் என்பதற்கு மேலே குறிப்பிட்டுள்ள அவரது வாய்மொழியே சான்றாகும்.

1911-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ந் தேதி திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் ஆஷ் என்பவர் ரயிலில் கோடைக்கானலுக்குச் சென்று கொண்டிருந்தார். ரயில்வண்டி மணியாச்சி ஸ்டேஷனை அடைந்ததும், அதே வண்டியில் வந்துகொண்டிருந்த ஒரு வாலிபர் தம் கைத்துப்பாக்கியால் கலெக்டரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தாமும் மலங்கழிக்கும் இடத்தில் நுழைந்து வாய் வழியாக சுட்டுக்கொண்டு அதன் பயனாக தலை சுக்கல் சுக்கலாக நொறுங்கி மாண்டார்.

தற்கொலை செய்துகொண்ட வாலிபர் செங்கோட்டை ரகுபதி அய்யரின் குமாரர் வாஞ்சிநாத அய்யர் என வழிப்போக்கர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டார். பிரேதத்தின் சட்டைப் பையிலிருந்து பல கடிதங்கள் எடுக்கப்பட்டன. அதில் வாலிபர்கள் • அரசியல் புரட்சியில் ஈடுபடவேண்டுமென்ற வேண்டுகோளும், செயலாற்றும் திட்டங்களும் எழுதப்பட்டிருந்தன.

இந்தக் கொலைக்குப் பிறகு போலீஸார் தீவிரமாகப் புலன் விசாரித்து கல்கத்தாவில் வாசம் செய்துவந்த தஞ்சை ஜில்லா எருக்கூர் நீலகண்ட பிரம்மச்சாரி, தென்காசி டி. எஸ். சிதம்பரம் பிள்ளை ('தினசரி' ஆசிரியர் திரு. டி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளையின் தமையனார்) உள்பட மொத்தம் பதினான்கு பேர்களைக் கைது செய்தனர். திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, செங்கோட்டை ஆகிய விடங்களில் இரகசிய சங்கங்களை நிறுவியதாகவும், ஒரே சமயத்தில் தமிழ்நாட்டில் பலவிடங்களில் பலாத்காரப் புரட்சியை உண்டுபண்ண சதி செய்ததாகவும் இவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டது. இவ்வழக்கு செஷன்ஸ் கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டு ஒன்பது பேர்களுக்குப் பலவித தண்டனைகள் விதிக்கப்பட்டன. ஐவர் விடுதலை பெற்றனர்.

# அரசியல் துறவு

சிதம்பரம் பிள்ளையவர்கள், தமது தண்டனைக் காலத்தைக் கோயம்புத்தூர், கண்ணனூர் சிறைகளில் கழித்துவிட்டு, 1912-ம் ஆண்டு டிசம்பர் மாதம் விடுதலை யடைந்தார். பின்னர் சென்னையில், மைலாப்பூர், சிந்தாதிரிப்பேட்டை, பெரம்பூர் ஆகிய பகுதிகளில் பல ஆண்டுகள் வசித்து வந்தார். சிதம்பரனார் சிறை மீண்டதும், சுப்பிரமணிய சிவாவைத் தவிர, இவரை வாவென் றழைப்பார் ஒருவருமிலர். பல ஆண்டுகள் சிறைக் கொடுமைகளை அனுபவித்துவிட்டு வெளிவந்த சிதம்பரனாரைக் கண்டதும், "அப்பா சிதம்பரம், வந்தாயா!" என்று அன்புடன் அணைத்துக் கொண்டார் சிவா. இதுவன்றோ நட்பு!

ராஜத் துவேஷக் குற்றத்திற்குத் தண்டனை பெற்றதன் காரணமாக, 'வக்கீல் சன்னத்து' பறிமுதலாயிற்று. வருவாய்க்கு வேறு வழியின்றித் திண்டாடினார். அந்நாளில் தமக்குற்ற கஷ்டத்தைக் குறித்துத் தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதமொன்றில்,

வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்
தந்த சிதம்பரமன் தாழ்ந்தின்று—சந்தமில்வெண்
பாச்சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகிறான்
நாச்சொல்லும் தோலும் நலிந்து.

எனக் கூறுகின்றார். சிறைக்கஞ்சாத அவர் நெஞ்சம் வறுமையை நினைந்து வாடியது. இவ்வறுமையிலும் கூட பிள்ளையவர்கள் பொதுநலப் பணியில் ஈடுபடத் தயங்கவில்லை. பெரம்பூர் ரயில்வேத் தொழிலாளர் சங்கத்தின் உபத் தலைவராக இருந்து அவர்களது நலனைக்கோரி பாடுபட்டார். ஏற்கனவே பறிக்கப்பட்ட 'வக்கீல் சன்னத்து' நீதிபதி இ. எஸ். வாலஸ் என்பவரின் பேருதவியால் திரும்பக் கிடைத்தது. பின்னர் சில காலம் கோயில்பட்டியில் தங்கி வக்கில் தொழில் புரிந்து, மீண்டும் தூத்துக்குடியை அடைந்தார்.

•

கிலாபத் அநீதி, பஞ்சாப் படுகொலை, உதவாக்கரையான மின்டோ—மார்லி சீர்திருத்தம் ஆகியவைகளை எதிர்த்து பிரிட்டிஷ் சர்க்காருடன் ஒத்துழையாமைப் போர் துவக்க வேண்டுமென காந்தியடிகள் கருதினர். அதற்கான திட்டமொன்றையும் தயாரித்துத் தேசத்தினரின் முன்பாகச் சமர்ப்பித்தார். சட்டசபை, கலாசாலை, நீதிஸ்தலம் ஆகியவைகளைப் பகிஷ்கரிப்பதே அத்திட்டத்தின் முக்கிய அம்சம்.

•

ஒத்துழையாமைத் திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவு கூறுவதற்காக, 1920-ம் ஆண்டு கல்கத்தா நகரில் விசேஷ காங்கிரஸ் மகாசபை கூடியது. இதற்குப் பிள்ளையவர்களும் பிரதிநிதியாகச் சென்றிருந்தார். ஒத்துழையாமைக் கொள்கை இவருக்குப் பிடிக்கவில்லை. அதன் சகல அம்சங்களையும் எதிர்த்தார். சுருங்கக்கூறின், காந்தியடிகளின் தலைமையிலேயே சிதம்பரனுக்கு நம்பிக்கையில்லை. விசேஷ காங்கிர

ஸில் காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்திற்கு பலமான எதிர்ப்பிருந்தும், அதிகப்படியான வாக்குகளால் தீர்மானம் நிறைவேறி விட்டது. பிள்ளையவர்கள் சென்னைக்குத் திரும்பியதும், ஒத்துழையாமைத் திட்டத்தின் பயனற்ற தன்மையை விளக்கிப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டுவிட்டு காங்கிரசிலிருந்து விலகிவிட்டார். ஒத்துழையாமையைப் பற்றி பிள்ளை கூறுவதாவது :—

"நாம் அடைய விரும்பும் நமது உரிமைகளில் எதையேனும் நமது இராஜாங்கத்தார் நமக்குத் தந்தாலும், தர மறுத்தாலும், நாம் அவருக்கு வந்தனம் கூறி நமது தேச நிர்வாக விஷயத்தில் அவரோடு "ஒத்துழைத்தல்" வேண்டுமென்று நமது கிழவர்கள் (மிதவாதிகள்) கூறுகின்றனர்."

"நாம் அடைய விரும்பும் நமது உரிமைகள் அனைத்தையும் ஒருங்கு நம் இராஜாங்கத்தார் நமக்குத் தரும் வரையில் நாம் அவரோடு நமது தேச நிர்வாகவிஷயத்தில் ஒத்துழைக்க மறுக்கவேண்டுமென்று நமது தற்காலத் தலைவர்கள் (காந்தியடிகளும் அவரைப் பின்பற்றுவோரும்) கூறுகின்றனர். இந்த "ஒத்துழையாமை" தின்பண்டம் முழுவதும் தமக்குத் தரும்வரையில் அதன் ஒரு பகுதியை ஏற்காது தாய் தந்தையரோடு கோபித்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் செயல் போன்றது."

"நாம் அடைய விரும்பும் நமது உரிமைகளில் எதையேனும் நம் இராஜாங்கத்தார் நமக்குத் தருவதாயிருந்தால் அதற்காக நாம் அவர்க்கு வந்தனம் கூறி அவரோடு உடம்பட்டு உழைத்த லும், எதையேனும் அவர் நமக்குத் தர•மறுப்பின் அது விஷயத்தில் நாம் அவரோடு உடம்படாது மாறுபட்டிருத்தலும் வேண்டுமென்றே நாம் விரும்புகிறோம். இச்செயல் தமக்குரியவற்றைத் தந்தபோது உவந்தும், தராதபோது வெகுண்டும் நிற்கும் காளையர் செயல்போன்றது. சுருங்கக் கூறின், "ஒத்துழைத்தலும், ஒத்துழையாமையும்" ஏக காலத்தில் நிகழவேண்டுமென்பதே நமது அவா."

மீண்டும், 1927-ம் ஆண்டு இவர் காங்கிரசில் பிர வேசித்து, அவ்வாண்டு நடைபெற்ற சேலம் ஜில்லா மூன்றுவது அரசியல் மகாநாட்டில் தலைமை வகித்தார். எனினும், யாது காரணத்தாலோ அதன் பின்னர் அவர் காங்கிரஸுடன் தொடர்பு வைத்துக் கொள்ளா மலே இருந்துவிட்டார்.

# குணாதிசயங்கள்

அன்பும், அருளும், உழைப்பும், ஊக்கமும், கொடையும் இவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன. நம் நாடு விடுதலை பெறவேண்டின் உடல், பொருள், உயிர் அனைத்தையும் தியாகம் செய்யச் சிலரேனும் முன் வரவேண்டுமென்பதே இவரது கருத்து. "உடல், பொருள், ஆவி; உடல், பொருள், ஆவி" என்ற பல்லவியை வீணாக எல்லோரும் பாடுகின்றனர். உண்மையில் உடலையும், பொருளையும், ஆவியையும் நாட்டின் பொருட்டு வருத்திக் கொண்டார் சிதம்பரப் பெரியார். "வறுமையை நீக்கு," "உரிமைக்குப் போரிடு," "சிறைக்குச் சிறிதும் அஞ்சாதே" என்பன அவர் கொள்கை. காந்தியடிகள் ஆதிக்கம் காங்கிரஸில் வலுத்த பிறகு, கருத்து வேறுபாட்டால் விலகி அஞ்ஞாதவாசம் புரிந்தாரே யன்றி, அந்நியக் கட்சி எதிலும் சேர்ந்தாரில்லை. ஏன்? அவர் விரும்பியதெல்லாம் நாட்டின் விடுதலை ஒன்றே. அவ்விடுதலை எவ்வழியில் எவர் மூலம் வந்தாலென்ன?

"எழுமை எழுபிறப்பு முள்ளுவர் தங்கள் விழுமந் துடைத்தவர் நட்பு" என்னும் பொய்யா மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர் இவர். சுதேசிக் கப்பல் கம்பெனியின் வளர்ச்சியில் ஊக்கங் காட்டி உதவிய தூத்துக்குடி ஆறுமுகம்பிள்ளையின் பெயரைத்

தமது பிள்ளைகளில் ஒருவருக்கு வைத்தார். ராஜத் துவேஷக் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனையடைந்த தன் காரணமாக இழந்துவிட்ட தமது வக்கில் சன்னத்தைத் திரும்ப வாங்கிக் கொடுத்த நீதிபதி வாலஸ் துரையின் பெயரை மறவாது, தமது மற்றொரு புதல்வனுக்கு வாலீஸ்வரன் என்று நாமஞ் சூட்டினார். தமக்கு அவ்வப்போது வேண்டிய பொருளுதவி புரிந்துவந்த வேதியப் பிள்ளையின் ஞாபகார்த்தமாகத் தமது மகளுக்கு, வேதவல்லி என்று பெயர் வைத்தார். இவ்வாறு பல்லாற்றாலும் உதவி புரிந்த பலருக்கும் பிள்ளை தமது நன்றியைச் செலுத்தியுள்ளார்.

சிதம்பரச் செம்மல் இல்வாழ்க்கையை இனிது நடாத்திய நாளில், தம்மை நாடிவரும் எளியவர்க்கு இல்லையென்னாது ஈந்து வாழ்ந்தார். ஈகையும், இரக்கமும் பிள்ளையவர்களிடம் பொலிந்து விளங்கின. பிறர் துன்பங் கண்டால் மனம் பொறார், "இடும்பையாலிளைக்கின்றேன்" என்று எவர் வாயினின்று கேட்பினும் தம் கையிலிருப்பின் தமக்கென வேண்டாது தாராள குணத்துடன் வழங்குவார். ஒருநாள், ஒருவர் பிள்ளையவர்களை யணுகி என் குழந்தைக்கு முகூர்த்தம் வைத்தாய்விட்டது; கையில் ஒரு காசும் கிடையாது. ஓராயிரம் ரூபாய் தேவையிருக்கும்; எப்படியாவது கொடுத்துதவவேண்டும் எனக் கவிமூலமாய் வேண்டினார். பிள்ளை, அப்போது தம்வசமிருந்த ஓராயிரம் ரூபாயையும் உடனே கொடுத்து உதவிபுரிந்தார். இவ்வாறே இவரது உதவியைப் பெற்ற புலவர் பலர், "நன்னூர்ப் பழுத்த நற்றருவை நிகர் கரத்தாய்"

என்றும், "இருவருடம் போருடம்பா யிருக்குமர னடி பரவி யிரப்போர்க் கெல்லாம், தருவருடம் போலுத வுஞ் சிதம்பர சம்பன்னு" என்றும், "அன்னதானப் பிரபென்று யாவர்களும் கொண்டாடுங், கன்னன் சிதம்பரவேள்." என்றும், "செப் பலேமா முலேவிழியார் மடல்வரையுஞ் சிதம்பரவேள் தீரங்கொண்டு, கப்பலே யப்பலேமீது தானடத்திப் பெரும்புகழைக் கைக் கொண்டானே" என்றும் பலவாறு புகழ்ந்து பாடி யுள்ளனர்.

தன்னல மறுத்தலும் பிறர் நலம் பேணுதலும் பிள்ளை யவர்களின் பிறவிக் குணம். தம்முடன் சிறைபட்ட சிவாவைச் சிறையில் விட்டுத் தாம் மட்டும் ஜாமீனில் வெளிவர மறுத்ததும், சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு விலகிக் கொண்டால் லக்ஷம் ரூபாய் தருவதாக அந்நியக் கம்பெனியார் கூறியதை ஏற்க மறுத்ததும் எதனுல்? தன்னலமற்ற தன்மையாலன்றே? இவர் தேசத்தின் பொருட்டுத் தம் கைப்பொருளையும், வரு வாயையும் இழந்து பரம ஏழையாக வாழ நேர்ந்ததுபோதும் பிறர்நலம் பேணுதலே விட்டொழித் தாரில்லே. ஒத்துழையாமைக் காலத்தில் கோயில்பட்டி யில் வாழுகையில், சென்னை திரு. எம். எஸ். சுப்பிர மணிய ஐயர் முதலியோர்மீது நடைபெற்ற அரச நிந்தனை வழக்கில், யாதொரு பிரதிப் பிரயோஜனத்தை யும் கருதாது எதிர் வழக்காடினுர்.

துப்பாக்கிப் பிடித்த சிப்பாயை கண்டால் 'அப்பா' என்றேடித் தப்பாது தலே மறைத்துக்கொள்ளும்

இயல்புள்ள காலத்தில்—'அடி, அம்மா! வெள்ளைக் காரனுக்கு விரோதமாமே!' என்று விதிர் விதிர்க்கும் காலத்தில், பிள்ளைவர்களின் பெயர் ஒன்றே வெள்ளை யரிடையே பேரச்சத்தை உண்டாக்கிற்று. "பிள்ளை யின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட் டால், செத்த பிணம் உயிர்த்தெழும்; அடிமைப்பட்ட தேசம் ஐந்து நிமிடங்களில் விடுதலை பெறும்; புரட்சி ஓங்கி எழும்" என, இவரைத் தண்டித்த நீதிபதி பின்னே கூறினரென்றால் சிதம்பரனாரின் வீரம் செப்புந் தரத்ததோ?

பிள்ளையவர்கள் இம்மண்ணுலகை விட்டுப் பிரியுந் தறுவாயில், அதாவது 1936-ம் ஆண்டிலேயே, "கூடிய சீக்கிரத்தில் உண்டாகும் உலக யுத்தத்தின் மூலம் இந்திய நாடு சுதந்திரம் எய்துவது திண்ணம்" என்று கூறிப் போனார். இவரது ஆழ்ந்த அரசியல் அறிவையும், கனிந்த நாட்டுப் பற்றையும் என்னென்று கூறுவது! இவரது வாக்குப் பொய்க்காதிருக்க இறைவன் அருள் புரிவானாக!

# தமிழ்த் தொண்டு

சிதம்பரம் பிள்ளை, தமிழிடம் மிக்க அன்புகொண்டிருந் தார். ஓய்ந்த நேரங்களில் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்து வந்தார். இவர் சங்க இலக்கிய, இலக்கணங்களில் வல்லவர்; உண்மை உரைகாணும் உரம் பெற்றவர் ; மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்.

இவர் தமிழில் சொற் சுவை, பொருட் சுவை கனிந்த பாக்கள் பல இயற்றியுள்ளார். கோயம்புத் தூர், கண்ணனூர் சிறைகளில் பிள்ளையவர்களின் கைகள் கல்லுடைத்ததோடு நிற்கவில்லை ; கவிகளும் எழுதின. சிறையிலிருக்கையில் தமக்குற்ற இன்னல்களைக் குறித் துத் தந்தைக்கும், தம்மைப் பிரிந்தமைக்கு வருந்த வேண்டாமென ஆறுதல் கூறி அன்னை, மனைவி, நண் பர்கள் முதலியோருக்கும் எழுதிய கவிகள், கேட் போரின் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தன வாகும். மற்றும், ஈகை, அன்பு, உண்மை முதலிய ஒழுக்கப் பாக்களும், பதி பசுபாசச் செயல்கள், கடவுள் உண்மை, கடவுளுக்குக் காவற்றொழிலை அளித்தல் முதலிய ஞானப் பாக்களுமாக தனிப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். மேலும், அவர் இயற்றிய, ‘மெய்

யறிவு,' 'மெய்யறம்' போன்ற நீதி போதனை நூல்கள் யாவும் பண்டைக்கால நீதி நூற்களுக்கு நிகரானவை யாகும்.

பிள்ளையவர்கள் அநேகருக்குத் தமிழ்க்கல்வி போதித்து வந்தார். தாம் சொல்லிக் கொடுத்தவற்றை மறுநாள் ஒப்புவிக்க வேண்டும். இன்றேல் வேறு பாடம் நடத்த மாட்டார். இவரிடம் பாடம் கற்றுக் கொள்வது எல்லோருக்கும் எளிதல்ல. ராஜாஜி அவர்கள் சிதம்பரனாரிடம் திருக்குறள் பாடங் கேட்டபோது, இவரது நிபந்தனைகள் பிடிக்காமையால், "எனக்குப் பாடஞ் சொல்லித் தரும் பொறுமை தங்களுக்கில்லை; தங்களிடம் பாடங் கேட்கும் பொறுமை எனக்கில்லை" எனக் கூறி விடைபெற்றுக் கொண்டாராம். இவர் திருக்குறளைப் பெரும்பாலும் மனக்குடவர் உரை கொண்டே விளக்குவார். பரிமேலழகர் கூறியுள்ள வேண்டா உரையைக் கண்டிப்பார்; அவ்விருவர் உரையும் பொருந்தாவிடில் தம் உரையைச் சொல்லுவார். தமிழ்க்கல்வியில் ஆர்வமுடையோர்க்கு உண்டியுதவியும், உறுபொருள் கொடுத்துங் கற்பிப்பார். இதற்குச் சுவாமி சகஜானந்தர் அவர்களே சான்றாகும்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்ப்பதில் பிள்ளையவர்கள் பெரிதும் ஊக்கங் காட்டி உழைத்து வந்தார். பிரசித்தி பெற்ற ஆங்கிலப் பண்டிதரான ஜேம்ஸ் ஆலன் அவர்களின் ஆங்கில நூற்களை, 'மனம்போல வாழ்வு,' 'அகமே புறம்,' 'வலிமைக்கு மார்க்கம்' என்ற பெயர்களுடன் தமிழில்

வெளியிட்டுள்ளார். திருக்குறள்—அறத்துப்பாலை ஆங்கில மொழியில் பெயர்த்துள்ளார்.

செந்தமிழ் வல்ல சிதம்பரனுர் அரிய தமிழ் நூல்கள் பலவற்றைத் தமிழ் மக்களுக்கு உதவுமாறு பதிப்பித்துள்ளார். அவைகள், திருக்குறள்—மணக்குடவர் உரை—அறத்துப்பால்; தொல்காப்பியம் எழுத்து—சொல்—பொருள் இளம்பூரணம்; இன்னிலை ஆகிய நூற்களாகும்.

# மீளாப் பிரிவு

1936-ம் ஆண்டில் சிதம்பரனுர் நோய்வாய்ப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகப் படுக்கையாய்க் கிடந்தார். எவ்வளவோ சிகிச்சைகள் செய்தும் பயனில்லை. "இனி பிழைப்பது அரிது" என்ற நிலைமை ஏற்பட்டதும், மனைவி, மக்கள், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவரது பக்கலிலிருந்து பணி புரிந்தனர். யாரிருந்தும் என்ன பயன்? நவம்பர் மாதம் 18-ந் தேதி நள்ளிரவில் தேசபக்தர் வ. உ. சிதம்பரனுர் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகெய்தினுர். "சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்து துஞ்சிடேன்" என்று கூறிய வாய் அடைத்தது. ஏழை மக்களின் இன்னல் கண்டு நீருகுத்த கண்கள் மூடின. தமிழ் மணங் கமழும் திருமேனி பிணமானது.

தமிழ் நாட்டின் தனிப்பெருந் தலைவர் சிதம்பரனுரின் மரணச் செய்தி திருநெல்வேலி, தூத்துக்குடி யெங்கும் பரவியது. அன்றொரு நாள், 'சிதம்பரனுர் சிறைப் பட்டார்' என்ற செய்தியைக் கேட்டதுமே வெறி கொண்டு குழப்பம் விளைவித்த மக்கள் இவரது மீளாப் பிரிவைச் சகிப்பரோ? பிள்ளைபால் அன்பு கொண்ட மக்கள் அவரது இல்லத்தை யடைந்து தங்கள் வீரத் தலைவரை, அரசனுக்கும் தலை வணங்காத் ஆண்மை

யாளரை, கடலிலே கப்பலோட்டிய கருணையாளரை புலவர்களின் வறுமை தீர்த்த புலவரைத் தரிசித்துத் தங்கள் கடைசி வணக்கத்தைச் செலுத்தினர்.

சிதம்பரனார், தமது ஆவி பிரியும் முன்னர் கவியரசர் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டு உள்ளம் பூரித்தார்.

" சாவதற்கு முன்னர் சுதந்தரத்தைக் காணக் கொடுத்து வைக்காமற் போனேனே " என்று கண்களில் நீர் ததும்பக் கூறினார்.

பிள்ளையவர்கள் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்னர் அவரது தோழரான தூத்துக்குடி திருவாளர் மாசிலாமணிப் பிள்ளை அவர்கள் சிதம்பரம் பிள்ளையின், உடல்நலம் விசாரிக்க அவரது இல்லஞ் சென்றார். அப்போது அவர் நன்பரை நோக்கி " தம்பி, பசிப்பிணியின் கொடுமை இன்னதென்று அனுபவ வாயிலாக நீ அறிந்திருக்கிறாயா? என்று கேட்டார். அதற்கு மாசிலாமணிப் பிள்ளை 'அண்ணா, அந்த அனுபவம் எனக்குக் கிடையாது,' என்று பதில் கூறினார். " சரி நான் சொல்லுகிறேன் கேள் " என்று சிதம்பரனார் பின்வருமாறு கூறினார் :—

அக்காலத்தில் கம்பர் திக்விஜயஞ் செய்த போது, ஒரு கிராமத்தில் தங்க நேரிட்ட சமயத்தில் ஒரு நாள் அதி காலையில் படுக்கையை விட்டு எழுந்து வெளியே சென்றார். அப்போது, ஒரு வீட்டினின்று இளம் பெண்ணின் அழுகுரல்

கேட்டது. அவ்வழுகையினூடே ஒப்பாரியாகச் "சில் லென்று பூத்த" என்ற வார்த்தைகள் அவள் வாயினின்றும் வெளிக் கிளம்பியதும் அடுத்த வார்த்தைகள் வெளிவராதவாறு அவள் வாயை யாரோ பொத்தி அழுகையை அடக்கிய தாகத் தெரிந்தது. அதை அறிந்த கவிச் சக்கர வர்த்தி கம்பர், "சில்லென்ற பூத்த" என்ற வார்த்தைகள் கவிச்சுவை வாய்ந்த தாயிருந்தமை யால் அதன் பின்னர் அவள் சொல்ல விரும்பியது எதுவாக விருக்கலாமென்பதை அறிய ஆவல் கொண்டார். ஆனால் அவரது கற்பனைக்கு அது எட்டவில்லை. அக்கம் பக்கத்து வீட்டார்களை அணுகி தமது மன நிலையைத் தெரிவித்து அதைத் தெரிந்து கொள்ள என்ன செய்யலா மென்று கேட்டார். அவர்கள் அந்த அழுகுரல் சமீபத்தில் தன் நாயகனை யிழந்த இளம் விதவை யினுடைய தெனவும், நாயகனை நினைந்து அதி காலையில் விழித்தெழுந்து அழுது வருவது வழக் கம் எனவும், அங்ஙனம் அழுவதை நிறுத்துவது பக்கத்திலிருக்கும் வயதான பெண்களின் கடமை எனவும் தெரிவித்தனர். மேலும் மறு தினமும் அதிகாலையில் அவ்விடஞ் சென்றால் அவள் திரும்ப அழலாமெனவும், அப்போது அதே ஒப்பாரியைச் சொல்லுவாளென்றும் கூறினர். கவிச் சுவையில் ஆர்வங் கொண்ட கம்பர் மறுதினமும் அங்கே சென்று அந்த வீட்டின் தெருத்திண்ணையில் தங்கி யிருந்தார். வழக்கம் போல அழுகைக் குரல் ஒப்பாரியுடன் வெளிக்கிளம்பிற்று. இவரது

அதிர்ஷ்ட வசமாக அவள் வாயைப் பொத்த ஆட்கள் சற்றுப் பின்தங்கி வர நேரிட்டது. எனவே அவ் விதவைப் பெண்ணனவள் ஒப்பாரியில்:—

" சில்லென்று பூத்த சிறு நெருஞ்சில் காட்டினுள்ளே
நில்லென்று சொல்லி நிறுத்தி வைத்துப் போனீரே "

என்று பெருமூச்செறிந்து புலம்பி யழுதாள்."

இந்த வரலாற்றைக் கூறி முடித்ததும், சிதம்பரனாரின் கண்களினின்றும் நீர் பெருகியது. "இம்மாதிரி கண்ணீருகுத்து கதறியழுது தங்கள் காலத்தை கடத்தி வரும் குடும்பங்கள் நம் நாட்டில் கோடி கோடியாக மலிந்து கிடக்கின்றனவே! அவர்கள் துயர் என்று தீருமோ" எனக்கூறி விம்மி விம்மி அழுதார். நண்பர் திரு. மாசிலாமணிப் பிள்ளை சிதம்பரனாரின் செயல் கண்டு திடுக்கிட்டு, "அண்ணா! உங்கள் உடல் வலி குறைந்து படுக்கையிலிருக்கும் சமயம் இவ்வாறு கவலைப்படுவது கூடாது, உடல் அதிர்ச்சியுறும்" என ஆறுதல் கூறித் தேற்றினார்.

# சிதம்பரனார் வாழ்க

சிதம்பரம் பிள்ளை நாட்டின் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து செய்த தியாகம் கொஞ்சமன்று. அவரது தேச பக்தி களங்கமற்றது. சிதம்பரம் பிள்ளை, தேச பக்தர்களுக்கு மதிப்பற்ற காலத்தில், தேச பக்தராய்த் திகழ்ந்தார். எவரும் காணாத் தனியிடத்துங்கூட 'வந்தே மாதரம்' என்று உச்சரிக்கவும் பயந்த காலத்தில், ஆங்கிலக் கலெக்டர் விஞ்சின் முகத்தெதிரே, "வந்தே மாதரம் என்றுயிர் போம் வரை வாழ்த்துவேன்" என்று அஞ்சாது கூறினார். பாமரமக்கள் காங்கிரஸில் புகாத அந்நாளில், ஆங்கிலத்தில் பேசுவதே பெருமை; தமிழில் பேசுவது சிறுமை என்று எண்ணிய காலத்தில், பாமர மக்களைக் கூட்டி வைத்துப் பசுந்தமிழில் பேசிச் சுதந்திரப் போருக்குத் தமிழர்களைத் தட்டி யெழுப்பிய பெருமை சிதம்பரனாரின் தனியுரிமை.

வீரர் சிதம்பரனாரை வட நாட்டார் அறிந்து வைத்த அளவு தமிழ் நாட்டார் தெரிந்து வைக்க வில்லை எனத் துணிந்து கூறலாம். இதற்குச் சான்றாக சில சம்பவங்களை இங்கு எடுத்துக் கூறுவோம்.

சூரத் காங்கிரஸின்போது பிரதிநிதிகளின் விடுதியில் மகான் அரவிந்தர், லாலா லஜபதி போன்ற தீவிர

வாதத்தலைவர்களும், வேறு பல பிரதிநிதிகளும் உட்கார்ந்திருந்தனர். அச்சமயத்தில் அரவிந்தர், அங்கிருந்தவர்களை நோக்கி Where is my Pillai?" (என் பிள்ளையவர்கள் எங்கே?) என்று கேட்டார். யாவரும் சற்றுத் திகைத்திருந்தனர். உடனே அரவிந்தர் விளக்கமாக "அவர்தான், புகழ் பெற்ற தேச பக்தர் தூத்துக்குடி சிதம்பரம் பிள்ளை," என்றார். எல்லோருக்கும் இவ்வார்த்தைகள் தூக்கி வாரிப் போட்டதைப் போலிருந்தன. பிள்ளையவர்களும் அங்கு வந்து சேர்ந்தார். அரவிந்தர் அவரை அன்போடு அணைத்துக் கொண்டார்.

1935-ம் ஆண்டில், காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் தூத்துக்குடிக்கு வந்திருந்த போது, பிள்ளையவர்கள் நோயுற்றிருப்பதாகக் கேள்விப்பட்டதும், தாமே, சிதம்பரனாரின் இல்லஞ்சென்று கண்டு பேசினார். "சிதம்பரம் பிள்ளை வாழும் தூத்துக்குடிக்கு வரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் சிறை சென்றதாகப் பத்திரிகைகளில் பார்த்துத் தேசாபிமான ஆர்வங்கொண்டவர்களில் யானும் ஒருவன்" என்று ராஜேந்திரர் அன்று மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் கூறினார்.

பாரதியாரின் சுதந்திரப் பாட்டே அவரது காதுகள் கேட்ட கடைசிப் பாடல். அவர் தமது படுக்கையைச் சூழ்ந்திருந்த தேச பக்தர்களுக்கே தமது கடைசி வணக்கத்தைச் செலுத்தி விடை பெற்றுக் கொண்டார். சிதம்பரனார் தமது இறுதிக் காலத்திலும் காண விரும்பியது சுதந்திரம், கேட்க விரும்பியது பாரதியாரின்

பாடல், வணங்க விரும்பியது தேச பக்தர் கூட்டம். என்னே அவரது பக்தி!

"வெள்ளையரே வெளியேறுங்கள்" என்று இன்று நாடு முழுவதும் கிளம்பும் கோஷத்திற்கு, நமது தமிழகத்தின் முதல் தலைவர் சிதம்பரனாரே மூல புருஷர் என்பதை நீதிபதி பின்ஹேயும், கலெக்டர் விஞ்சும் கூறி யிருப்பதைக் கொண்டே அறியலாம்.

வீரர் சிதம்பரனார் நம்மை விட்டுப் பிரிந்து இன்று பத்து ஆண்டுக ளாகின்றன.

அன்று சிதம்பரனார் செய்த சேவையால் பதினாயிரக் கணக்கான தமிழ் வீரர்கள் தோன்றியுள்ளனர். அவர் துவக்கி வைத்த சுதந்திரப் போர் தொடர்ந்து நடை பெறுகிறது. அவர் ஏற்றி வைத்த தியாக விளக்கு அணையாது சுடர் விட்டெரிகிறது. அந்த விளக்கொளி யில் ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்கள் விரைவாக முன்னேறுகின்றனர்.

அவ்வீரர்கள் "எங்கள் தலைவருக்கு இரண்டு ஜன்ம தண்டனை விதித்த அந்நிய ஆட்சியை எங்கள் ஜன்மத் திலேயே தொலைத்து விடுவோம்" என்று கர்ஜிக்கின் றனர். தங்கள் தலைவர் காணக்கொடுத்து வைக்காத சுதந்திரத்தை தாங்கள் கண்டே தீருவதென சபதம் செய்கின்றனர். சிதம்பரனாரின் ஆவி அந்த வீரர்களுக் குத் துணையாக நிற்குமாக! வாழ்க சிதம்பரனார் நாமம்! வெல்க சுதந்திரப் புரட்சி!

598.